Registered as a News Paper in Sri Lanka


பக்கம் 24 ரூபா 30.00

மார்ச் 10-16, 2011

PUBLIC LIBRARY

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 902



## மையம் கொள்கிறது அரசியல் சூறாவளி



### இலங்கை தமிழரசுக் கட்சி VS தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு



## கடாபிக்கு லிபியா ஒரு முள்ளிவாய்க்கால்

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு




## சிவலிங்கங்கள்

சிவ வழிபாட்டிற்குரிய சிவலிங்கங்கள் பலவகையானதும், அவை பலவகையினராலும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் ஆன்மாக்களுக்கு அருளும் லிங்கமாகப் 'பார்த்தலிங்கம்' என்ற லிங்கம் கொள்ளப்படுகின்றது. இந்த லிங்கத்தை ஸ்தாவரலிங்கம் அல்லது திரலிங்கம் எனும் நாமங்கள் கொண்டு அழைக்கப்படுகிறது.

எங்கிருந்தும் எந்த இடத்திலிருந்தும் தானாக அருவுருவ வடிவாக வெளிப்படுத்துவது 'சுயம்புலிங்கம்' ஆகும். இதைவிட, கணங்களாலும், சிவகணாதிபதிபர்களாலும் உருவாக்கப்பட்டு, வழிபாடு செய்யப்படுவது 'காணலிங்கம்' என்பது ஆகும்.

இதேபோல் ' தெய்வீகலிங்கம்' எனப்படுவது தேவர்களாலும் மற்றும் மகரிஷிகள்,முனிவர்களால் செய்யப்பட்டது. 'ஆரிடலிங்கம். எனவும், மானிடர்களின் வழிபாட்டுக்காக நிறுவப்பட்டது. "மானுடலிங்கம்' எனவும் அழைக்கப்படுகிறது.

இத்தோடு அரிசி, மா, சர்க்கரை, சந்தனம், ஆற்றுமணல், அன்னம், கோமயம் உட்பட மொத்தம் வேறு பன்னிரண்டு பொருட்களுள் ஏதேனும் மூன்றினால் செய்யப்பட்டு, பூஜித்தபின்பு நீரில் கரைத்துவிடும் லிங்கமானது 'கணிகலிங்கம்' என்று கூறப்படுகிறது.

இப்படியான சிவலிங்கங்களைப் பூஜித்து வழிபாடு செய்வதற்கு சிவராத்திரி தினம் நன்மை பயக்கும் எனச் சொல்லப்படுகிறது.

-அனந்தநாராயணன், கைதடி.

## உபத்திரவங்கள் அவசியம்

வாழ்க்கையில் நாம் ஒன்றின் மீது பற்றுதல் வைப்பதற்கு உபத்திரவங்கள் அவசியமாகின்றன. அதன் நிமித்தம் அதன் பற்றுணர்வும் பலமடங்காக அதிகரிக்கின்றன.

துன்பங்கள், துயரங்கள், இகழ்ச்சிகள், ஏமாற்றங்கள் எங்களுக்கு ஏற்படாதவிடத்து, நாம் வாழ்க்கையில் தூர்ந்து போகும் மணலைப்போல் தூரவாகிப் போய்விடுகிறோம்.

எம்மை எந்தச் செயற்பாடுகள்; சிறுமைப்படுத்தல்கள் ஒன்று சூழ்ந்து நிதம் நிதம் சின்னாபின்னப் படுத்துகிறதோ அதிலிருந்து நாம் விடுபடுவதற்கு ஏதோ ஒரு வகையில், ஒன்றின் மீது பற்றுதல் அல்லது விசுவாசம் கொள்ளுதல் தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. ஒரு மனக்கொள்கையோடு ஒன்றின் மீது நாம் உறுதியான பிடிப்போடு, வழுவாத வைராக்கியத்துடன் வாழுகையில் தான் அதற்கான வேலைவரும்போது விடுதலை கிடைக்கிறது. பன்னிரெண்டு வருடமாக வியாதியுடைய ஒரு பெண் இயேசு செய்யும் அற்புதங்களை அறிந்து அவர் மீது பற்றுதல் கொண்டு, அவரின் வஸ்திரத்தையாவது தொட்டால் நான் சுகமாகுவேன் என்று நினைத்து, அதன்படியே செய்து சுகமடைவது விசுவாச உச்சத்தின் வெளிப்பாடாகும். இதையே இயேசுவும் "மகளே உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. சமாதானத்தோடு வீட்டிற்குப் போ (மத்தேயு –9:22)" என்று கூறுவதிலிருந்து ஒன்றின் மீது நாம் விசுவாசம் கொள்வதற்கு உபத்திரவங்கள் அவசியம் என்பது புலனாகிறது.

சாமுவேல்-புதுக்குடியிருப்பு.

## கிருபை காட்டு!


கிருபையை எதிர்பார்க்கும் மனிதன் மற்றவர்களிடம் கிருபையுடன் நடந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் இவன் கிருபை செய்யப்படுவான். சிறுவர் மீது கிருபை காட்டாதவர்களும், பெரியவர்கள் மீது மரியாதை செலுத்தாதவர்களும் நம்மை (முஸ்லிம்களை)ச் சார்ந்தவர்களல்லர் – என்று ஏந்தல் நபி மணி (ஸல்–அம்) அவர்கள் அறிவுறுத்தி உள்ளார்கள்.

மனிதர்கள் மீது மாத்திரமின்றி, மற்ற அனைத்து வகைப்படைப்பினங்கள் மீதும் கிருபை காட்டுவதுதான் மனிதாபிமானதாகும்.

அங்கனம் கிருபை காட்டாமல் கடுமை காட்டினால் நாமும் கடுமை காட்டப்படுவோம். வல்ல அல்லாஹ்–நம்மைக் காப்பாற்றி அருள்வானாக!

ஆகவே , நாம் கிருபையுடன் பேசுவோம். கிருபையுடன் பழகுவோம். கிருபையுடன் சிந்திப்போம்!

முஹம்மது ஹஸனி கல்முனை-07




## சவால்

வாசக நெஞ்சங்களின் மனதில் எப்பொழுதும் நீங்கா இடம் பிடித்திருக்கிறாய் என்பதையிட்டு மகிழ்ச்சி கொள்கின்றேன். 901 முரசில் வெளியான 'லிபியா- கடாபி கிளர்ச்சி' எனும் கட்டுரை லிபியா நாட்டின் கிளர்ச்சியை மிகவும் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது. இவ்வாறு பல கட்டுரைகளும் சிறப்பாகவுள்ளது.

சி.வரதன்,கொக்குவில்.

## எதிர்பார்ப்பு

உறுதியுடனும், தெளிவுடனும் முரசில் அரசியல் கட்டுரைகள் பல தெளிவாக வந்துகொண்டிருக்கின்றது. இப்பொழுது பல தகவல்களை வழங்கி வருகின்றாய். இன்னும் தொழில்நுட்ப செய்திகளை நிறையவே தருவாயென நான் எதிர்பார்க்கின்றேன்.

எஸ்.சாரதா, வவுனியா.

## மாற்றங்கள் தேவை

வாரம் தோறும் வியாழன் உன் வரவுக்காய் காத்திருக்கிறேன். உன்னால் கொண்டுவரப்படும் ஆக்கங்கள் அனைத்தும் உன்னுடைய வாசகர்களாகிய எமக்கு எண்ணற்ற மகிழ்ச்சியை அழிக்கிறது என்றால் மிகையாகாது. உன்னில் பிடித்தது கவிதைப்போட்டி, தேன் கிண்ணம் என்பனவாகும். பற்பல மாற்றங்களோடு பல்லாண்டு காலம் உனது பணி தொடர என் இனிய வாழ்த்துக்கள்.

எ.எம்.சமீர, கம்பளை


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 1772, கொழும்பு,
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212221811
தொலை நகல் (Fax): 0212221811
ஈ-மெயில்: (E-mail):- thinamurasu@live.com


## கவிதைப் போட்டி இல.902



'எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி.22.03.2011

கவிதைப் போட்டி இல. 902
தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### இதுதான் வாழ்க்கை!

கையிலே புட்டு மூடி
கமக்கட்டிலே துணிமணி
தள்ளாடும் நிலையில்
எரிந்து வரண்ட இடத்தினிலே
என்னம்மா பார்க்கின்றீர்
எப்படி இருந்த எம் வீடு
இப்படி ஆகிவிட்டதே
என்றுநினைத்து கலங்காதே
இறைவன் எமக்கு
இன்னும் என்னென்ன
சோதனை செய்வானோ!

ராணிமகள் றெசிந்தா,
சங்கத்தார்வயல்.

### அவலம்

இன்னமும் நீறுபூத்த
நெருப்பாகவுள்ள நிலைமை!
எரிந்த வீட்டில்
எடுத்தது லாபமோ?
மனித வாழ்க்கை
இப்படித்தான் நகர்கிறது:
இவ்வுலகில்!
பார்த்தால் விசர்க்கோலம்
எல்லாம் காரிய
விசர்தானோ?

கதாகரன் யோணகான், மானிப்பாய்

### ஏக்கம்

கொடிய போரால்
உறவுகளைப் பிரிந்து
தெருவில் அநாதையாய்
அலைந்து திரியும்
இத்தாய்க்கு யார் தருவார்
அடைக்கலம்.

சு.ஜெயருபன், பருத்தித்துறை.

### பிடுங்கல்

போர் பிடுங்கிச் சென்றது
என் கணவரை
வெள்ளம் பிடுங்கிச் சென்றது
என் பிள்ளைகளை
இன்று சமாதானம் பிடுங்கிச்
செல்வதோ
என் பரம்பரை நிலங்களை.

அ.சந்தியோகோ, கண்டி.

### தீருமோ?

போர் தந்த அவலமென
புகையுமிடம் தெரிகிறது.
ஆர் உள்ளார் இங்கே?
எமை அரவணைப்பதற்கு.
இந்த இழிநிலையகலுமோ? எமக்கு
இனியொரு வழி பிறக்குமோ?

அன்பரசி, மயிலிட்டி.

### தவறிய பாதை

உறவு இழந்து
உறையுள் தரைமட்டமாகி
வாழ்வதற்கு ஏதிலியாய்-இவள்
புடைவையோடு போகிறாள்
வழி தெரியாத பாதை நோக்கி...

என்.சோபிதா, வவுனியா.

கவிதைப் போட்டி இல.899

## பாராட்டுக்குரியது



### புதிய பயணம்

இருந்த இடம்
எரிந்தாச்சு.
இடப்பெயர்வு
தொடங்கியாச்சு
அகப்பட்டதை
அள்ளிக்கொண்டு.
நடக்கிறாய் நீ
'அகதி' யென்ற
அவப்பெயர் சுமந்து.

பிரியாபரந்தாமன்,
கைவேலி.




## உங்கள் பக்கம்



### புதிய வீதியின் அவசிய தேவை

பருத்தித்துறையில் தும்பளை தெற்குக் கிராமத்தின் தெற்கு எல்லையாக இருப்பது வராத்துப்பளை-மாதனை வீதி. இதுகால வரைக்கும் அது மணல் வீதியாகவே உள்ளது. பிரதான வீதியாகத் தற்போது விளங்கும் இவ்வீதி மழைக்காலத்தின் போது வெள்ளவாய்க்காலாக விளங்குகிறது. மழை முடிந்ததும் மணல் பெருகி நடக்கவே முடியாத நிலையில் இருக்கும். வீதிகளில் மணல் அள்ளக் கூடாது என்று சட்டம் இட்டிருக்கையில், இவ்வீதியின் நிலை எப்படி இருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

இந்நிலையில் இவ்வீதியின் மருங்குகளில், கடந்த 90இற்கு முன்னர் இடம்பெயர்ந்த மக்கள் குடியேறி உள்ளமையும் இவ்வீதித் தேவைக்கு முக்கிய காரணமாகும். இது பற்றி பருத்தித்துறை பிரதேச சபையினருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ள போதிலும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென மக்கள் ஆதங்கமடைகின்றனர்.

இது ஒரு பாரிய நிதி ஒதுக்கீட்டின் மூலமே செய்யப்படவேண்டியது என்பது மக்களுக்குத் தெரியும். மக்களின் தேவைகளைப் பிரதேச சபைகள் கவனமெடுத்துச் செய்யவேண்டும் எனப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. எனவே இந்த விடயம் கவனிக்கப்பட்டு உரிய தரப்பினருடன் ஆலோசிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதே அவர்களின் பெரிய விருப்பமாகும்.

மக்களின் விண்ணப்பத்தின் பேரில் இவ்வீதிக்கு மின்சார வசதி செய்யப்பட்டுள்ளமைக்கு மக்கள் மிகுந்த நன்றிக்கடன் தெரிவிக்கின்றனர்.

வேலாயுதம், தும்பளை

# குவைத்தில் புதிய சட்டம் நடைமுறை

## ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் பாதிப்பு

**குவைத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய சட்டதிட்டங்களினால் ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் தொழிலை இழந்து நாடுதிரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.**

குவைத் அரசினால், தங்களது நாட்டில் தொழில் அனுமதி இன்றி சட்டவிரோத மான முறையில் தொழில் புரிந்துவருகின்ற வெளி நாட்டவர்களுக்கு எதிராகப் புதிய சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைவாக மார்ச் 01-30 ஆம் திகதி வரையான கால எல்லைக்குள் சட்டவிரோத மாகத் தொழில் புரிபவர்கள் நாட்டைவிட்டு வெளியேறு மாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

குவைத்தில் இருக்கும் இலங்கைத் தூதரகத்தின் தகவல்களின்படி 10,000 மேற்பட்ட இலங்கையர்கள் தொழில் அனுமதி இன்றி குவைத்தில் வேலை செய்து வருவதாகவும் அவர்கள் குறித்த கால எல்லைக்குள் தங்களது தொழில் அனுமதியை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் அல்லது இலங்கைக்குத் திரும்ப வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு வளைகுடா நாடுகளின் வெளிநாட்டு தொழிலாளர்கள் பற்றிய சட்டத்தின்படி, அந்த நாடுகளுக்குத் தொழில் அனுமதி பெற்றுச் செல்பவர்கள், தங்களுக்கு அனுமதி பெற்றுக்கொடுத்த தொழில் நிறுவனத்தை விட்டுவிலகி செல்லுதல் சட்டவிரோதமாகக் கருதப்படுகிறது. எனவே, தொழில் அனுமதி பெற்றுச் சென்ற நிறுவனங்களில் இருந்து வெளியேறி, வேறு நிறுவனங்களில் தொழில் புரிவோர் சட்டவிரோத குடியேற்றவாசிகளாகவே கருதப்படுவர்.

குவைத்தில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகத்தின் தகவல்களின்படி இதுவரை 4000 இற்கும் மேற்பட்டவர்கள் இலங்கை தூதரகத்தினை நாடித் தற்காலிக கடவுச்சீட்டுக்கு அனுமதித்துள்ளதுடன், வழங்கப்பட்டுள்ள கால எல்லைக்குள் நாட்டைவிட்டு வெளியேறி இலங்கை வருவதற்குத் தீவிரம் காட்டுவதாகவும் தெரிகிறது.

## காத்தான்குடியில் திவிநெகும

'திவிநெகும' எனப்படும் ஒரு மில்லியன் வீட்டுத் தோட்ட பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காத்தான்குடி பிரதேச செயலக பிரிவுக்கான வீட்டுத்தோட்ட ஆரம்ப வைபவம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் முஸ்ஸாமில் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் குணரட்ணம் உட்பட கிராமஉத்தியோ கத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு மரங்களை நாட்டி ஆரம்பித்து வைத்திருந்தனர்.

இத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் 345 கிழக்கு உத்தியோகத்தர் பிரிவிலும் தலா நூறு திட்டங்கள் அமுல்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அஞ்சல் மூல வாக்களிப்பு

உள்ளூராட்சித் தேர்தலுக் கான அஞ்சல் மூல வாக்களிப்பு கடந்த 08 ஆம் 09 ஆம் திகதிகளில் நடை பெற்றுள்ளது. இந்த உள்ளூ ராட்சி மன்றத் தேர்தலில் அஞ்சல் மூலமான வாக்களிப் பதற்கு 321,600 வாக்காளர் கள் தகுதி பெற்றுள்ளனர். கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 415,432 பேர் அஞ்சல் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். ஆனால் இம்முறை கணிசமானளவு அரசாங்கப் பணியாளர்கள் தேர்தலில் வாக்களிக்க விண்ணப்பிக்கவில்லை என தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்தத் தேர்தலில் வாக்களிக்கவுள்ளவர்களில் பெரும்பான்மையானவர்கள் முப்படைகள் மற்றும் காவல் துறையைச் சேர்ந்தவர்களென தெரிவிக்கப்படுகின்றது.

## தூதுவர்களின் செயற்பாடுகளில் அதிருப்தி
## விரைவில் புதியவர்களுக்கு வாய்ப்பு

வெளிநாட்டுத் தூதுவர்களாக நியமிக்கப் பட்டிருப்பவர்களில் செயற்பாடு திருப்தியளிக் காததையிட்டு அவ்வாறானவர் களை திரும்ப அழைத்துக் கொள்வது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்திவருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மேற்கத்தேய நாடுகள் சிலவற்றில் புலிகளின் ஆதரவாளர்களின் செயற்பாடுகள் காரணமாக அவற்றைக் கட்டுப்பாட்டுக் குள் கொண்டு வரும் நடவடிக்கைகளை முன்னெடுக்கு மாறு அரசாங்கம் அனைத்து தூதுவர்களுக்கும் பணிப்புரை விடுத்திருந்தது. இருந்தபோதும் இது முழுமையடையாத நிலையில் அரசு சில தூதுவர்கள் திருப்பியழைக்க முடிவு செய்திருக்கின்றது. அவ்வாறானவர்களுக்கு பதிலாக புதிய தூதுவர்களை நியமிப்பது குறித்து அரசாங்கம் ஆலோசனை நடத்தி வருகின்றது. அதன் போது தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கும் புதிதாக தூதுவர் நியமனங்கள் கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போதைக்கு வெளிநாட்டமைச்சில் பணிபுரியும் டீ.ரவீந்திரன் மற்றும் அசீஸ் உள்ளிட்ட இன்னும் பலர் அவ்வாறு புதிய தூதுவர்களாக நியமிக்கப்படலாம் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

## நிதி உதவி

பளை பொலிஸ் நிலையத் தில் பொதுமக்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் வகையில் பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நிதி உதவி வழங்கினார். பொலிஸ் நிலையத்தில் தளபாடங்கள் போதியளவு இல்லாமை மற்றும் பிரிவுகளுக்கான தனித்தனி அறைகள் இல்லாமை போன்ற காரணங்களால் பொதுமக்களும் பொலிஸ் அதிகாரிகளும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக ஏற்கனவே அமைச்சர் அவர்களுக்கு தெரிவிக்கப் பட்டிருந்த நிலையிலேயே இந் நிதி உதவி வழங்கப்பட்டது.

## ஆட்கடத்தலின் சூத்திரதாரி கைது

இலங்கை, இந்தியா மற்றும் இந்தோனேசியா போன்ற நாடுகளில் இருந்து அவுஸ்ரேலியாவிற்கு ஆட்களை கப்பல் மூலம் கடத்திவந்த நபர் ஒருவர் இந்தோனேசியப் பொலிஸா ரால் கைது செய்யப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தோனேசியாவில் உள்ள பாண்டுங் நகரில் வைத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கடல் வழியாக சட்டவிரோத மான முறையில் பல தமிழர்களை இவர் அவுஸ்திரேலியாவுக்கு கடத்திவந்தார் என்ற குற்றம் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளது. கடல் வழியாக செல்வதற்கு பணத்தைக் கொடுத்துவிட்டு காத்து நின்ற பலரையும் பொலிசார் கைது செய்துள்ளனர். தமிழர்கள் கடத்திவந்த பல முக்கிய நபர்கள் தற்போது சர்வதேச ரீதியாக பல நாட்டவர்களையும் அவுஸ்திரேலியா மற்றும் கனடா போன்ற நாடுகளுக்கு கடத்திவருவது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையுடனான நல்லுறவைத் தொடரவே சர்வதேச நாடுகள் விரும்புகின்றன

### அமைச்சர் மகிந்த சமரசிங்க

சர்வதேச நாடுகள் இலங்கையுடன் சிறந்த முறையில் உறவுகளை தொடரவே விரும்புகின்றன. ஜெனீவாவில் வைத்து சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தியபோது இதனை உணர முடிந்தது என பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். அண்மையில் ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடரில் கலந்துகொண்ட பின்னர் நாடு திரும்பிய அமைச்சர், சர்வதேச உறவுகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடரில் கலந்துகொள்ள சென்றிருந்த எனது தலைமையிலான இலங்கை தூதுக்குழு சர்வதேச நாடுகளின் பல்வேறு பிரதிநிதிகளையும் சந்தித்து பேச்சு நடத்தியது. இதன்போது சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளுக்கு நாங்கள் இலங்கையின் தற்போதைய நிலைமை மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள், மீள்குடியேற்ற செயற்பாடுகள் தொடர்பில் விரிவாக விளக்கிக் கூறினோம். சர்வதேச நாடுகள் இலங்கையுடன் சிறந்த முறையில் உறவு-களை தொடர தயாராக இருப்பதை நாங்கள் இந்த சந்திப்புக்களிலிருந்து புரிந்துகொண்டோம் என அமைச்சர் தெரிவித்தார்.

## ஆணைக்குழு தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் திருப்தி

### அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவிப்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் அமைக்கப்பட்டுள்ள கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகள் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் திருப்தி கொண்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்துள்ளார். கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். மேலும் அவர் அங்கு தெரிவிக்கையில், இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் உறுப்பினர்கள் சிலரை நான் சந்தித்து பேச்சு நடத்தினேன். அதன்போது இலங்கை அரசாங்கம் நியமித்துள்ள கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக அவர்கள் திருப்தி வெளியிட்டனர். அதன் இறுதி அறிக்கை கிடைக்கும் வரை நாங்கள் எதிர்பார்த்திருப்பதாகவும் அவை உரிய முறையில் நடைமுறைப் படுத்தப்படவேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்ததாக அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்துள்ளார்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:-1772, கொழும்பு.
த.பெ.இல:-167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 1811
தொலைநகல்(Fax):- 021 222 1811
ஈ-மெயில்(E-mail):- thinamurasu@live.com

## முரசம்

### எதிர்பார்த்த மகிழ்ச்சி இன்னும் மலரவில்லையே!

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

யார் என்ன சொன்னாலும் செவி மடுப்பதற்கு எவரும் தயாராக இல்லை. இலங்கையில் வாழும் மக்களின் அன்றாடச் சீவியம் மகிழ்ச்சியானதாக உள்ளதா என்பது கேள்விக்குறிதான்.

மூன்று வேளை உணவுக்காக பெரும்பாடுபட வேண்டியிருக்கின்றது. யுத்தத்திற்குப் பின்னான வாழ்வு மகிழ்ச்சியானதாக இல்லை. இருந்த மகிழச்சியையும் எதிர்பார்த்த மகிழ்ச்சியையும் அதிகரிக்கும் விலையுயர்வு அடித்துச்சென்றுவிட்டது.

நாளுக்கு நாள் விலை உயர்வடைகிறதே தவிர குறைந்தபாடில்லை. எரிபொருட்களின் விலையுயர்ந்தால் ஏனைய பொருட்களின் விலைகள் தானாகவே உயர்ந்துவிடும்.

கட்சி, அரசியல் பேதங்களுக்கு அப்பால் மக்களின் பிரச்சினைகளையிட்டு அக்கறை எடுக்கப்பட வேண்டும். இலங்கை மக்கள் அனைவரும் எதற்காக இந்த விலையைக் கொடுக்கின்றோம். எங்கே தவறு நடக்கின்றது என்பதை விமர்சன, சுயவிமர்சன அடிப்படையில் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அபிவிருத்தியாலும், தொழில்துறைகளாலும் முன்மாதிரிச் செயற்பாடுகளாலும், ஜனநாயக விழுமியங்களாலும் பூரணமடைகின்ற இலங்கையையே ஆசியாவினது மட்டுமல்ல, உலகினதும் ஆச்சரியமிக்க நாடாக தூக்கி நிறுத்த முடியும்.

அத்தகையதொரு தேசத்தையே எமது அடுத்த சந்ததிக்கு பரிசளிக்க வேண்டும். அதுதான் நமது தார்மீக கடமையுமாகும்.

ஆனால் தற்போதைய பொருளாதார நெருக்கடியும், அதீத பொருட்கள் விலையுயர்வும், தொடருமாக இருந்தால், வறுமையும் பட்டினியும், பஞ்சமும் நம்மை ஆட்கொண்டுவிடும். பின்னர் ருவாண்டா, சோமாலியா போன்று நிலைமை உருவானால் ஆசியாவில் குட்டி ஆபிரிக்க தேசமாகி விடக் கூடிய ஆபத்து வந்து விடக்கூடும்.

ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என அனைவரும் ஓரணியாகி மக்களையும், நமது வளம் மிகுந்ததாய் நாட்டையும், பாதுகாக்க முற்பட வேண்டும். நாடும் மக்களும் இருந்தால் தான் எவரும் அரசியல் நடத்தலாம். எதுவும் செய்யலாம்.

உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டால் அதற்காக செலவு செய்யும் பணம், மக்களின் அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படும் என்றார்கள். நமது வளம் பாதுகாக்கப்படும், அதனால் உற்பத்தி பெருகும் என்றார்கள். யுத்தம் முடிவுக்கு வந்து இரண்டு ஆண்டுகளை நெருங்கும் நிலையில் தேங்காய், மாங்காய், உப்பு, பருப்பு என்று எல்லாமுமே கற்பனைக்கு எட்டாத விலையேற்றமடைந்து குடும்பங்கள் பட்டினியை எதிர்கொள்ளும் நிலைமை காணப்படுகின்றது.

இந்நிலைமை ஆபத்தானதாகும். ஏற்கனவே ஒரு தடவை இவ்விடயம் பற்றி சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதற்கு அரசு மட்டுமல்ல நாட்டிலுள்ள அத்தனை தலைமைகளும் பொறுப்பெடுக்க வேண்டும். சிந்திக்க வேண்டும். நாட்டையும், நாட்டு மக்களையும் நேசிப்பவர்களுக்கு மட்டுமே இந்த ஆபத்தை உணர்ந்து கொள்ள முடியும்.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# கடாபிக்கு லிபியா ஒரு முள்ளிவாய்க்கால்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

சிவன்

லிபிய அதிபர் முஅம்மர் கடாபி தான் வகுத்துக் கொண்ட அரசி யல் தத்துவங்களை உள்ளடக்கி எழுதிய 'பச்சைப் புத்தகம்' ஆனது மாவோவின் மேற்கோள்களின் தொகுப்பாக சிவப்புப் புத்தகத்தைப் போன்றே பிரபலமானது. அந்தப் பச்சைப் புத்தகத்தில் குறிப்பிடப்படுகின்ற தத்துவங்களையே ஜனாதிபதி கடாபி 42 வருட கால லிபிய ஆட்சியில் பிரயோகித்திருந்தார். கடாபியின் ஆட்சி அதிகாரமானது யூத எதிர்ப்புத்தன்மை கொண்டதாகவும் ஏகாதிபத்திய எதிர்ப்பு கொண்டதாகவும் தன்னிச்சையான ஆட்சியாகவுமே அமைந்திருந்தது.

நான்கு பெரும் இனக்குழுமங்கள் வாழ்ந்து வருகின்ற லிபியாவில் அந்த இனக்குழுமங்களுக்கிடையில் விரோதங்களையும் பிரிவினைகளையும் ஏற்படுத்தி தனக்கு ஒவ்வாதவர்கள் மீது இன்னொருவரை ஏவுவதன் மூலம் தனது எதிரிகளை கட்டுப்படுத்துவதே கடாபியின் ஆட்சித் தந்திரமாக இருந்தது.

எனினும் 90 சதவீதத்துக்கும் மேலாக பாலைவனமாகக் கொண்ட லிபியாவை அங்கு கிடைக்கப்பெற்ற எண்ணெய் வளத்தை கொண்டு வளம் கொழிக்கும் செல்வந்த நாடாக மாற்றியமைத்தார். இதனால் இன்றைய லிபியாவில் தனிநபர் வருமானம், சராசரி ஆயுள் என்பன உயர்ந்த நிலையிலேயே காணப்படுகின்றன.

அடிப்படையிலேயே ஏகாதிபத்திய எதிர்ப்புக்கொண்டிருந்த கடாபி சர்வதேச அளவில் நடைபெற்று வந்த அனைத்து விடுதலைப் போராட்டங்களுக்கும் எந்தவித வேறுபாடுமின்றி தனது ஆதரவை நல்கி வந்தார். இதனால் மேற்கு நாடுகளில் வந்தது. இராணுவத்தில் கடாபிக்கு விசுவாசமானவர்களே முன்நிறுத்தப்பட்டனர். அத்தோடு கடாபியின் பிள்ளைகள் அனைவரும் மேற்குலக வர்த்தக ஒப்பந்தங்களில் முன்நிறுத்தப்பட்டு அவற்றின் மூலம் கிடைக்கின்ற பெரும்பகுதியான வருமானம் கடாபியின் குடும்பத்திற்குள்ளேயே பகிரப்பட்டது. இவ்வாறான எதேச்சதிகார நடைமுறைகளால் குமுறிக் கொண்டிருந்த லிபியர்களுக்கு துனீசினியா, எகிப்து போன்ற நாடுகளில் ஏற்பட்ட போராட்டங்களும் கிடைக்கப்பெற்ற முடிவுகளும் உத்வேகத்தை ஏற்படுத்த அவர்களும் களத்தில் இறங்கிவிட்டனர்.

தனது சொந்த மக்களின் மீதே இராணுவ நடவடிக்கையை பிரயோகித்திருக்கின்ற கடாபி, துனீசினியா, எகிப்து போன்று லிபியாவில் ஆட்சி மாற்றங்களை ஏற்படுத்த இலகுவானது அல்ல என்பதை செயல்களினால் காண்பித்து வருகின்றார். லிபியாவின் தலைநகர் திரிபோலி உட்பட அநேகமான பிரதேசங்களை கைப்பற்றிய ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக மிகவும் உக்கிரமான வான் தாக்குதல் அடங்கலான இராணுவ நடவடிக்கையை ஏவிவிட்டிருக்கும் கடாபி தனது சொந்த மக்களின் அழிவையும் கவனத்தில் எடுக்காது ஆட்சியைத்தக்க வைப்பதில் உறுதியாக இருக்கின்றார்.

இந்நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இராணுவப் பிரயோகத்தை தவிர்க்குமாறும் உடனே ஆட்சி மாற்றத்திற்கு வழி கோலுமாறும் வலியுறுத்தியுள்ள பராக் ஒபாமா, மத்திய தரைக்கடல் பகுதிக்கு இராணுவக் போர்க்கப்பலை அனுப்பி வைத்திருக்கிறார். இதில் இருக்கின்ற போர் விமானங்கள், உலங்கு வானூர்திகள் என்பன எந்நேரமும் லிபியா மீது தாக்குதல் நடாத்தக் கூடிய வகையில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இதனையறிந்த நிலையில் வெளிநாட்டு சர்வதேச ஊடகவியலாளர்களிடம் தனது கோப ஆவேசத்தை வெளிப்படுத்தியுள்ள லிபிய அதிபர், "அமெரிக்கா, உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுமானால் லிபியாவின் இரத்த ஆறு ஓடும்" என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஏற்கனவே கடாபி, அவர் உறவினர்கள்,ஆதரவாளர்கள் ஆகியோர் மீது சொத்துமுடக்கம், பயணத்தடை உட்பட்ட பயங்கரமான தடைகளை ஐ.நா. விதித்திருக்கின்றது. லிபியாவின் கிழக்குப் பகுதியில் கடாபிக்கு ஆதரவான படைகள் வான் தாக்குதலை நடாத்தி வருவதால் லிபிய வான் பரப்பில் விமான சூனியப் பிரதேசத்தை அமுல்படுத்துவது குறித்தும் ஆராயப்பட்டு வருகிறது. அதற்கு ஐ.நா. பாதுகாப்பு சபையின் பாதுகாப்பு பெறப்பட வேண்டும். அவ்வாறாயின் சீனா, ரஷ்யா போன்ற பாதுகாப்பு சபையில் அங்கம் வகிக்கின்ற நாடுகள் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்ற வாய்ப்புகளும் காணப்படுகின்றன. அதைவிட கடந்த காலங்களில் பிரகடனம் செய்யப்பட்ட விமான சூனியப் பிரதேசங்கள் குறிப்பிடத்தக்க வெற்றியளிக்கவில்லையென்பதும், ஈராக் மீதான இவ்வாறன ஓர் தீர்மானமே ஈராக்கிற்கும், அமெரிக்காவிற்கும் இடையில் நீண்ட காலப் பிரச்சினையை வழிவகுத்தது என்பதும் இப்போது குறித்த தீர்மானம் பற்றி சிந்திக்க வைக்கின்றது.

அதேநேரம் தமது ஆர்ப்பாட்டத்தின் மூலம் லிபிய அதிபரை பதவியிலிருந்து இறக்க முடியும் என்ற விடயத்தில் நம்பிக்கை இழந்து வரும் ஆர்ப்பாட்டக்காரர்கள், கடாபியை பதவி இறக்குவதற்கு அமெரிக்க உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் தலையீடு அவசியம் என்று கோரி வருகின்றன. உள்ஊரிலும் கடாபிக்கு எதிராக உள்ளூர் சக்திகளும் வெளிப்புறச் சக்திகளும், கைகோர்த்துள்ள நிலையில் தொடர்ந்தும் பிடிவாதத்துடன் இருக்கின்ற போதிலும் ஒரு குழப்பகரமான நிலைக்கு லிபிய அதிபர் தள்ளப்பட்டுவிட்டார் என்பதே அவரது தந்திரோபாயங்கள் வெளிப்படுத்துகின்றன. தனக்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு அமெரிக்காவும், எகிப்து, துனீசியா போன்ற கிளர்ச்சியாளர்களின் சதிதான் காரணம் என்றும், மறுபுறம் அல்கொய்தா பயங்கராவாதிகள் தான் காரணம் என்றும் இளைஞர் களுக்கு போதை மருந்து ஊற்றிக் கொடுக்கப்படுகின்றது என்றும் ஒன்றுக்கொன்று முரணான வகையில் பேசிக் கொண்டிருக்கிறார்.



இவ்வாறான ஒரு நிலையே வன்னியில் பிரபாகரனுக்கும் புலிகளுக்கும் ஏற்பட்டிருந்தது. 2002 இல் சமாதான காலத்தில் ஏற்பட்ட சூழல் மாற்றத்தைப் புலிகள் புரிந்து கொள்ளாமை, தவறாகப் பயன்படுத்தியமை அவர்களின் வீழ்ச்சிக்கு விதைபோட்டது. மேற்குலகுடனான சமரசப் போக்கு கடாபிக்கு எமனாக மாறும் சூழலை ஏற்படுத்தியுள்ளது. கிளிநொச்சியை இழந்திருந்த புலிகள் முல்லைத்தீவின் புதுக்குடியிருப்பு, முள்ளிவாய்க்கால் போன்ற பகுதிகளுக்கு மக்களை முடக்கிவிட்டு முன்னுக்குப்பின் முரணான கதைகளை கூறிக் கொண்டிருந்தனர். இதனால் சர்வதேச சமூகத்தினால் தனித்துவிடப்பட்டனர். இறுதியில் மக்கள் மீதே தாக்குதல் நடாத்தியிருந்தனர். இப்போது, கிளிநொச்சி நகர் போன்று பென்காசி. கடைசி புலி இருக்கும்வரை போராட்டம் தொடரும் என்றார் பிரபாகரன். இறுதி ஆணும் பெண்ணும் இருக்கும்வரை போராடுவாராம் கடாபி. சர்வதேச சமூகத்தால் தனிமைப்படுத்தப்படும் நிலையில் கடாபியும் இருக்கிறார். இந்தியாவின் தலைமையில் பிராந்திய நலன் கொண்ட பல நாடுகள் அணிவகுத்தன இலங்கையில். அமெரிக்கா தலைமையில் மேற்குலகு தயாராகிறது லிபியாவில்.

எனவே பிரபாகரனைப் போன்றே தன்னுடைய மக்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளாது, தொடர்ந்தும் லிபிய ஜனாதிபதி தன்னுடைய பிடிவாதத்தில் உறுதியாக இருப்பாராயின், எதிர்பார்க்கப்படுவது போன்று லிபிய ஜனாதிபதி தனிமைப்படுத்தப்பட்டு அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகளின் ஒத்துழைப்புடன் இராணுவ நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்படும்.

அந்த நிலையில் இங்கு பிரபாகரனுக்கு நிகழ்ந்தது அங்கு கடாபிக்கும் நிகழக்கூடும். அந்த முள்ளிவாய்க்கால் திருப்பொலியா? இல்லையா என்பதை கடாபியே தீர்மானிக்க வேண்டியிருக்கும். ■

இலங்கை தமிழ் அரசியல் அரங்கில் இருந்து ஓரங்கட்டப்பட்டு மக்கள் செல்வாக்கிழந்து 2001 இறுதிப்பகுதியில் நடைபெற்ற தேர்தலுக்கு

விடுத்தது. ஈ.பி.டி.பி.யின் கேள்விக்குப் பதிலளிக்காத அதேவேளை ஈ.பி.டி.பி.யின் அரசியல் பயணத்தையும், வெற்றிகளையும்

அவசியமான போதும் கட்சியின் புதிய உறுப்பினர்களான சரவணபவான், ஸ்ரீதரன், சுமந்தரன், செல்வராசா ஆகியோர் இந்த முடிவுகளை

வாக்குப் பெற்றது என்பதும் இருக்கின்ற உறுப்பினர்களில் எட்டு உறுப்பினர்கள் தமிழரசுக் கட்சியைச் சார்ந்தவர்கள் ஆகையால் பெரும்பான்மைக்கே தலைமை கிடைக்க வேண்டும். தமிழரின் வரலாற்றிலும் தமிழரசுக்

கூட்டமைப்பின் பெயரால் தமிழரசுக் கட்சியின் தயவில் ஒட்டியிருக்கும் ஒட்டுண்ணிகள் அவர்கள் தமது ஆலோசனையைப் பெறாமல் எதையும் செய்யக் கூடாது என்று கூறியிருக்கிறார். சிவஞானத்தின் இந்தக் கருத்து கூட்டமைப்பின்

# மையம் கொள்கிறது அரசியல் சூறாவளி

**கூட்டமைப்புத் தனியொரு கட்சியாகப் பதிவு செய்யப்பட்டாலே அங்கத்துவக் கட்சிகளுக்கு சம அந்தஸ்துப் பாதுகாக்கப்படும். இல்லாவிட்டால் தமிழரசுக் கட்சியின் ஆளுமைக்குள் இழுபட்டு நிற்கும் வெறுமை அரசியல் ஒன்றை ஏனைய கட்சிகள் நடத்த வேண்டியதாக இருக்கும்.**

அலசுவது

- மதியூகி -

எவ்வாறு முகங்கொடுப்பது என்று தெரியாமல் திண்டாடிக்கொண்டிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ், ஈ.பி.ஆர்.

தடுப்பதுதான் கூட்டமைப்பின் முதன்மை நோக்கம் என்பது பின்னர் தெளிவுபடுத்தப்பட்டது. பின்னர் ஆனந்தசங்கரி, சூரியன் சின்னத்தோடு


கட்சிதான் தலைமை கொடுத்தது என்பதும் இத்தரப்பின் வாதமாக உள்ளது. மற்றொரு புறத்தில் சுரேஸ் பிரேமச்சந்திரன்,

அங்கமாக இருக்கும் ஈ.பி.ஆர்.எல்எவ், ரெலோ ஆகிய கட்சிகளுக்குப் பெருத்த அவமானத்தை நிச்சயம் தோற்றுவித்துள்ளது.

## இலங்கை தமிழரசுக் கட்சி VS தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு

எல்.எவ்.(சுரேஸ் அணி), ரெலோ(செல்வம் அணி) ஆகியவை இணைந்து கொள்கை உறுதிப்பாடுகள்







ஏதுமின்றி தேர்தல் நோக்கோடு மட்டும் உருவாக்கிக் கொண்டதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இக்கூட்டமைப்பினால் ஆரம்பத்தில் புலிகள் தான் ஏகப்பிரதிநிதிகள் அவர்களுடன் தான் அரசு பேச்சுக்கள் நடாத்த வேண்டும் என்ற கோஷம் முன்வைக்கப்பட்டதை அடுத்து, இவர்களைத் தமது செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவதற்குத் தீர்மானித்திருந்தனர்.

இதன் மூலம் இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் தளத்தை முடக்கிப்போடவும், அரசியல் வழிமுறை மீதான தமிழ் மக்களின் நம்பிக்கையைச் சிதைக்கவும் புலிகளால் திட்டமிடப்பட்டிருந்தது. இதில் அனைத்துத் தமிழ் அரசியல்கட்சிகள், இயக்கங்களை இணைப்பதும் அவர்களைப் புலிகளின் சிந்தனைக்குச் செயல்வடிவம் கொடுக்கச் செய்வதும் முதல் வேலைத்திட்டமாக வரித்துக்கொள்ளப்பட்டது. இந் நிலையில் அரசியல் களத்தில் பலமான சக்தியாக விளங்கிய ஈ.பி.டி.பியைப் பொறுத்தவரைக் கூட்டமைப்பிற்கான நோக்கம், அதில் தமிழ் மக்களுக்கான நன்மை என்பன தொடர்பில் வெளிப்படையான நோக்கம் தெளிவுபடுத்தப்பட வேண்டுமென கோரிக்கை

கூட்டமைப்பை விட்டு வெளியேறியதும் புலிகளின் அழிவுக்குப் பின்னர் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கூட்டமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்டதுமாகக் கூட்டமைப்பின் குழப்பமான அரசியல் பயணம் தொடர்கின்றது.

தற்போதைய கூட்டமைப்பின் நிலைமை எப்படி இருக்கின்றது என்பதைப் பார்த்தால் அதன் தலைவர் சம்பந்தர் நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டு இந்தியாவில் சிகிச்சைபெற்று வருகின்றார். சம்பந்தருக்குக் கட்டுப்படாத தனித்தனிப் போக்கில் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் செயற்படுகின்றனர் என்று கூட்டமைப்பு ஒரு கட்டுக்கோப்பாக இருக்கவில்லை என்றும் அண்மைக்காலங்களில் பல விமர்சனங்கள் பல தரப்பாலும் முன்வைக்கப்பட்டது. இதற்குத் தீர்வுகாணும் நடவடிக்கையாக கூட்டமைப்பின் மூத்த உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் உள்ளிட்ட உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டது. அவர்களின் தலைமையில் சில முடிவுகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதில் அரசுடனான பேச்சுக்கள், தமிழ் கட்சிகளின் அரங்கத்துடனான பேச்சுக்கள் என்பவற்றை முக்கியமானதாகக் கூறலாம்.

அரசியல் ரீதியில் மேற்சொன்ன நகர்வுகள் முழுமையாக ஏற்கவில்லை. தமது அதிருப்திகளையும் வெளிப்படுத்தியிருக்கின்றன.

மறுபுறத்தில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் கூட்டமைப்பு உயர் குழுவினரின் போக்கைக் கடுமையாக விமர்சித்து வருகின்றனர். தமது ஆலோசனைகள் பெறப்படுவதில்லை என்றும் கிழக்கு மாகாண மக்கள் எதிர்கொண்ட வெள்ளப்பாதிப்பு மற்றும் கடந்த கால யுத்தப் பாதிப்புக்கள் தொடர்பில் கூட்டமைப்புக் குரல்கொடுப்பதையும் கவனமெடுப்பதையும் தவிர்த்துவருகின்றது. வன்னி- யாழ்ப்பாணப் பிரச்சினைகளுக்குக் கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவம் கிழக்கு மாகாணத் தமிழ் மக்களுக்கு கொடுக்கப்படுவதில்லை என்றும் தமது விமர்சனங்களைக் கூட்டமைப்பை நோக்கி வெளிப்படையாகத் தெரிவித்து வருகின்றனர்.

இதேவேளை கூட்டமைப்பின் அத்திவாரத்தை ஆட்டங்காணச்செய்யும் மற்றுமொரு பிரச்சினை யாகத் தலைமைப் போட்டியும் அதனாலான கட்சித் தனித்துவப் பேச்சும் உள்ளது. மாவை சேனாதிராஜா, தலைமைப்பொறுப்பை வகிக்க வேண்டும் என்று தமிழரசுக் கட்சியின் எண்ணமாக இருக்கின்றது. இதற்குக் காரணம் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திலேயே கூட்டமைப்புத் தமிழ் மக்களிடம்

கூட்டமைப்பின் பேச்சாளராக இருப்பதாலும் கூட்டமைப்பின் நீண்ட பயணமானது இளைய தலைமையின் அவசியம் வலியுறுத்தப் படுவதாலும், தலைமைக்கான விருப்பத்தோடு காய் நகர்த்தி வருகின்றார்.

கூட்டமைப்பின் புதிய காரியாலயங்களைத் திறப்பதும், கூட்டமைப்பைப் புதிய கட்சியாகப் பதிவு செய்வது என புதிய திட்டங்களில் கவனம் செலுத்துகின்றார். சுரேஸின் இந்தத் திட்டத்திற்கு செல்வம் அடைக்கலநாதன் ஆதரவாக இருக்கின்றார். சரவணபவான் போன்றோர் எதிர்க்கின்றனர். இதற்குக் காரணம் சரவணபவானின் மைத்துனரான வித்தியாதரனை கூட்டமைப்புக்குள் கொண்டுவருவதை சுரேஸ் கடுமையாக எதிர்ப்பதுதான் என்ற செய்திகளும் இப்போது வெளிவருகின்றன.

கூட்டமைப்புக் கட்சியாகப் பதிவு செய்வதற்கு தமிழரசுக் கட்சியினர் சில ஒப்புதல்களைத் தர மறுக்கின்றனர் என்று சுரேஸ் குற்றம்சாட்டியுள்ளார். இதேவேளை கூட்டமைப் பைக் கட்சியாகப் பதிவு செய்யவேண்டிய அவசியம் இப்போதைக்கு இல்லையென்றும் அதில் உள்ள கட்சிகள் தத்தமது தனித்துவங்களுக்கு ஏற்ப செயற்பட முடியும் என்றும் தமிழரசுக் கட்சியினரின் ஒப்புதல் இல்லாமல் கூட்டமைப்பின் பெயரால் புதிய அலுவலகங்கள் திறக்கப்படுவது ஏற்புடையதல்ல என்றும் தமிழரசுக் கட்சியின் செயலாளர் சி.வி.கே.சிவஞானம் அண்மையில் காட்டமான தொனியில் கூறியிருந்தார்.

சிவஞானம் இக்கூற்றின் மூலம் கூட்டமைப்பில் இணைந்திருப்போர்


இவ்வாறு தமிழரசுக் கட்சியினரின் மேலாதிக்கம் அதிகரித்து வருவதையும் மாவை சேனாதிராஜாவின் தலைமை வகிக்கும் போக்கும் கூட்டமைப்புக்குள் கொதிநிலையை ஏற்படுத்தியுள்ள நிலையில் கூட்டமைப்பில் கட்சிகள் சேர்ந்த நிலைமாறி கூட்டமைப்பைக் கடுமையாக வசைபாடிய தனிநபர்களான ஆனந்தசங்கரி, கூட்டணியின் பெயராலும், சிவாஜிலிங்கம் இன்னொரு கட்சியின் பெயராலும் தேர்தலைக் காரணமாக வைத்து உள்நுழைந்திருக்கின்றனர்.

இவ்விருவரின் உள்வாங்கலும் கட்சியின் கருத்தியல் தளத்தில் பலத்த விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. வடக்கில் மையங்கொள்ளும் இவ்வாறான பிரச்சினைகளுடன் இழுபடுகின்றவர்களாகக் கிழக்கு மாகாணக் கூட்டமைப்பினர் செய்வதறியாது விழித்துக் கொண்டிருக்கின்றனர். கூட்டமைப்புத் தனியொரு கட்சியாகப் பதிவு செய்யப்பட்டாலே அங்கத்துவக் கட்சிகளுக்கு சம அந்தஸ்துப் பாதுகாக்கப்படும். இல்லாவிட்டால் தமிழரசுக் கட்சியின் ஆளுமைக்குள் இழுபட்டு நிற்கும் வெறுமை அரசியல் ஒன்றை ஏனைய கட்சிகள் நடத்த வேண்டியதாக இருக்கும்.

புலிகளுக்குப் பின்னான தற்போதைய சூழலில் தமிழரசுக் கட்சியின் கை ஓங்கி வருகின்றது. வீட்டுச் சின்னம் அவர்களைப் பொறுத்தவரை வெற்றிச்சின்னம். இந்த இரண்டு பிடிமானங் களைத் தமிழரசுக் கட்சியினர் இழந்து ஏனைய கட்சிகளுக்குச் சமமானவர்கள்தான் தாமும் என்று அடங்கிப்போவார்களா? இனி ஒவ்வொரு நிகழ்வும் புதிய செய்தி சொல்லும்.

# கொசுவை விரட்டும் மென்பொருள்

கொசுக்களை அழிக்க அல்லது விரட்ட தினமும் பல யுக்திகளை கையாளுகிறோம். பலர் டென்னிஸ் மட்டை போன்ற ஒன்றை வைத்து கொசுக்களை அடிப்பதை பார்த்து இருக்கிறோம். நாம் கணினியைப் பயன்படுத்திக்கொண்டு இருக்கும் போது கொசு கடிக்காமல் இருக்க இந்த Anti Mosquito என்ற மென்பொருள் உதவுகிறது.




இந்த மென்பொருளை பதிவிறக்கம் செய்து இயக்கினால் கீழ்க்கண்ட விண்டோ தோன்றும். அதில் Active என்பதை கிளிக் செய்தால் இந்த மென்பொருள் இயங்க ஆரம்பித்துவிடும்.

Active என்பதை கிளிக் செய்தவுடன் இந்த மென்பொருள் கொசுவை விரட்டும் அல்ட்ரா ஒலிகளை வெளிப்படுத்த ஆரம்பித்து விடும். இந்த அல்ட்ரா ஒலிகளை நாம் கேட்க முடியாது.

மீண்டும் Inactive கிளிக் செய்து இந்த மென்பொருளின் இயக்கத்தை நிறுத்தலாம். மேலும் Hide என்பதை கிளிக் செய்து பின்புலத்தில் இயக்கலாம்.

இந்த மென்பொருளில் இருந்து வரும் அல்ட்ரா ஒலி கொசுக்களை பறக்க விடாமல் கட்டுப்படுத்துகிறது. இதனால் இதை இயக்கிய சில நிமிடங்களில் உங்கள் கணினிக்கு அருகில் இருந்து கொசுக்கள் ஓடிவிடும். நீங்கள் உங்கள் ஒலிப்பான்களை On செய்து வைத்திருந்தால் போதும். CNET தளம் இந்த மென்பொருளில் எவ்வித வைரஸ்களும் இல்லை என உறுதி செய்துள்ளது.




http://download.cnet.com/Anti-Mosquito/3000-2056_4-75221053.html எனும் இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

# பிரம்மாண்டங்கள் இணைந்த ஒரே தளம்

தேடு பொறி என்றதும் நாம் உடனடியாக சொல்வது கூகுள் மட்டும் தான். ஆனாலும் பல தேடு பொறிகள் கூகுளிடம் இல்லாத தகவல்களையும் நமக்குக் கொடுக்கிறது. இதற்காக நாம் ஒவ்வொரு தளமாக சென்று தேட வேண்டாம். ஒரே தளத்தில் இருந்து கொண்டு நாம் தட்டச்சு செய்து கொண்டிருக்கும் போதே பல தளங்களின் முடிவுகளை ஒரே தளத்தில் கொடுக்கிறது.

7 பிரம்மாண்ட தளங்களின் துணையுடன் நாம் தேடும் வார்த்தைக்கே உதவி செய்ய ஒரு தளம் இருக்கிறது. கூகுள், யாகூ, ஆஸ்க், விக்கிப்பீடியா, அன்சஸ்வர்ஸ்.கொம், யூடியுப், அமேசான் போன்ற அனைத்திலும் இண்ஸ்டண்ட் ஆக தேடக்கூடிய வார்த்தைக்கு உதவி செய்கிறது.




இந்தத் தளத்திற்கு சென்று தேடுதல் கட்டத்திற்குள் என்ன தேட வேண்டுமோ அதற்கான வார்த்தையை கொடுத்ததும், தானாகவே ஒவ்வொரு தேடு பொறியிலும் எந்த வார்த்தை அதிகமாக தேடப்பட்டிருக்கிறதோ அந்த வார்த்தைக்கான Suggestion Keyword கொடுக்கப்பட்டிருக்கும்.

இதிலிருந்து நாம் எந்தத் தளத்தில் தேட வேண்டுமோ அந்த தளத்தை சொடுக்கி நாம் தேடியவற்றை விரிவாக பார்க்கலாம். தேடுவதற்கு நேரம் இல்லை என்று சொல்லும் அனைவருக்கும் இந்தத் தளம் தேடும் நேரத்தை மிச்சப்படுத்திக் கொடுக்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

**நன்றி -இணையம்**

# கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம்

பாகம் - 08

161

**இப்போதுதான்** உண்மையிலேயே சூழ்நிலைகளை மறக்கக் குடிக்க வேண்டியிருக்கிறது.

ஆனால், கொஞ்ச நாட்களாகக் குடியின் மீதும் வெறுப்பு அதிகரித்துக் கொண்டு வருகிறது.

மது, மாமிசம், மங்கை இம்மூன்றிலிருந்தும், பகவான் என்னை விடுவித்துக்கொண்டிருப்பது போல் தோன்றுகிறது.

இதனை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளச் சித்தமாக இருக்கிறேன்.

அளவுக்கு மீறியே போகலாம். ஐம்பதிலேயே முடிந்து விடுவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை.

என் அளவுக்குப் பட்டினத்தாரும், அருணகிரிநாதரும் கூட அனுபவித்திருக்க மாட்டார்கள்.

ஆன்மாவைப் பற்றிய ஆராய்ச்சியில் நான் முழுமை பெற்றுவிட்டால், பகவானை அகக் கண்களால் தரிசித்து விட மாட்டேனா?

வைராக்கிய ஞானிகள் இன்றுவரை நின்று நிலைத்திருப்பது போல், நானும் நிலைத்திருக்க மாட்டேனா?

ஒருவேளை அந்த ஞானிகளின் அளவுக்கு நானும் வாழமாட்டேனா?

பரபரப்பான நகர நாகரிகத்திலிருந்து கட்டுப்பாடுகளற்ற தனிமையை எட்டும்போது குறுக்கீடுகள் இல்லாத அந்தத் தனிமையில் எவ்வளவு சிந்தனைகள் வரும்.

அந்த யோகத்தில் நோய்கள் இல்லை. நோய்களுக்கு மருந்துகளும் இல்லை.

அது வேண்டும், இது வேண்டும் என்ற ஆசை இல்லை; ஆரவாரமில்லை.

நிம்மதி, அதுதான் தேவனின் சந்நிதி.

இரண்டு கைகளையும் நீட்டிப் பிச்சை வாங்கி உண்டு குளிர்ந்த மர நிழலில் துண்டை விரித்துத் தூங்குவதில் உள்ள சுகம். நகரத்து ஏர்-கண்டிஷன் அறையில் தோன்றுகிறது.

நவீன நாகரிகத்தின் போலித்தனம் விளங்குகிறது.

'எல்லா ஆட்டங்களுமே முடியக் கூடியவையே' என்ற சிந்தனை, அடிக்கடி வருகிறது.



ஒரு யோகியின் பரிபூரண நிலையை எய்த எல்லாராலும் முடியாது.

இறைவனே மனது வைத்து, வில்லங்கங்களில் இருந்து விடுதலை செய்யும் போது, அதையே பெரிய வரமாகக் கருத வேண்டும்.

மரணம் தவிர்க்க முடியாதது. எல்லோருடைய வாழ்விலும் என்றோ ஒரு நாள் அது நிகழப் போகிறது.

பழைய உடல் நிலை இருந்தால், இன்று நான் ஒரு இருதய வியாதிக்காரனாக இருப்பேன்.

ஒருவேளை மரணம் கூடச் சம்பவித்திருக்கலாம்.

அப்போதெல்லாம் நான்கு படி ஏறினால் மூச்சு வாங்கும், கால்கள் சுரந்து வீங்கிப் போய்க்கிடக்கும். அது ஒரு நல்ல சகுணமல்ல.

இன்றைய நிலையில் ஓரளவாவது உணவு உண்ண இறைவன் என்னை அனுமதித்தால் போதும், வேறு எந்த அபிலாஷைகளும் எனக்கில்லை.

உற்சாகமாக நடமாடும் சக்தி ஒன்று மட்டும் இருந்தால் போதும்.

கையில் இருக்கிற பேனா நகர்ந்து கொண்டே இருக்க வேண்டும்.

குழந்தை குட்டிகள், பாசம் என்ற வில்லங்கங்கள் இல்லாதிருக்குமானால், இப்போது நான் நேசிக்கக் கூடியது, ரிஷிகேச யாத்திரையே!

இடுப்பளவு கங்கை நீரில் உட்கார்ந்து கொண்டு யோகம் புரிவது போல் சுகம் வேறு என்ன இருக்கிறது?

இறைவனைப் பற்றிய சிந்தனையைவிட, வேறு சிந்தனைக்கு அங்கு வேலை என்ன?

பரலோக வாழ்க்கைக்கும், இகலோக வாழ்க்கைக்கும் இடையேயுள்ள தாரதம்மியங்களைக் குறிப்பிட்டு, உலகத்திற்குச் சொல்லிவிட்டால், என் கடைசிக் காலம் பெருமைக்குரியதாக ஆகிவிடாதா?

பணம் சேர்ப்பதும், பங்களா வாங்குவதும் மறந்தே போய்விட்டது.

அன்றாடத் தேவைகளுக்கு மட்டுமே பணம், வெயில் மழைக்கு ஒதுங்கவே வீடு.

தேவைகள் குறைந்தபட்ச நிலையை எட்டுகின்றன.

இருபது வயதில் அதிகபட்ச நிலைக்குப் போன மனது, ஐம்பதிலேயே குறைந்தபட்ச நிலைக்கு வந்துவிட்டது.

பிறப்பின் நோக்கங்கள் முடிந்தனவோ இல்லையோ, ஒரு பிறப்பு முடிவை நோக்கிப் பயணம் செய்கிறது.

இளம் வாலிபர்களைக் காணும் போதெல்லாம் இவர்கள் ஆடி ஆடி ஓய வேண்டியவர்கள் என்று தோன்றுகிறது.

'மனிதனுடைய இலட்சிய எல்லை ஈஸ்வர ஐக்கியமே' என்று எண்ணும்போது, பகவத் கீதையின் சுலோகங்கள் பளிச்சிடுகின்றன.

ஒரு இளைஞன் பகவத்கீதை படித்தால், அது புரிவது கடினம்.

வாழ்ந்து பார்த்தவன் வாழ்க்கையைப் பார்ப்பது போல, அனுபவித்து அறிந்தவன் அதைப் படித்தால் புரியும்.

மனத்தின் சபலத்தைப் பற்றி அர்ஜுனன் கேட்கிறான், 'அதை யோகத்தால் அடக்க முடியும்' என்று பகவான் சொல்லுகிறான்.

இன்றைய கல்லூரி மாணவனிடம் போய் யோகத்தைப் பற்றிப் பேசினால், அவன் சிரிப்பான்.

காமக் களியாட்ட நடனங்களையும், திரைப்படங்களையம் விரும்பும் அவனுக்குப் புரிகிறது.

மனம்

அதன் கோலங்கள் தான் எத்தனை?

தான் போடுகின்ற கோலங்கள் அனைத்துமே ஓவியங்கள் என்று எண்ணுவது மனம்.

**தொடர்ச்சி அடுத்த வாரம்...**

# அதிருப்தி- பிரதிநிதித்துவம் இடையே மலையக மக்கள்

**இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இருந்து பல கட்சிகள் பிரிந்து சென்றுள்ளன. பல தலைவர்கள் உருவாகியுள்ளனர். இவ்வாறாக உருவான, உருவாக்கப்பட்ட பல தலைவர்கள், ஆரம்ப கட்டங்களில் மாத்திரமே மலையக மக்கள் தொடர்பில் அக்கறை செலுத்துகின்றனர். அதன் பின்னர் அவர்கள் தமது சொந்த நலன்களிலேயே கவனம் செலுத்துகின்றனர். பொதுவாக அரசாங்கங்களின் கொள்கைகளுக்கு எதிராக ஆரம்பத்தில் செயற்படும் மலையகக் கட்சிகள், பின்னர் அரசாங்கங்களின் ஊதுகுழல்களாக செயற்படுகின்றன. எனவே பெருந்தோட்ட மக்கள், தற்போது மலையக அரசியல் மற்றும் அரசியல் தலைவர்கள் மீது நம்பிக்கையை இழந்து வருகின்றனர்.**

**அமலன்**

**மலையகத்தில்** உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் பிரசாரங்கள் தீவிரமடைந்துள்ளன. இந்தநிலையில் இந்த தேர்தல் பிரசாரங்கள் எந்தவகையில் மலையக மக்கள் மத்தியில் சென்று சேர்ந்துள்ளன என்பதை கவனிக்கவேண்டியுள்ளது. மலையக மக்கள் பதவிக்கு வந்த அரசாங்கங்களினால் புறந்தள்ளப்பட்டவர்களாக கணிக்கப்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டு வருகிறது.

இதற்கு உதாரண-மாக, வருடாவருடம் நாட்டின் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் வரவுசெலவுத்திட்டத்தில் தோட்டத்தொழிலாளர்கள் தொடர்பான நலன் திட்டங்கள், உள்ளடக்கப்படுவதில்லை. குறிப்பாக 2011 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தில் பெருந்தோட்டத்துறைக்கான எவ்வித நலன் திட்டங்களும் உள்ளடக்கப்படவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

இதன் காரணமாக அந்த மக்கள், பாரிய பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

நாட்டின் வறுமை நிலையில் உள்ளவர்களுக்கு சமுர்த்தி போன்ற நலன் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எனினும் தோட்டத்தொழிலாளர்களுக்கு இந்த திட்டங்களில் இடம்தரப்படவில்லை. இதற்கு உரிய காரணம் குறிப்பிடப்படாவிட்டாலும் தோட்டத்தொழிலாளர்களின் வருமானம் உயர்ந்த மட்டத்தில் உள்ளதாக கருதியே இந்த நலன்திட்டங்களில் இருந்து பெருந்தோட்ட தொழிலாளர்கள் விலக்கிவைக்கப்படுகின்றனர்.

இதனால் பெருந்தோட்ட மக்கள் மத்தியில் அரசாங்கங்கள் மீதான நம்பிக்கைகள் குறைந்து வருகின்றன. அத்துடன், இந்த அரசாங்கங்களுக்கு ஆதரவளிக்கும் மலையகக் கட்சிகளின் மீதும் பெருந்தோட்ட மக்களுக்கு நம்பிக்கை குறைந்து வருவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. கடந்த 30 வருட காலத் தேர்தல் களத்தை பார்த்தால் இதனை புரிந்துக்கொள்ளக்கூடியதாக இருக்கும். ஆரம்பத்தில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தனிப்பெரும் கட்சியாக பெருந்தோட்ட மக்கள் மத்தியில் விளங்கி வந்தது. எனினும் பின்னர் அதில் பிரிவுகள் ஏற்பட்டன. இந்தப்பிரிவுகள் என சொல்லப்படுகின்ற போது கட்சிகளின் தலைவர்கள் மத்தியில் ஏற்படுகின்ற பிரிவுகளை முன்னிலைப்படுத்தமுடியாது.

மாறாக கட்சிகளின் ஆதரவாளர்கள் மத்தியில் ஏற்படுகின்ற மனமாற்றங்களின் வெளிப்பாடுகளின் அடிப்படையிலேயே மாற்றுக் கட்சிகள் உருவாக்கப்படுகின்றன. இதன்படியே கட்சிகளின் தலைவர்களும் உருவா-கி ன்றனர். இவ்வாறாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இருந்து பல கட்சிகள் பிரிந்து சென்றுள்ளன. பல தலைவர்கள் உருவாகியுள்ளனர். இவ்வாறாக உருவான, உருவாக்கப்பட்ட பல தலைவர்கள், ஆரம்பக்கட்டங்களில் மாத்திரமே மலையக மக்கள் தொடர்பில் அக்கறை செலுத்துகின்றனர்.

அதன் பின்னர் அவர்கள் தமது சொந்த நலன்களிலேயே கவனம் செலுத்துகின்றனர். பொதுவாக அரசாங்கங்களின் கொள்கைகளுக்கு எதிராக ஆரம்பத்தில் செயற்படும் மலையகக் கட்சிகள், பின்னர் அரசாங்கங்களின் ஊதுகுழல்களாக செயற்படுகின்றன. எனவே பெருந்தோட்ட மக்கள், தற்போது மலையக அரசியல் மற்றும் அரசியல் தலைவர்கள் மீது நம்பிக்கையை இழந்து வருகின்றனர். இதன் ஒரு கட்டமாக மலையக மக்கள், தேர்தல்களில் பெருந்தோட்ட மக்கள் ஆர்வம் காட்டுவதில் பின்னிற்கின்றனர். அத்துடன் தம்மை வாக்காளர்களாக பதிவுசெய்து கொள்வதிலும் பெருந்தோட்ட மக்கள் ஆர்வம் காட்டுவதில்லை.

இந்தநிலையில், எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் மலையக பெருந்தோட்ட மக்கள் எவ்வாறு தமது பங்களிப்பை வழங்கப்போகிறார்கள் என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டியுள்ளது. ஏனெ-னில், பெருந்தோட்ட பகுதி மக்கள் உள்ளூராட்சி மன்ற தேர்தல்களின் போது வாக்களிக்கின்றனர். எனினும் அவர்களுக்கு பிரதேச சபைகள் மூலமோ அல்லது நகர மற்றும் மாநகர சபைகளின் மூலமோ எவ்வித நன்மைகளும் கிடைப்பதில்லை என்ற குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே பெருந்தோட்ட மக்கள் உள்ளூராட்சி மன்ற தேர்தல்களில் அதிகமாக வாக்களிப்பதில்லை.

அதுவும் இந்த முறை தேர்தலில் பெருந்தோட்ட மக்களின் வாக்களிப்பு மிகவும் மந்தகதியிலேயே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான பிரதான காரணம், கடந்த ஜனாதி-பதி தேர்தலிலும் பொதுத்தேர்தலிலும் தமது பிரதிநிதிகளுக்கு வாக்களித்த பெருந்தோட்ட மக்கள் அதன-ால் எவ்வித நன்மைகளையும் பெறவில்லை என உணர்கிறார்கள். ஏனைய பகுதிகளில் உள்ள மக்களுக்கு கிடைக்கின்ற நன்மைகள், பெருந்தோட்ட மக்களுக்கு கடந்த தேர்தல்களின் மூலம் கிடைக்கவில்லை என்பதே பொதுவான கருத்தாக உள்ளது. எனவே அவர்கள் உள்ளூராட்சி தேர்தல்களில் தமது அதிருப்தியை வெளிக்காட்டுவார்கள் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரண-மாக ஒரு புறத்தில் பெருந்தோட்ட மக்களின் அதிருப்தி, அவர்களை பிரதிநிதித்துவப்படும் தலைவர்களுக்கு அல்லது அவர்களின் கட்சிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். மறுபுறத்தில் மக்கள் வாக்களிக்காமை காரணமாக, தமிழ் மலையகத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் தமிழ்ப் பிரதிநிதித்துவங்களுக்கு பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது.

எனவே இரண்டு நிலைகளையும் ஒருங்கே முன்னெடுத்துச்செல்ல வேண்டிய நிலைக்கு பெருந்தோட்ட மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.







# ஏழை எளிய மக்களின் இயல்பு வாழ்க்கை!

(கிருபா ஜனோ)

கிழக்கு மாகாணம் அபிவிருத்தி செய்யப்பட்டு விட்டது. வடக்கில் அபிவிருத்தி இடம்பெற்று வருகிறது என்பது மேலெழுந்த வாரியாக சொல்லப்படும் செய்தி. மலைமுகட்டில் நின்று கடலை நோக்கினால் கடல் எதுவித ஆர்ப்பரிப்பும் இல்லாமல் அமைதியாக காட்சியளிப்பது போலத் தோன்றும். ஆனால் கடலின் அருகே சென்று பார்த்தால்தான் பொங்கியெழும் அலைக-ளாய் கடல் ஆர்ப்பரிப்பது தெரிய வரும். இது போலத்தான் இப்போது கிழக்கின் நிலைமை காணப்படுகிறது.

ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து நாட்கள் உருண்டோடி இருந்தாலும் அது விட்டுச்சென்ற பாதிப்புக்களில் இருந்து மக்கள் இன்னமும் முழுமையாக மீட்டெடுக்கப் படவில்லை என்பது உள்ளூர் கிராமங்களுக்குள் போய் உற்றுப் பார்த்தால் தெளிவாகும்.

காடுகரைகளில் கல்லும் முள்ளும் சேறும் சகதியும் சேர்ந்த பள்ளமும் படுகுழியு மான பாதைகளில் பாமர விவசாயிகள் இன்னமும் பாதணி இல்லாமல் தட்டுத்தடுமாறி நடந்து செல்கிறார்கள்.

பிரதேசத்துக்கு வனப்பையும் செழிப்பையும் ஊட்டி வளமாக்குபவர்கள் கிராமப் புறத்து ஏழை விவசாயிகள். இயற்கையோடு இணைந்து சூழலை மாசுபடுத்தாமலும் மற்றவர்களுக்கு தொல்லை தராமலும் வாழப்பழகிக் கொண்டவர்கள் இந்த ஏழை எளிய மக்கள். ஆயினும் அவர்களால் சூழலுக்கும் அண்டிவாழும் ஏனையவர்களுக்கும் தொல்லைகள் நேராவிட்டாலும் இயற்கையின் இடர்களாலும் மனிதர்களில் ஒரு சாரார் ஏற்படுத்தும் வன்முறைகளா லும் கிராமப் புறத்து அப்பாவி மக்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்ட வண்ணமே இருந்துவருகிறார்கள்.

ஆயுத வன்முறைகள் இடம்பெற்ற பொழுது இவர்கள் காலங்காலமாக வாழ்ந்து வந்த தங்களது வாழிடங்களை விட்டு வெளியேறி காடுகரைகளில் தஞ்சம் புகுந்து கஷ்ரப்பட்டார்கள். இவ்வாறு ஒன்றிரண்டு தடவைகள் அல்ல. பல சந்தர்ப்பங்களில் பரிதவிக்க நேரிட்டது. தட்டில் இட்ட உணவை சாப்பிட முடியாமல் தூக்கி வீசிவிட்டு உயிருக்கு அஞ்சி திக்குத் தெரியாமல் ஓடும் சூழ்நிலை இப்போதைக்கு இல்லை என்பது நிம்மதியளிக்கும் ஒரு விடயம்தான்.

எனினும் கடந்த கால ஆயுத வன்முறைகளின் போது தமது வாழிடங்கள், ஆடு மாடுகள், தோட்டந் துரவுகள், சிறுகச்சிறுகச் சேர்த்து வைத்த ஏனைய பொருளாதார நலன்கள் என்பனவற்றைப் புறந்தள்ளி விட்டே அவர்கள் புகலிடம் தேடினார்கள். இழக்கப்பட்ட இந்தப் பொருளாதாரங்களை மீளக்கட்டியெழுப்புவதற்காக ஒருங்கிணைந்த சமூக மேம்பாட்டுத்திட்டங்கள் முக்கிய திட்டமாக முன்னெடுக்கப்படவில்லை என்பதையும் கிராம மக்கள் இன்னமும் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை வைத்து மதிப்பிட முடிகிறது. இது ஒருபுறம் இருக்க, சமீபத்தில் ஏற்பட்ட இயற்கைப் பேரழிவு இந்தக் கிராமப்புறத்து மக்களை இன்னமும் நிலை குலைய வைத்துள்ளது. வெள்ளம் வற்றிவிட்டது. மக்கள் தமது சொந்த இடங்களுக்கு மீளத்திரும்பி விட்டார்கள் என்பது அதிகார மட்டத்தில் உள்ளவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் விடயம்தான்.

ஆயினும், இந்த ஆறுதலுக் குள் அப்பாவிகளான ஏழை எளிய மக்களின் வாழ்க்கை யும் வாழ்வாதாரமும் அவர்களது வருங்கால சின்னஞ் சிறுசுகளின் எதிர்காலமும் கேள்விக்குள் ளாகி இருக்கும் விடயத்தை உற்றுக்கவனிப்போர் உணர்ந்து கொள்ளமுடியும்.

கூப்பிடு தொலைவிலே குடிசை கட்டி வாழும் கிராமத்து விவசாயிகளின் இயல்பு வாழ்க்கையை கடந்த சில மாதங்களாக ஏற்பட்ட அடைமழையும் பெருவெள்ளமும் அல்லாட வைத்திருக்கிறது. சேனைப்பயிர்ச்செய்கையும் சேற்றில் விளைந்த நெல் வயல்களும் சேதமாகி விட்டன.

குடிசைகளெல்லாம் கொட்டிய மழையில் ஒழுகிக் கரைந்து நாசமாகி விட்டன. நடக்கும் பாதைகள் தடம் தெரியாமல் வெள்ளநீரில் அடித்துச் செல்லப்பட்டதால் பள்ளமும் படுகுழியும் சேறும் சகதியும் கலந்த அதர்களுக்கூடாகவும் வரம்புகளிலுமே அவர்கள் தட்டுத்தடுமாறி பயணம் செய்ய வேண்டியுள்ளது. போக்குவரத்து வசதிகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக கிராமப்புறங்களில் இருக்கும் விவசாயப் பாதைகள், ஒற்றையடிப் பாதைகள், அதர்கள் எல்லாம் சமீபத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் முற்றாக அழிந்து போயுள்ளன. நகரப்புறத்த வர்கள் காப்பெற் வீதிக-ளில் பயணிக்கின்ற அதே-தவேளை பூாதிக்கப்பட்ட கிராமவாசிகள் இப்பொழுது காட்டு விலங்குகள் பயணம் செய்யும் கரடுமுரடான பாதைகளையே பயன்படுத்தி வருகிறார்கள்.

கோடை காலம் என்றால் கிரவல் கலந்த கல்லும் மண்ணும் சற்று கடினமாக இறுகிவிடும். அதுதான் கிராமமக்களின் காப்பெற் வீதியாகப் பயன்படுத்தப் படும். ஆனால் பெருவெள்ளத் திற்கும் அடைமழைக்கும் பின்னர் எல்லாம் சேறும் சகதியுமாகி இருப்பதால் சாதாரணமாக அவர்கள் பாவிக்கும் சைக்கிள்களிலும் மாட்டுவண்டியிலுங்கூட இப்பொழுது செல்லமுடியாத துர்ப்பாக்கிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கால்நடையாகத்தான் இப்பொழுது அவர்கள் தமது பயணத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. தலை யிலும் கக்கத்திலும் கைகளிலும் சுமைகள். இந்தக் கரடுமுரடான காட்டுவழிகளில் கால்கடுக்க நீண்ட தூரம் நடந்து செல்லும் போது அவர்களது மனங்களிலும் துயரச்சுமைகள்தான்.

சிந்திப்போரின் மனங்களை நெகிழவைக்கும் இந்தப் பாமர மக்களின் வாழ்க்கை இங்கே பரிதாபத்துக்குரியதாக மாறியிருக்கின்ற போது எல்லாம் அபிவிருத்தி செய்தாகிவிட்டது என்று உரக்கக்குரல் கொடுப்பது ஒன்றுக்கும் உதவாத ஒரு கருத்தாகவே உணரமுடிகிறது.

இலங்கையின் வரலாற்றில் கிழக்கு மாகாணத்துக்கே பெருந்தொகை நிதி அபிவிருத்திக்கென வழங்கப்பட்டதாக முன்னர் தெரிவிக்கப்பட்டது.

அந்த அறிவித்தல் முடியும் தறுவாயில் அடைமழையும் பெருவெள்ளமும்

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# போருக்கு மத்தியிலும் பரிணமித்து நிற்கிறது பொருளாதாரம்

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

கடந்த முப்பது வருடகால உள்நாட்டு ஆயுத வன்முறைகளின் மத்தியிலும் சமீபத்திய உலகப் பொருளாதார நெருக்கடிகளின் மத்தியிலும் இலங்கையின் பொருளாதாரம் மெச்சத்தக்க விதத்தில் அமைந்துள்ளது அதிசய மானது என்று சர்வதேச நாணய நிதியம் பாராட்டியுள்ளதை பி.பி.சி. செய்தியாக வெளியிட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி கோஷி மாதயை நேர்கண்டு பி.பி.சி தமிழோசை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இந்த விவரங்கள் விரிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அந்தச் செய்தி அறிக்கையில் விரிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் 'பின்வருமாறு அமைந்துள்ளன:

இலங்கைப் பொருளாதாரத்தின் முன்னேற்றங்களை சர்வதேச நாணய நிதியம் பாராட்டியுள்ளது. இலங்கைக்கு வழங்கி வரும் கடன்தொகையின் ஆறாவது தவணையை அளிப்பதற்கும் அது ஒப்புதல் அளித்துள்ளது. உள்நாட்டுப் போரின் பின்னரான நிலைமைகளிலிருந்தும் உலகப் பொருளாதார நெருக்கடியிலிருந்தும் இலங்கை மீள்வதற்கு உதவும் பொருட்டு சர்வதேச நாணய நிதியம் இந்தப் பெரும் கடன் தொகையை வழங்குவதற்கு பதினெட்டு மாதங்களுக்கு முன்னர் இணங்கியிருந்தது. நாட்டின் பொரு ளாதாரம் அடிப்படை மட்டத்தில் பலமடைந்துள்ளது தென்படுவதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. இலங்கையின் வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையைக் குறைப்பதற்காக முன்வைக்கப்பட்ட இலக்குகளில் தொடர்ச்சியாக இரண்டாவது வருடமும் பற்றாக்குறை நீடிக்கின்ற போதிலும், சுமார் இருநூறு மில்லியன் டொலர்கள் வரையான அடுத்த தவணைக் கடன் தொகையை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் உடன்பட்டுள்ளது. இரண்டு மாதங்களுக்கு முன்னர் வர்வு செலவுத் திட்டத்தினூடாக இலங்கை கொண்டுவர உத்தேசித்துள்ள வரி மறுசீரமைப்புத் திட்டங்களினால் சர்வதேச நாணய நிதியம் திருப்தியடைந்துள்ளது.

பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி விடயங்களில் எட்டப்பட்டுள்ள முன்னேற்றங்களைப் பாராட்டியுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி கோஷி மாதய், முப்பது வருட காலப் போருக்கு மத்தியிலும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் மெச்சத்தக்க விதத்தில் இருந்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார். கடந்த முப்பது வருட காலத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதத்தை ஐந்து வீதத்தில் இருந்து ஆறு வீதத்திற்குள் வைத்திருக்க முடிந்துள்ளமை அதிசயமான விடயம்தான் என்று அவர் கூறியுள்ளார். வெளியில் இருந்து இதனைப் பார்க்கின்ற ஒரு நபர் என்ற வகையில் கடந்த கால யுத்தத்தின் பாதிப்பு பொருளாதாரத்தில் பெருமளவு தாக்கம் செலுத்தியிருக்குமென்றும் அதனால் பொருளாதார வளர்ச்சி வீதம் அதிகளவில் சுருங்கிப் போயிருக்குமென்றும் நான் எதிர்பார்த்தேன், ஆனால், நிலைமை அவ்வாறில்லை, நாட்டின் இயற்கை வளங்களாலும் நல்ல தொழில் ஆளணி வளங்களாலும் நாட்டின் பொருளாதாரம் சிறந்த அடித்தளத்தைப் பெற்றிருக்கிறது என்பதைத்தான் இது காட்டுகிறது. இலங்கையில் அண்மைக்காலமாக வேகமாக அதிகரித்து வரும் அடிப்படை உணவுப் பொருட்களின் விலையால் நாட்டு மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தப் பாதிப்புக்களை முக்கிய பிரச்சினை கள் என ஏற்றுக்கொண்டுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி கோஷிமாதய், இவையெல்லாம் வெளிக்காரணிகளாலான திடீர்ப் பற்றாக்குறை எனவும், ஒட்டுமொத்தப் பணவீக்கமும் கட்டுக்குள் இருந்துள்ள தாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

2009ஆம் ஆண்டில் இந்தக் கடனுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டபோது, சர்வதேச நாணய நிதியத்தின் தலைமை இயக்குனர், இலங்கை அதன் இராணுவச் செலவீனங்களைப் பெருமளவில் குறைத்துப் போரினால் இடம்பெயர்ந்த மக்களுக்கான சமூகக் கட்டமைப்பொன்றை உருவாக்க வேண்டுமென்ற நிபந்தனை இருப்பதாகக் கூறியிருந்தார். ஆனால் இடம் பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்ற நிவாரண மானியங்கள் மிகக் குறைந்த அளவிலேயே இருப்பதாக மனிதநேயப் பணியாளர்கள் பலரும் சுட்டிக் காட்டுகின்றனர்.

அத்தோடு, வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவீனங்களுக்கான நிதி ஒதுக்கீடும் தொடர்ந்தும் எகிறிக் கொண்டே போகின்றது. ஆனால் இந்தத் தொகையில் பெருமளவு நிதி மக்களின் அபிவிருத்திப் பணிகளுக்காகவே தற்போது செலவிடப்படுமென அரசாங்கம் வாதிடுகின்றது. என்ற விவரத்தை பி.பி.சி.யின் தமிழோசை செய்தியாக வெளியிட்டுள்ளது.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# அவலம் சுமந்த அகதிகள்

அத்திமுகத்தோன் அவலம் 21

மூத்தவளுக்குக் கலக்கமாக இருந்தது. அவனை இயக்கம் பிடித்திருக்குமோ என்ற எண்ணம் மேலோங்க இன்னமும் பயமும் பதகளிப்பும் உருவாகத் தொடங்கியது.

மாத்தளனில் இருந்து திரும்பவும் அக்காவும் -தங்கையும் இரணைப்பாலை நோக்கிப் புறப்பட்டபோது, வீதியில் சனநெரிசல் மிக அதிகமாக இருந்தது.

“இருட்டுப்படுகுது. உப்பிடி நகர்ந்தால் எப்ப வீடுபோய்ச் சேருகிறது...?” தங்கை கூறிக்கொள்ளவும், அவர்களுக்கு அருகில் நின்ற ஒரு மனிதர் அவர்கள் இருவரையும் பார்த்துவிட்டுக் கேட்டார்.

“பிள்ளையள் ரண்டு பேரும் எங்கை போக நிற்கிறியள்?” இரணைப்பாலைக்கு அண்ணை” அக்கா கூறினாள்.

“நீங்கள் எங்கபோக நிற்கிறியள்...?”

அக்காளுக்குப் பின்பாக நின்ற தங்கை அந்த மனிதரை வினவினாள்.

“தேவிபுரத்துக்கு அவசரமாப் போகவேணும் பிள்ளை.” அவர் கூறினார்.

“அங்காலையெல்லாம் பிரச்சினையெண்டு சனம் சாதியள் ஓடிவருகுது. நீங்கள் அங்கை போகவேணுமெண்டு சொல்லுறியள். தங்கை திரும்பவும் கேட்டாள்.

“என்ன பிள்ளை செய்யிறது? தேவிபுரத்தில குடும்பம் நிற்குது. நான் இஞ்சை பொக்கணைப் பக்கம் தெரிஞ்ச ஒருவர் இருக்கிறார். இடம் பார்த்து வைச்சிட்டுப் போறன். இனிப் போய் நாளைக்கு மனிசி, பிள்ளையளைக் கூட்டியர வேணும். எனக்கு இது பதினேழாவது இடப்பெயர்வு” கூறிவிட்டுச் சிரித்தார் அந்த மனிதர்.

அக்காவும் - தங்கையும் சிரிக்கும் மனநிலையில் இல்லாததால், அவரது பேச்சை உள்வாங்கியபடி... மௌனமாக நின்றார்கள்.

சில விநாடிகளின் பின்பு அவர் கேட்டார்.

“நீங்கள் எங்கை பிள்ளையள் இருக்கிறியள்...?”

“சுடலையடிக்குக் கிட்ட....”

தங்கை கூறினாள்.

“றோட்டுக்கு வெளியிலையோ? உள்ளுக்கையோ? உள்ளுக்கோ...?

“உள்ளுக்கு அண்ணை... ஏன் கேட்கிறியள்...?” தங்கைக்கு அவர் கேள்விகள் கேட்ட தோரணையில் இருந்து சந்தேகம் வந்துவிட்டது.

“உள்ளுக்கை எண்டால் பிரச்சினையில்லை. ஆமி வாறானெண்டால் ஒழுங்கையால ஓடி வந்திடலாம். ஆமி வாறதைப் பார்த்தால் நீங்களும் எழும்பி இஞ்சால கடற்கரைப் பக்கம் ஓடிவர வேண்டியிருக்கும் போலக் கிடக்குது.”

“நீங்கள் என்னண்ணை சொல்லுறியள்...?” மூத்தவள் கேட்டாள்.

“பிள்ளை! களநிலவரம் நாங்கள் நினைக்கிற மாதிரி இல்லை. வழக்கமாக ஆமிக்காரன் தன்ர இடத்தைவிட்டு வெளிக்கிடேக்கை எங்கடையள் அடிச்சுக் கலைச்சு உள்ளுக்கை தள்ளுறதுதான் நடைமுறையாய் இருந்தது. ஆனால் நிலைமை இப்ப அப்படியில்லை. ஆமிக்காரன் மன்னாரிலிருந்து கிளிநொச்சிக்கும், மணலாறிலிருந்து முல்லைத் தீவுக்கும் வந்த பிற்பாடு, இனி எங்கடையள் அடிச்சுக் கலைக்கிறதெண்டது இயலாத காரியம். நிலைமை கைமீறிப் போய்க்கொண்டிருக்கு. பரந்தனில நிண்ட ஆமி இப்ப முரசுமோட்டைப் பள்ளிக்கூடத்தில நிற்கிறானாம். மாங்குளத்தால திரும்பின ஆமி காடுகளுக்குள்ளால ஊடறுத்துவந்து இப்ப ஐயனார் கோயிலடியில நிற்கிறானாம். நிலைமை இப்ப எங்களுக்குச் சாதகமாகியில்லை. என்ன நடக்கப்போகுதோ கடவுளுக்குத்தான் தெரியும்...” கூறிவிட்டு அவர் ஓய்ந்து கொண்டார்.

“இதெல்லாம் என்னெண்டு உங்களுக்குத் தெரியும்...?” தங்கை கேட்டாள். அவர் பதில் சொல்வதற்குத் தயங்கினார். ஒரு கணம் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு அவர்களுக்கு அருகில் தலையை நீட்டி மெதுவாகக் கூறினார்.

“இயக்கம் புடிச்சுக் கொண்டுபோன இடத்திலயிருந்து தப்பியோடி வந்த ஆட்கள் சொன்னவை. தலைமைப்பீடத்துக்கை என்ன நடக்குதெண்டு தளபதிமாருக்கே தெரியேல்லையாம். அவனவன் தன்ர இஷ்டப்படி சண்டையை வழிநடத்துறானாம். உந்த ஆட்களைப் புடிக்கிற வேலையள் எல்லாம் இயக்கத்தில கீழ் மட்டத்தில் இருக்கிற சில்லறைத்தனங்கள் செய்யிற வேலையள் தானாம்.”



“பிள்ளை! களநிலவரம் நாங்கள் நினைக்கிற மாதிரி இல்லை. வழக்கமாக ஆமிக்காரன் தன்ர இடத்தைவிட்டு வெளிக்கிடேக்கை எங்கடையள அடிச்சுக் கலைச்சு உள்ளுக்கை தள்ளுறதுதான் நடைமுறையாய் இருந்தது. ஆனால் நிலைமை இப்ப அப்படியில்லை. ஆமிக்காரன் மன்னாரிலிருந்து கிளிநொச்சிக்கும், மணலாறிலிருந்து முல்லைத்தீவுக்கும் வந்த பிற்பாடு. இனி எங்கடையள் அடிச்சுக் கலைக்கிறதெண்டது இயலாத காரியம். நிலைமை கை மீறிப் போய்க்கொண்டிருக்கு. பரந்தனில நிண்ட ஆமி இப்ப முரசுமோட்டைப் பள்ளிக்கூடத்தில நிற்கிறானாம். மாங்குளத்தால திரும்பின ஆமி காடுகளுக்குள்ளால ஊடறுத்துவந்து இப்ப ஐயனார் கோயிலடியில நிற்கிறானாம். நிலைமை இப்ப எங்களுக்குச் சாதகமாயில்லை. என்ன நடக்கப்போகுதோ கடவுளுக்குத்தான் தெரியும்...”

அக்காளும் - தங்கையும் எதுவும் கூறவில்லை அமைதியாக நின்றார்கள்.

திடீரென தெருவில் வந்து கொண்டிருந்த சனங்களுக்குள் ஒரு பரபரப்பு ஏற்பட்டது.

“ஐயோ... தூக்கிவிடுங்கோ... தூக்கிவிடுங்கோ. பாரம் நசிக்குது. சாகப்போறார். ஐயோ! ஆராவது உதில நிண்டு ஒருக்காத் தூக்கிவிடுங்கோ...”

பெண்ணொருவர் கத்திக்குளறுவதையும் அதைத் தொடர்ந்து அவ்விடத்தில் நின்ற ஒரு சிலர் வெள்ளநீர் வடிந்தோடும் வாய்க்காலினுள், மிதிவண்டியோடு கட்டிக்கொண்டு வந்த சாமான்கள் சகிதம் விழுந்து போய்கிடக்கும் மனிதரையும் மிதிவண்டியையும் தூக்கியெடுத்து வெளியே விடுவதையும் பொழுது ஒளிமங்கிய நிலையிலும் அவர்களால் பார்த்துக்கொள்ள முடிந்தது.

புவியை முற்றாக இருள் சூழ்ந்திருந்த நிலையில், தெருவின் கரையோர பெட்டிக்கடைகளிலிருந்து ஒளிரும் வெளிச்சத்தில் ஒவ்வொருவருடைய முகங்களையும் காணக் கூடியதாக இருந்தது.

நத்தை வேகத்தில் மெல்ல மெல்ல நகர்ந்து ஒருவாறாக செந்தூரன் சிலையடிக்கு வந்துவிட்டார்கள் அக்காவும் தங்கையும். சந்திக்கு அப்பால் சனநெருக்கம் குறைவாக இருந்ததினால் இருவரும் மிதிவண்டியில் ஏறி ஓடத் தொடங்கினார். தெருவிலிருந்து வீட்டிற்குத் திரும்பும் ஒழுங்கையினுள் இறங்கியபோது தங்கையின் மிதிவண்டிச் சில்லின் ரியூப் வெடித்துக்கொண்டது.

“ஐயோ! கடவுளே...”

தங்கை திடீரென மிதிவண்டியை விட்டு கீழே இறங்கினாள்.

“உதில கொஞ்சத் தூரந்தானே. வா. நடந்துபோவோம்...” என்று கூறிய அக்காளோடு சேர்ந்து தங்கையும் நடக்கத் தொடங்கினாள்.

தூரத்தே தென்னை மரங்களினூடாக அவர்களது வீடு தெரிகிறது. சகலன் பங்கருக்குள் நல்ல உறக்கத்தில் இருந்தான். அவளது குழந்தை அம்மாவையும் அப்பாவையும் காணாத நிலையில் அழுதுகளைத்துப் போய் சகலனுக்குப் பக்கத்தில் உறங்கிக் கொண்டிருந்தது.


“பிள்ளை பெரியப்பா எங்கையடி...?” அவள் தங்கையின் மூத்தபிள்ளையைக் கேட்டாள். அதற்குப் பிள்ளை சொன்ன பதில் பேரிடியாய் இருந்தது அவளுக்கு.

“பெரியப்பா போனதுக்கு இன்னமும் வீட்டுக்கு வரேல்லை...”

அவள் அழத் தொடங்கினாள்.

அவலம் தொடரும்...








## அளவான சேமிப்பு

"மழைக்காலம் இரண்டு நாளில் துவங்கப்போகிறது. ஒரு வாரத்திற்குத் தேவையான கனிகளையும், கிழங்குகளையும் சேகரித்துக் கொண்டு வாருங்கள்" என சீடர்களை காட்டுக்குள் அனுப்பி வைத்தார் குரு.

துருவன் தலைமையில் மற்ற சீடர்கள் உணவு சேகரிக்கப் புறப்பட்டனர். அவர்களுள் அந்த நாட்டு அரசனின் மகனான மகேந்திரனும் ஒருவன்.

மன்னன் மகனாக இருந்தும், தன்னை சீடர்கள் தலைவனாக நியமிக்காதது அவனுக்கு மன வருத்தத்தைத் தந்தது. இருந்தாலும் அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் இருந்தான்.

எல்லா சீடர்களும் குரு சொன்னது போல் ஒரு வாரத்திற்கு உரிய காய்கனிகளைச் சேகரித்தார்களா என்று துருவன் சரி பார்த்தான். மகேந்திரன் மட்டும் ஒரு மாத அளவுக்கு சேகரித்ததைக் கண்டு, 'ஏன்' என்று கேட்டான்.

"முட்டாள்களே, முன் எச்சரிக்கையாக ஒரு மாத அளவுக்கு சேகரித்து வைத்தால் உலகமா அழிந்து போகும்? தொடர்ந்து மழை பெய்தால் என்ன செய்வீர்கள்? குருவுக்கும் மூளை இல்லை சீடர்கள் தலைவனுக்கும் மூளை இல்லை" என்று கேலியாகப் பேசினான்.

துருவன் பதில் பேசாமல் சிரித்தபடி அனைவரையும் குருகுலத்திற்கு அழைத்துச் சென்றான். ஒரு வாரம் கழித்து மழை நின்றதும் எல்லா சீடர்களையும் மரத்தடியில் கூடச்சொன்னார் குரு.

"சீடர்களே, உங்களிடம் ஏதேனும் உணவுப் பொருட்கள் மீதம் உள்ளனவா? இல்லாதவர்கள் மறுபடியும் சேகரிக்கச் செல்ல வேண்டும்" என்றார். மகேந்திரனைத் தவிர மற்றவர்கள் இல்லை என்றார்கள்.

"இவர்களைப் போல சரியாக ஒரு வாரத்துக்கு மட்டும் உணவை சேகரிக்காமல், ஒரு மாதத்திற்கு சேகரித்தேன். என்ன இருந்தாலும் நான் மன்னன் மகன் அல்லவா?" என்று சொல்லியபடி மீதம் இருந்தவைகளை மூட்டையில் இருந்து அவிழ்த்து குரு முன்னிலையில் கொட்டினான் மகேந்திரன். பழங்களும், கிழங்குகளும் அழுகிப்போய் காட்சி தந்தன. துர்நாற்றம் மூக்கைத் துளைத்தது.

"உனக்கு ஒரு மாத அளவுக்கு உணவு இருப்பதால், நீ மட்டும் உணவு சேகரிக்க செல்ல வேண்டாம். உணவு இல்லாதவர்கள் மட்டும் செல்லட்டும்" என்றார் குரு.

குரு மறைமுகமாக தன் தவறைச் சுட்டிக்காட்டுவதைப் புரிந்து கொண்டு, அவமானத்தால் தலைகுனிந்தான் மகேந்திரன்.


"மகேந்திரா, நீ நாடாளப் போகும் வருங்கால மன்னன். எந்த உணவுப்பொருளை பலநாள் சேகரித்து வைக்கலாம், எவற்றை சிலநாள் சேகரித்து வைக்கலாம், எவற்றை ஆண்டுக்கணக்கில் சேமித்து வைக்கலாம் என்ற சாதாரண அறிவுகூட உன்னிடம் இல்லாமல் போயிற்றே... இவ்வளவு உணவையும் வீணாக்கிவிட்டாயே..." என்று வேதனையோடு சொன்னார் குரு.

"குருவே, என்னை மன்னித்துவிடுங்கள். தேவைக்கேற்ப மட்டுமே சேமிக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டேன்" என்று குருவிடம் மன்னிப்புக் கோரினான். மன்னன் மகன் என்ற அகந்தை அவனைவிட்டு நீங்கியது.

உண்மைக்காக எதையும் துறக்கலாம் ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்காதே.

-விவேகானந்தர்-

எழுத்துக்களையும், எண்களையும் தட்டச்சு செய்ய தட்டச்சு இயந்திரம் உதவி செய்கிறது. பார்வையற்றவர்களுக்கு உதவும் வகையில்தான் முதன்முதலில் தட்டச்சு இயந்திரத்தை வடிவமைத்தார்கள். முதன்முதலாக




## தட்டச்சு இயந்திரம்

அமெரிக்காவில் 1827ஆம் ஆண்டு வில்லியம் பேர்ட் என்பவர் ஒரு தட்டச்சு இயந்திரத்தை உருவாக்கினார். அது தட்டச்சு இயந்திரம் என அழைக்கப்பட்டது.

1873 ஆம் ஆண்டு அனைவரும் பயன்படுத்தக்கூடிய வகையிலான தட்டச்சு இயந்திரம் வடிவமைக்கப்பட்டது. கிறிஸ்டோபர் ஷோவ்ஸ், சாமுவேல் சோல், கார்லோஸ் கிளிட்டன் ஆகிய மூன்று அமெரிக்கர்களும் சேர்ந்து அதை தயாரித்தார்கள். அதன் பின்னர் பல்வேறு வசதிகளுடன் தட்டச்சு இயந்திரங்கள் மாற்றியமைக்கப்பட்டன.

## மலைகளில் குளிரக் காரணம்...?



மலை உச்சிக்குப் போக போக குளிர்வதற்கு காரணம் கடலின் மட்டத்திலிருந்து மேலே போகப் போக உஷ்ணம் குறைந்துவிடுவதுதான் காரணமாகும். உஷ்ணம் குறைவதற்குக் காரணம் ஒட்சிசன் குறைந்து காபனீரெட்சைட் அதிகரிப்பதே ஆகும். இதன் காரணமாக மூச்சுத் திணறலும் ஏற்படுகிறது. இதனால் தான் சிகரம் ஏறுபவர்கள் ஒட்சிசன் சிலிண்டரை எடுத்துச் செல்கின்றனர்.

## எதிரொலி கேட்பது எப்படி?

குறைந்தது ஒலியின் வேகம் வினாடிக்கு 332.5 மீற்றர் ஆகும். இந்த வேகத்தில் ஒலி செல்லும்போது, அதற்கு இடையில் ஏதேனும் பொருட்களில் பட்டு ஒலி சிதறுகிறது. அப்படி சிதறும் ஒலி நமக்கே திரும்பக் கேட்கிறது. இதுவே எதிரொலி எனப்படுகிறது. மலைப் பிரதேசங்களில் எதிரொலியை எளிதாகக் கேட்க முடியும்.

## பொய் சொல்லக்கூடாது தம்பி...

காலையில் விழித்திடு தம்பி
கவனமாய்ப் படித்திடு தம்பி
காய்கனி உண்டிடு தம்பி
உடலுக்கது நல்லது தம்பி...

பொய் சொல்லக்கூடாது தம்பி
உண்மையே பேசிடு தம்பி
நல்லதைக் கற்றிடு தம்பி
தீயதை ஒதுக்கிடு தம்பி...

பேச்சினில் கனிவுகொள் தம்பி
செயலில் தெளிவுகொள் தம்பி
மனதில் துணிவுகொள் தம்பி
வாழ்வில் உயர்வடைவாய் தம்பி...

எறும்பாய் நீயும் இயங்கிடு தம்பி
இரும்பாய் உறுதி கொண்டிடு தம்பி
நல்லதை எண்ணி நல்லதைச் செய்து
நல்லோர் வாழ்த்த வாழ்ந்திடு தம்பி...

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 22.03.2011

வர்ணம் தீட்டும் போட்டி இல.881
தினமுரசு. வாரமலர்
த.பெ.இல:1772, கொழும்பு. த.பெ.இல:167, யாழ்ப்பாணம்.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 879

**பரிசுக்குரியவர்:** ஜெ. அபிலாஷினி, 36/35 சுமேதகம, கண்டி வீதி, திருகோணமலை

**பாராட்டுக்குரியவர்கள்**

01. உமர் ஷுக்ரி, வேத்தாவ வீதி, கலகெதரமடிகே.
02. சி.லதாங்கி, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம், கரவெட்டி
03. க.சுகன்யா, மொல்லிகொட லேன், கம்பளை.
04. ரா. ருக்ஷ்கா, 238 கோவில் வீதி, நல்லூர்.
06. அ. சோபிகன், 365 நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
07. ஸ். றொக்சிற்ரா, கச்சாய் வீதி, கொடிகாமம்.
08. கு. விதுஷா, வலியடைப்பு, பண்டத்தரிப்பு.

### தகவல் துணுக்குகள்...

## தெரிந்து கொள்ளுங்கள்

கரிகால சோழ மன்னனின் இயற்பெயர், திருமாவளவன்.

உயிர் காக்கும் உன்னத உலோகம் என அழைக்கப்படுவது, ரேடியம்.

மின்னூட்டத்தினை தேக்கி வைக்கும் சாதனம், மின்தேக்கி.

பாம்பு, நாக்கினால் வாசனையை நுகரும் திறன் கொண்டது.

கார்கள் அதிகமுள்ள நகரம், நியூயோர்க்.

நாய்க்கு வியர்ப்பது கிடையாது.


வீட்டிற்கு ஒரு பியானோ உள்ள நாடு, இங்கிலாந்து.

எலும்புக்கூடு இல்லாத உயிரினம், ஜெல்லி மீன்.

6 என்ற எண்ணிலிருந்து அணிலை வரைந்து பாருங்கள்




# புற்றுநோயைத் தடுக்கும் தக்காளி



புரோஸ்டேட் புற்றுநோய் என்பது ஆண்களை அதிகளவில் தாக்கும் புற்றுநோய். குறிப்பாக 50 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கு இவ்வகை புற்றுநோய் வருவதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

புரோஸ்டேட் புற்றுநோய் ஆண் உறுப்புக்கு இணையான சுரப்பி திரள்களாலான பெருஞ்சுரப்பியை தாக்குகிறது. இதனால் சிறுநீரக மண்டலம் பாதிக்கப்படுகிறது. இதனால். அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டும் போல தோன்றுவது, சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல் இருப்பது, சிறுநீருடன் இரத்தம் கலந்து போவது போன்ற அறிகுறிகள் தென்படலாம். இந்நிலையில் புரோஸ்டேட் புற்றுநோயை குணப்படுத்தும் ஆற்றல் தக்காளிக்கு இருப்பதாக டாக்டர் ஒருவர் தெரிவித்துள்ளார். தக்காளியில் அதுவும் சமைத்த தக்காளிக்கு புரோஸ்டேட் புற்றுநோயை குணப்படுத்தும் ஆற்றல் இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

தக்காளியில் காணப்படும் லைக்கோபீன் என்றொரு பொருள்தான் புற்றுநோய்க்கு எதிராக செயல்படுகிறது. மேலும் தர்ப்பூசணி பழம், ரோஸ் நிற திராட்சை பழங்கள் ஆகியவற்றிலும் லைக்கோ பீன் இருப்பது குறிப்பிடத்தக்கது.



# மறந்து போகாமல் இருக்க வேண்டுமா?

**சற்று** முன் கேட்ட தொடிலைபேசி இலக்கத்தையோ உடனே திருப்பிச் சொல்ல முடிகிறது. ஒரு மணிநேரம் கழித்து அதே இலக்கம் மறந்துவிடுகிறது. ஆனால் நமது சொந்த தொலைபேசி எண், பிறந்த திகதி போன்ற இலக்கங்கள் என்றும் மறப்பதில்லை. ஏன் இப்படி?

நமக்கு இரண்டுவித ஞாபகசக்தி இருக்கிற்து. தற்காலிக நினைவு, மற்றது நிரந்தர நினைவு. நினைவுகள் யாவும் மூளையில் நரம்பு செல்களில் சேமிக்கப்படுகின்றன. ஒரு தொலைபேசி இலக்கத்தைக் கேட்டதும் அதற்கான ஒரு நரம்புக்கூட்டம் உடனே அதைப் பதிவு செய்வதில் முனை-கிறது. இந்த நரம்புக்கூட்டத்தை 'ட்ரேஸ்' என்று (Trace) அழைக்கிறார்கள். நமக்கு தற்காலிக நினைவுக்கென்று ஒரு ட்ரேஸ்ும் அதே சமயம் நிரந்தர நினைவுக்கென்று இன்னொரு ட்ரேஸ்ும் ஒரே சமயத்தில் மூளையில் உருவா-கிறது. ஒரு சம்பவத்தை அல்லது தகவலை முதல் முறையாக கேட்கும்போது அல்லது படிக்கும்போது அது இரண்டுவித டிரேஸிலும் பதிகிறது. தற்காலிக டிரேஸ் வேகமாக உருவா-னாலும் அது உடனே கலைந்து விடுகிறது. நிரந்தர டிரேஸ் மெல்ல ஆசுவாசமாக உருவாகிறது. அது முடிவடையவேண்டுமானால் மீண்டும் அதே சம்பவத்தை அல்லது படித்ததை நாம் அனுபவிக்க வேண்டும். நிரந்தர டிரேஸ் நரம்புக்கூட்டம், இரண்டாம் முறை, மூன்றாம் முறை தூண்டப்படும்போது அதன் டிரேஸ் முற்றுப்பெறுகிறது. முற்றுப் பெற்றதும் அது நிரந்தர நினைவாகிவிடுகிறது.



மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் எல்லோருக்கும் ஒரு தகவல் எதை நீங்கள் நிரந்தரமாக நினைவில் பதித்துக்கொள்ள விரும்புகிறீர்களோ அதை முதலில் தற்காலிகமாக நினைத்துப் பாருங்கள். மீண்டும் அதை மறுபடி மறுபடி மூன்று முறை யாவது கொஞ்ச நேரம் இடைவெளிவிட்டு நினைவுபடுத்திப் பாருங்கள் அப்புறம் அது மறக்கிறதா என்று பாருங்கள்.

நன்றி இணையம்



45

# திருப்பங்கள் நிறைந்த பூலான்தேவியின் வாழ்க்கை வரலாறு

எல்லோருக்கும் – அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலை காரி என்று தான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் – ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் பிரசுரிக்கப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் பிரசுரிக்கப்படுகிறது.

**நான் என்** ரவிக் கையின் ஊக்கில் கை வைத்தேன். கண்ணீரை அடக்க முயன்றபடி விக்ரம் மல்லாவைக் கடைக்கண்ணால் பார்த்தேன்.

விக்கிரம்மல்லலா தலையைக் குனிந்தபடி திரும்பி நடந்தேன். அவன் விட்டுச் சென்ற துப்பாக்கி அப்படியே நிலத்தில் கிடந்தது.

"கதவைச் சாத்திவிட்டு வா!" என்றான். தன துப்பாக்கியைக் கீழே வைத்த பாபுசிங் குஜார்.

கதவைச் சாத்தும் போது பார்த்தேன். விக்ரம்மல்லாவின் முதுகுதான் தெரிந்தது. தலையைத் தொங்கவிட்டபடி சென்று கொண்டிருந்தான். பாவமாக இருந்தது.

கம்பளிப் போர்வையை என்னை நோக்கி விட்டெறிந்தான் பாபுசிங் குஜார்.

"அதைத் தரையில் விரி. இந்தப் பாபுசிங் குஜார் தானாகப் பழுத்த கனியை பக்குவமாகத்தான் புசிப்பான்!" கெக்கட்டம் போட்டு இளித்தான். பரட்டைத்தலை நாய்.

தரையில் போர்வையை விரித்தேன். என் நினைவெல்லாம் விக்கிரம் மல்லா மீதே இருந்தது.

மல்லா உன் ஜாதிதான். உனக்கு நான் வேண்டுமா? அவன் வேண்டுமா?" என் காது மடலில் நாவால் தொட்டான் எச்சில் நாய்.

நான் விக்கிரம் மல்லாவை மனதில் நினைத்துக்கொண்டே அவனிடம் சொல்வதாக நினைத்துக்கொண்டு "நீதான் வேண்டும் என்றேன்"

'மல்லா விக்கிரம் மல்லா' என்று முணுமுணுத்தேன்.

" என்னடி சொல்கிறாய்?" என்றான்.

"ஒன்றுமில்லை!" என்றேன்.

"ஏன் இல்லை! இருக்கிறது! எல்லாம், எல்லாமும் எனக்காக. இந்த பாபுசிங் குஜாருக்காக" என்றான்.

நான் முடிவு செய்து கொண்டேன் 'இவனைத்தான் முதலில் கொல்ல வேண்டும் என்று. இனிமேல் துள்ளு வதில்லை. கத்துவதில்லை! தந்திரத்தால்தான் இனி சாதிக்க வேண்டும்!"

"இனித்தான் புதிய பூலானை நீங்கள் சந்திக்கப்போகிறீர்கள்.

களைத்துப் போன பாபு சிங் குஜார் கால்களை அகட் டிக்கொண்டு மல்லாந்து தூங்கிக்கொண்டிருந்தான்.

அவன் தூங்குவதைப் பார்க்கப் பார்க்க ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இப்படியே கழுத்தை நெரித்துக் கொன்றுவிடலாமா என்று தோன்றியது.

ஆனால் அது முடியாது என்பது எனக்குத் தெரியும்.



பாபுசிங் குஜார் வலுவா-னவன். முரடன், என்னோடும் முரட்டுத்தனமாகத்தான் நடந்துகொண்டான். பரட்டைத்தலை நாய்.

எலும்பு எலும்பாக முறித்துப் போட்டது போல உடம்பு முழுக்க வலித்தது. எதிரி யுடன் கட்டிப்புரண்டு சண்டை செய்யும் மூர்க்கத்தனத்துடன் நடந்துகொண்டான்.

எல்லாம் முடிந்த பிறகு பெரிதாக மூச்சுவிட்டுக் கொண்டு, " என்னடி! என்னை பிடித்திருக்கிறதா?" என்று இளித்தான்.

" ம்...ம்..." என்றேன். என் தாடையைத் தொட்டு நிமிர்த்தி முறைத்துக்கொண்டே, "உண்மையைச் சொல்லடி! பிடித்திருக்கிறதா? சொல்லடி பிடித்திருக்கிறதா?" என்றான்.

"உண்மையாகத்தான்" என்றேன். உள்ளே விம்மிய வெறுப்பை மறைத்துக்கொண்டு "அதுதான், அதேதான், பாபு சிங் குஜாருக்காக எத்தனை சிறுக்கிகள் காத்திருக்கிறார்கள் தெரியுமாடி?"

"காலைப் பிடித்துவிடு! நான் தூங்க வேண்டும்!" என்றான். கால்களையும், கைகளையும் விரித்துக்கொண்டு மல்லாந்து படுத்தான்.

பிடித்துவிட்டேன். "பழகிப்போய் விட்டது. எவளாவது ஒரு சிறுக்கி கால்பிடித்துவிட்டால்தான் தூக்கமே வருகிறது. எல்லா இடமும் பிடித்துவிடு!"

'எனக்கு விக்ரம்மல்லாவைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. பாபுசிங் குஜார் என்மேல் பரவியபோதும் நான் விக்ரம்மல்லாவைத்தான் நினைத்துக்கொண்டிருந்தேன். அந்த நினைப்பில்தான் பாபு சிங் குஜாரை சகித்துக் கொண்டிருந்தேன்.

விக்ரம்மல்லா இப்பொழுது என்ன செய்துகொண்டிருப்பான். என்னைப்பற்றி அவனும் நினைத்துக்கொண்டிருப்பானா? இறுதியாக என் மீது ஒரு பார்வை வீசிவிட்டுப்போனானே அதற்கு என்ன அர்த்தம். பரிவா? பாசமா? சே... நீயும் ஒரு பெண்ணா என்ற வெறுப்பா? இந்த உலகத்தில் என்னை யார் வேண்டுமானாலும் வெறுக் கட்டும். என் விக்கிரம் மல்லா மட்டும் வெறுக்கக் கூடாது.

அவனுக்காக, அவன் உயிருக்கு விலையாகத்தான் இந்தப் பரதேசி நாயிடம் என் உடலை விட்டுக்கொடுத்தேன் என்பதை மல்லா புரிந்துகொண்டிருப்பானா?

புரிந்துகொள்கிறானோ இல்லையோ அவனுக்காக நான் ஒரு உதவி செய்துவிட் டேன். அவன் உயிரைக் காப்பாற்றிவிட்டேன் என்பதே எனக்கு நிறைவாக இருந்தது.

இல்லையில்லை, நான் என்ன பெரிதாகச் செய்துவிட்டேன். எனக்காகப் பிரதியுபகாரமே எதிர்பாராமல் பாபுசிங் குஜாரை தடுக்கவந் த்தானே! சாகவும் தயாராக நின்றானே...! அது எத்தனை பெரிய காரியம்? அதற்கு முன்னால் நான் செய்தது எல்லாம் தூசிக்குச் சம னாம். தூக்கம் கண்களைச் சுழற்றியது. விக்ரம்மல்லாவின் நினைப்பும், தூக்கமும் மல்லுக்கு நின்றன. இறுதியில் தூக்கம்தான் வென்றது. ஒரே அசதி. உடம்புக்கு கட்டாய ஓய்வு தேவைப்பட்டது போலும். நன்றாக விடிந்துவிட்டது. சூரிய வெளிச்சம் உடம் பில் சுட்டபோதுதான் வாரிச்சுருட்டிக்கொண்டு எழுந்தேன். பக்கத்தில் பாபு சிங் குஜார் நிம்மதியாகக் குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்தான். சோம்போறிக் கழுதை. குடிக்கவேண்டியது

"யார் குடியையாவது கெடுக்க வேண்டியது, அட்டை மாதிரிச் சுருண்டு தூங்க வேண்டியது, இன்னும் எத்தனை நாளைக்குத்தான் தூங்கப் போகிறாய். பார்க்கத்தானே போகி றேன்" வெளியே வந்து பார்த்தேன். எல்லோரும் தூங்கிக்கொண்டிருந்தார்கள். இரண்டு மூன்று பேர் மட்டும் துப்பாக்கியோடு காவலுக்கு இருந்தார்கள்.


என்னைக் கண்டதும் அவர்களில் ஒருத்தன் ஒரு மாதிரியாகப் பார்த்தான். அவன் பார்வைக்கு என்ன அர்த்தம் என்பது எனக்குத் தெரியும். இரவு முழுக்க நானும் பாபுசிங் குஜாரும் தனியே இருந்திருக்கிறோம் என்றால் என்ன நடந்திருக்கும் என்று ஊகிக்க அவனுக்குப் புத்திசாலித்தனம் எதுவும் தேவையில்லை. நான் விக்ரம்மல்லாவைத் தேடினேன். என் பார்வைக்கு எட்டக் கூடிய இடங்களில் அவனைக் காணவில்லை.

(திருப்பங்கள் தொடரும்...)

# சினி விசிட்

















## மீண்டும் ரஜினி-கமல்

ரஜினி – கமல் இருவரும் சேர்ந்து நடிப்பார்களா என்ற ஏக்கம் பல ஆண்டு காலமாக எல்லோர் மனங்களிலும் கிட்டத்தட்ட 30 வருடங்களாக இருந்து வருகின்றது.

தற்போது இந்த இருவரையும் வைத்து கே. பாலச்சந்தர். புதிய படம் ஒன்றை இயக்கப்போவ தாக தகவல்கள் வெளியாகியுள்ளன, ஆனால் முழு சினிமாவில் அல்ல குறும் படம் ஒன்றில்.

இந்தப்படத்திற்கு கதை வசனத்தை முதல்வர் கலைஞர் எழுதுகிறார்.சினிமாக் கலைஞர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் அமைக்கப்பட்டு வரும் கலையகத்தில் இதற்கான படப்பிடிப்பு நடக்க இருக்கிறது.

## அஜீத்தை பாராட்டிய நடிகை

தயாநிதி அழகிரி தயாரிப்பில், அஜீத் நடிக்கும் 50வது படமான மங்காத்தா படத்தில் ஒரு குத்தாட்ட பாடல் இடம்பெறுகிறது. இதற்காக பாலிவுட்டில் இருந்து கைநாட் அரோரா என்ற நடிகை குத்தாட்ட பாடலுக்கு ஆடி உள்ளார்.

அஜீத்துடன் இணைந்து நடித்தது குறித்த கைநாட் அரோராவிடம் கேட்டபோது, அஜீத் சிறந்த நடிகர் மட்டுமல்ல, ஒரு சிறந்த மனிதரும் கூட என்று பாராட்டியுள்ளார்.



## சமூக சேவகி

மழை படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறி
ஸ்ரேயா தற்போது சமூக சேவைப்பணிகளில் ஈ
யோகா, தியானம் போன்றவற்றிலும் ஆர்வம் கா
தற்போது ஏழை மக்களுக்கு உதவிகளும் செ
பற்றி கேட்டபோது சில நாட்களுக்கு முன்
பார்த்தேன். இருவரும் ஒருவருக்கொருவர் மி
அதோடு பிறருக்கு உதவிகளும் செய்து வந்த
என் கண்களை திறந்தன.

பார்வையற்ற தம்பதி மற்றவர்களுக்கு உதவு
எல்லாம் சரியாக இருக்கும். அவர்களே உத
உதவிகள் செய்யக்கூடாது என்ற எண்ணம்
அதன் பிறகு நானும் சமூக சேவகியாக மாறி
அமைப்பு துவங்கி அதன் மூலம் பார்வையற்
வேலை வாய்ப்புக்கு ஏற்பாடு செய்து வருகிறேன். இதன் மூலம் எனக்கு மன நிறைவு ஏற்படுகிறது என்றார்.

இயக்குனர் பேரரசு இயக்கத்தில் உருவான பழனி படத்தைத் தொடர்ந்து ‘திருத்தணி’ என்ற புதிய படத்தில் பேரரசு - பரத் கூட்டணி மீண்டும் இணைந்துள்ளது. இந்தப்படத்தில் நாயகியாக சுனைனா நடித்துள்ளார்.

## சுனை

காதலில் விழுந்தேன்,
படங்களுக்கு பின் இ
உணர்ச்சிப்பூர்வமான
நடிப்புத் திறமையைக்
அருந்ததி வேடத்தில்
வரும் காட்சிகளில் ந
பாவனை, பேச்சு மூல
இயக்குனர் பேரரசும்
சம் ட காட்சிக
போது அசந்து போய்
மறந்திட்டார் என்கிறது

## ஒரு பாடலுக்கு ஆடவில்லை

மலையாளப் படத்தில் ஒரு பாடலுக்கு ஆடுவதாக வந்த தகவலை சோனியா அகர்வால் மறுத்தார். மலையாளத்தில் மம்மூட்டி நடிக்கும் படம் ‘டபுள்ஸ்’. இதில் சிறப்பு தோற்றத்தில் சோனியா நடிக்கிறார் என்றும். குத்துப்பாடலுக்கு ஆட இருக்கிறார் என்றும் செய்திகள் வெளியானது.

இதுபற்றி சோனியாவிடம் கேட்ட போது, ‘டபுள்ஸ்’என்ற மலையாள படத்தின் இயக்குனர் சோஹன், என்னிடம் கெஸ்ட் ரோலில் நடிக்க கேட்டது உண்மை. தனிப்பட்ட காரணங்களுக்காக, அதை மறுத்துவிட்டேன். அதைவிட்டுவிட்டு நான் ஒரு பாடலுக்கு ஆட இருப்பதாக செய்தி வருவதில் உண்மையில்லை என்று கூறியுள்ளார்.

## திகில் படத்தில்

‘மலை மலை’, ‘மாஞ்சா
பெதர் டச் என்டர்டெயின்
‘தடையறத் தாக்க’ என்ற பு
விஜய் நடிக்க ஒப்பந்தமாகி
இவருக்கு ஜோடியாக பிர
றார்.
இந்தப்படம் பற்றி அருண்
முந்தைய ங்கள், என்
அடையாள டியது. அ
அடுத் வேன
செய்திருந் . அதற்கேற்
படம் அமைந்துள்ளது. இது
கலந்த ஆக்‌ஷன்
மீறா
. க



## விரைவில் பகலவன் படப்பிடிப்பு

சீமான் இயக்கத்தில் விஜய் நடிக்க இருக்கும் பகலவன் திரைப்படம் தமிழக சட்டசபைத் தேர்தல் முடிந்த பின்னர் படப்பிடிப்பு ஆரம்பமாகவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன சிறை சென்ற சீமான், சிறையில் இருந்தபடியே பகலவன் படத்திற்கான கதை, திரைக்கதையை எழுதி முடித்தார். தற்பொது தமிழகத்தில் தேர்தல்களம் சூடுபிடித்துள்ளதால் தமிழக சட்டசபை தேர்தலுக்கு பிறகு பகலவன் படப்பிடிப்பை தொடங்க திட்டமிட்டுள்ளாராம் சீமான்.



## க சேவகியான ஸ்ரேயா

தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமாகி தமிழில் பல முன்னணி கதாநாயகர்களுடன் நடித்த
பொது சமூக சேவைப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றார் அத்துடன் ஆன்மீகம்,
ானம் போன்றவற்றிலும் ஆர்வம் காட்டிவருகின்றார்.
ழை மக்களுக்கு உதவிகளும் செய்து வருகின்றார்.இவருடைய மனமாற்றம்
டபோது சில நாட்களுக்கு முன் பார்வையற்ற கணவன்-மனைவியை
இருவரும் ஒருவருக்கொருவர் மிகவும் பாசமாக இருந்தார்கள்.
றருக்கு உதவிகளும் செய்து வந்தனர். அவர்களின் நடவடிக்கைகள்
ளை திறந்தன.
ற தம்பதி மற்றவர்களுக்கு உதவும் போது கை, கால், கண்
ரியாக இருக்கும். அவர்களே உதவும்போது நாம் ஏன்
செய்யக்கூடாது என்ற எண்ணம் ஏற்பட்டது.
கு நானும் சமூக சேவகியாக மாறினேன். ஒரு
துவங்கி அதன் மூலம் பார்வையற்றோருக்கு
ாய்ப்புக்கு ஏற்பாடு செய்து
ன். இதன் மூலம் எனக்கு
றவு ஏற்படுகிறது என்றார்.



## மிரட்டிய சுனைனா

காதலில் விழுந்தேன், மாசிலாமணி படங்களுக்கு பின் இப்படத்தில் உணர்ச்சிப்பூர்வமான நடித்து தன் நடிப்புத் திறமையைக் காட்டியிருக்கிறாராம் அருந்ததி வேடத்தில் சுனைனா வரும் காட்சிகளில் நடை, உடை, பாவனை, பேச்சு மூலம் மிரட்டியுள்ளார். இயக்குனர் பேரரசும் சுனைனா சம்ப  ட காட்சிகளை படமாக்கும் போது அசந்து போய், 'கட்' சொல்ல மறந்திட்டார் என்கிறது திருத்தணி படக்குழு.

## தெலுங்கை தவிர்த்தார் அஞ்சலி

தமிழில் தொடர்ச்சியாக நடிக்கவேண்டும் என்பதற்காக தெலுங்கு பட வாய்ப்பை தவிர்த்து வருகின்றார் அஞ்சலி இதுபற்றி அஞ்சலி தெரிவிக்கும் போது எனது படங்கள் ரசிகர்களின் வரவேற்பை பெறுவது மகிழ்ச்சியாக இருக்கிறது. நான் வெளியூர்போகும்போது என்னை ரசிகர்கள் நடிகையாகப் பார்ப்பதில்லை. தங்கள் குடும்பத்தில் ஒருவராக பார்க்கிறார்கள். நம்பர் ஒன் நடிகை, கவர்ச்சி நடிகை என்பதை தாண்டிய இந்த இமேஜ், எனக்கு பிடித்திருக்கிறது.

இந்த ஆண்டு இறுதி வரை எனக்கு தொடர்ச்சியாக படங்கள் இருக்கிறது. அதனால் இரண்டு தெலுங்கு பட வாய்ப்புகளை தவிர்த்தேன். தமிழில் எனக்கு ஏற்ற மாதிரியான பாத்திரங்கள் தொடர்ந்து அமைவதால் மற்ற மொழிகளில் நடிப்பது குறிப்பாக தெலுங்கில் நடிப்பது பற்றி யோசிக்கவில்லை.

## படப்பிடிப்பில் எலும்பு முறிவு

மைனா படத்தில் நடித்ததன் மூலம் வெற்றி நாயகனாக வலம் வந்து கொண்டிருக்கும் விதார்த் கால் எழும்பு முறிந்து தற்போது வைத்தியாசலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்.

ஏவி.எம் புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் 'முதல் இடம்' என்ற படத்தின் படப்பிடிப்பு மன்னார்குடியில் உள்ள அம்மன் கோயிலில் செட் போடப்பட்டு, திருவிழா காட்சி படமாக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்களுக்கு மத்தியில் விதார்த் ஆடிய பாடல் காட்சி சில நாட்களுக்கு முன் படமாக்கப்பட்டது. காட்சி முடிவடையும் நாளில், வேகமாக நடனம் ஆடியதால் விதார்த்திற்கு காலில் எழும்பு முறிவு ஏற்பட்டுள்ளது இதனால் தற்காலிகமாக 'முதல் இடம்' படத்தின் படப்பிடிப்பு நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

## திகில் படத்தில் அருண் விஜய்

லை மலை', 'மாஞ்சா வேலு' படங்களை தயாரித்த
தர் டச் என்டர்டெயின்மென்ட் நிறுவனம் தயாரிக்கும்
டையறத் தாக்க' என்ற புதிய படத்தில் அருண்
ஜய் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கின்றார்.
வருக்கு ஜோடியாக பிராச்சி தேசாய் அறிமுகமாகி-
ர்.
ந்தப்படம் பற்றி அருண்விஜய் கூறும் போது எனது
ந்தைய ங்கள், என்னை ஆக்ஷன் ஹீரோவாக
டையாள டியது. அதிலிருந்து வித்தியாசமாக
டுத் வேண்டும் என்று முடிவு
ய்திருந்தேன். அதற்கேற்ற வகையில் இந்தப்
ம் அமைந்துள்ளது. இது திகில், மர்மம் கலந்த ஆக்ஷன் கதை. லாஜிக் மீறாத யதார்த்தமான கதையம்சம் கொண்ட படமாக இருக்கும். இந்தப்படத்தின் படப்பிடிப்பு கடந்த 7ஆம் தேதி ஆரம்பமாகியது.



# இணையத்தில் 'www' என்பது கட்டாயம் தேவையா?




இணையத்தள முகவரிகளில் தள முகவரிக்கு முன் 'www' என்பது இருக்கும். ஏன் 'www' என்று மட்டும் சேர்க்கிறார்கள்? அதற்கு மாற்றாக 'abc' என்றோ 'xyz' என்றோ இருந்தால் என்ன என்று சிந்தித்திருக்கிறீர்களா?

இணையத்தள முகவரிகளை அமைப்பதில் நாம் விரும்பும் பெயருடன் இரண்டு ஒட்டுகள் எப்போதும் சேர்ந்து இருப்பதைப் பார்த்திருப்பீர்கள். அவை 1) உயர் நிலைத் திரளம்('Top Level Domain') 2) துணைத்திரளம் ('Sub Domain') ஆகிய இரண்டும் ஆகும். இவற்றைப் பற்றித் தெரிந்து கொண்டால் உங்களுடைய சிந்தனைக்கு விடை கிடைத்துவிடும்.

இணையத்தளங்கள் '.com', '.org', என்பன போன்ற பல பின்னொட்டுகளுடன் இருப்பது உங்களுக்குத் தெரியும்.

அவற்றைத் தாம் உயர்நிலைத் திரளம் என்று சொல்கிறோம். இவற்றுள் ஏதேனும் ஓர் உயர்நிலைத் திரளத்தைக் கொண்டு தான் இணையத்தளங்கள் எல்லாவற்றின் பெயரும் முடியும்.

இணையத்தளத்தின் பெயருக்கு முன்னால் 'www' என்று பார்க்கிறீர்கள் அல்லவா? அது தான் துணைத் திரளம் ஆகும். இந்த 'www' என்பது போலப் பல துணைத் திரளங்களை '1234', 'abc', 'xyz' என நாம் வைத்துக் கொள்ளலாம். 'www' என்பதைத் தான் வைத்துக் கொள்ள வேண்டும் என்னும் கட்டாயம் இல்லை. அதே போல் ஏதாவது ஒரு துணைத் திரளத்தைக் கட்டாயம் வைத்திருக்க வேண்டும் என்னும் கட்டாயமும் இல்லை. நீங்கள் தமிழ் என்று ஓர் இணையத்தளம் உருவாக்க விரும்பினால் 'www.thamizh.com' என்று தான் அமைக்க வேண்டும் என்பதில்லை. வெறுமனே 'thamizh.com' என்றும் வைத்துக்கொள்ளலாம்.

உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கக்கூடிய இணையத்தளங்களாகிய 'twitter', 'wordpress' ஆகியன துணைத்திரளம் இன்றி தாம் இருக்கின்றன. வைய விரி வலை ('World wide web') என்பதன் சுருக்கமாகிய 'www' என்பது உலகம் முழுவதும் அறியப்பட்ட ஒன்று. அவ்வளவு தான்! அதனால் வேறு பயன் எதுவுமில்லை.

# தேன் கிண்ணம்



## மரங்கள்

அப்பமான மனித வாழ்வு
வெப்பம் கொண்டு தவிக்கையிலே
நுட்பமாய் நீ எமைக்காத்து
கப்பம் கோராத தெய்வமகன்.

பெட்டை பெடியள் என நீயிருந்து
சட்டை சேட்டை அணிவதில்லை
பட்டையே உந்தன் தேகத்தால் - என்று
ஏட்டைப் பிடித்த மனிதன் அறிவதில்லை.

நாதியற்ற மனிதனுக்கும்
சேதி கொடுப்பாய்
சாதியில்லா உந்தன் பணியை
பாதி மனிதர் நினைத்ததில்லை.

ஒட்டி வாழும் ஒட்டுண்ணி நீ
கட்டி விட்டு நிற்பவனா நீ
வட்டிகுட்டியோடு நீ வந்தால்
பட்டிதொட்டிகளில் தொங்கிவிடுவோம்.

தேகத்தை நீ உரசி
வேகத்தை நீ கொண்டு
பாகங்கள் பல கொண்டு
மோகம் நீ கொண்டுவிட்டால்
சோகமல்லோ நேரும் எமக்கு.

ஆண்டுகள் உருண்டோடினாலும்
வேண்டும் உந்தன் உயிர்
மாண்டு போகாத உங்களை
வண்டுகளே தேடுது.

சோற்றைத் தந்து
காற்றைக் தருவாய் - உன்
சாற்றைக் கொண்டு நோயைத் தீர்ப்பாய்
சேற்றிலும் உயர்ந்து நிற்பாய்.

மரங்கள் வளர்வது
வரங்களில் ஒன்றே
சிரங்கள் ஓங்கிநின்று
கரங்களால் மரங்கள் நடுவோம்.

ஜெயம் ஜெகன், 9ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

## பொற்காலம் சமைப்போம்

புதிய சகாப்தமொன்று
பூமியில் மலரட்டும்
புதுமைகள் புடைசூழ
பவனியில் வலம் வரட்டும்.

அடிமை விலங்கறுத்து
அவனியும் ஆளட்டும்
மிடிமை விடிந்திங்கு
நல்லொளி வீசட்டும்.

ஊரெங்கும் உறவுகள்
வேர்விட்டுப் போகட்டும்
உண்மையும் அன்பும்
சாந்தியாய் நிலைக்கட்டும்.

உரிமையும் உணர்வும்
புரட்சியாய் பூக்கட்டும்
புதிய ஜனனமொன்று
பொற்காலமாய் மிளிரட்டும்.

க.நாகேஸ்வரா, சண்டிலிப்பாய்.

## காலமெல்லாம் கூட இருப்பவள்

காதலித்துப் பார்
கவிதை வரும் என்றார்கள்.
பார்த்தேன்; காதலித்தல்ல
காதலிப்பவர்களை;
யாரும் கவிஞனாக இல்லையே!

விதைத்ததை அறுத்துவிடலாம்
நிலத்தில்...
நினைத்ததைக் கூட அறுக்க முடியாது
மனதில்...

ஏன் தாடி வளர்க்கிறாய் என்றால்-
"என் காதலி வருடிய இடத்தை
யாரும் தொட்டுவிடக் கூடாது"என்றான்.
மனைவியும் கூடத்தான் என்றான்
மறுபடியும்...

உன் காதலியை
மனைவியாக்குவதை விட
மனைவியைக் காதலியாக்கிப்பார்.
நிறையும்; மனம் மட்டுமல்ல
கஜானாவும் தான்.

உன் கஜானாவைக்
காலி செய்பவள் உன் காதலி
கடைசிவரை உனக்காக
உன் குழந்தைகளுக்காக
காலமெல்லாம் காத்துத் தருபவள்
உன் மனைவி.

பிறரைப் பாராட்ட உனக்குப்
பெரிய மனது வேண்டும்.
உன் மனைவியைப் பாராட்ட
விசாலமான இதயம் வேண்டும்.

R.S.ஆனந்தன், தும்பளை.

## 'சீ'...தனம்!

வாழ் வழி தெரியா வாலிபர்கள்
தமை விற்று தாம் வாழும்
சுயசந்தை வியாபாரத்தில் –தாமே
பலியாவதை தெரிந்து கொள்ள
நேரமில்லை!

ஆடம்பரமும் அதிகரித்துள்ள
வெளிநாட்டு மோகமும்
பல மடந்தைகளின்
வெள்ளைச் சேலைக்கும்
வெளிறிப் போன வாழ்வுக்கும்
வழிகாட்டிகளாய் உள்ளன!


எத்தனையோ எதிர்பார்ப்புகளுடன்
காத்திருக்கும் பெண்களின்
கனவுகளை உடைத்து
விருப்புகளை சிதைத்து
சீரழித்திடுவதும்
இந்த கேவலமே!

என்னென்னவோ
நிகழ்ந்தாலும் – சற்றும்
அசராமல் பரிமீதேறி
இன்றும் உலாவருகிறது
இந்த பாதாள சாக்கடை!

உன்னை நீயே நம்பியிரு
யாரோ ஒருவனின்
உதிர உழைப்பை வாங்கி
வாழ வழி தேடாதே!

இனியேனும் இந்த
சின்னத்தனமான
'சீ'தனம் வேண்டாம்!

இராமசாமி ரமேஷ்,
வவுனியா.



பெண்கள் பக்கம்...



# பொட்டு எப்படி வைப்பது?

பெண்ணின் முகத்துக்கு அழகைக் கொடுப்பதில் பொட்டும் முக்கியமானதொன்றாகும். ஒவ்வொரு வித்தியாசமான முகத்துக்கும் எப்படியான பொட்டு எனப் பார்ப்போம். சதுரமுள்ளவர்கள் நீளமாக பொட்டுகளை வைக்கக்கூடாது. அகலம் அதிகமுள்ள பொட்டுகளை வைத்துக்கொள்ளலாம். இவர்கள் வைத்துக்கொள்ளும் பொட்டுக்கள் நீளமானதாகவும், அகலம் குறைந்ததாகவும் இருக்கக்கூடாது. உருண்டை மற்றும் முட்டை வடிவிலான பொட்டுகள் இவர்களுக்கு பொருத்தமாக இருக்கும்.

வட்டவடிவ முகம் உள்ளவர்கள் நீளமான பொட்டுகளை உபயோகிக்கவேண்டும். நீளமான பொட்டு இவர்களது உருண்டை முகத்தை சற்று நீளமாக மாற்றியதுபோல் அழகுதரும். இவர்கள் நெற்றி குறுகலாக இருந்தால், அவர்கள் புருவங்களுக்கு மத்தியில் பொட்டு வைக்கவேண்டும்.



முக்கோண வடிவமுகம் கொண்டவர்கள் அநேகமாக எல்லாவகைப் பொட்டுகளும் பொருந்தும். நெற்றி அகலமாக இருந்தால், நீளமான பொட்டுகளை பயன்படுத்த வேண்டும். முக்கோண வடிவிலான பொட்டுகளும் இவர்களுக்கு நன்றாக இருக்கும். அகலமான நெற்றியாக இருந்தால், புருவத்தில் இருந்து ஒரு சென்ரிமீற்றருக்கு மேல் பொட்டுவைக்க வேண்டும்.

முகத்தின் வடிவம் மட்டுமின்றி உடை, சரும நிறம் போன்றவைகளும் பொட்டுடன் சம்பந்தப்பட்டதுதான். அதனால் அவைகளுக்கும் பொருத்தம் ஏற்படும் விதத்தில் பொட்டு வைக்கவேண்டும். கோதுமைநிற சருமப் பெண்களுக்கு எல்லா நிறப்பொட்டுகளும் பொருத்தமாக இருக்கும்.

# முதல் குழந்தையை அணுகுவது எப்படி?



முதல் குழந்தை பிறந்ததும், தாய், தந்தை இருவருக்குமே முதன் முதலில் பெற்றோரான மகிழ்ச்சி ஏற்படுகிறது. அதனால், இருவருமே அன்பு முழுவதையும் பொழிந்து முதல் குழந்தையை வளர்க்கின்றனர். இரண்டாவது குழந்தை பிறந்ததும், முதல் குழந்தையின் அன்பு பகிர்ந்தளிக்கப்படுகிறது. பெற்றோரின் அன்பை முழுமையாக அனுபவித்த முதல் குழந்தைக்கு, இதனால் ஏமாற்றம் ஏற்பட்டு அது ஏக்கமாக மாறுகிறது. எனவே, குழந்தையிடம் பாரபட்சம் காட்டாமல் வளர்க்க வேண்டும்.

முதல் குழந்தைக்கு அன்பு முழுவதையும் பொழிந்துவிட்டு இரண்டாவது குழந்தை வந்ததும் அதனை அதிகமாகப் பராமரிக்க ஆரம்பிக்கின்றனர். சிறுகுழந்தை என்பதால், இரண்டாவது குழந்தையைக் கொஞ்சுகின்றனர். இதில், ஆண், பெண் வித்தியாசமில்லை. பெரிய குழந்தையின் ஏக்கம் இரண்டாவது குழந்தையின் மேல் கோபமாக மாறுகிறது. இதை தவிர்ப்பதற்கு இரண்டாவது குழந்தை வயிற்றில் இருக்கும்போதே, "நீ தனியா விளையாடுகிறாய் தம்பியோ அல்லது தங்கை வந்தவுடன் சேர்ந்து விளையாடும்" என சொல்லிக் கொடுக்க வேண்டும். முதல் குழந்தையிடம் இரண்டாவது குழந்தையைப் பற்றிய ஆசையை வளர்க்க வேண்டும்.

தாயோ அல்லது தந்தையோ மற்றொரு குழந்தையிடம் அரவணைப்பைக் காட்டி "உன் சகோதரன் (சகோதரி)தானே, நீ விட்டுக் கொடுக்க வேண்டும்" என்பதை, நம் அன்பில் சிறிதும் குறையாமல் புரிய வைக்க வேண்டும். மேலும், அன்பு, உணவு என அனைத்தையுமே இரு குழந்தைகளுக்கும் சமமாகக் கொடுக்க வேண்டும்.

எக்காரணத்தைக் கொண்டும், ஒரு குழந்தையை மற்ற குழந்தையோடு ஒப்பிட்டுப் பேசக் கூடாது. தாழ்வு மனப்பான்மை உண்டாகாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். எந்த விதத்திலும் ஒன் ஆதிக்கத்தை மற்றொன்றின் மேல் செலுத்தாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இவையெல்லாம் அமைந்தால், சகோதர, சகோதரி பாசம் என்பது ஆயுள்வரை அன்புடன் நீடிக்கும்.



# பெண் விடுதலை

கு.அருணோதயா

பூவிலும் மென்மையென வர்ணிக்கப்படும் பெண்ணுக்குச் சமூகத்தின் ஒரு சாராரால் இழைக்கப்பட்டுவரும் அநீதிகள் கொடுமையானவை. இதற்கு சமூகக் கருவி உருவாக்கிய ஆண், பெண் வகிபாகம்தான் பெண்களின் தாழ்வுநிலைக்கு முக்கிய காரணமாகக் காணப்படுகின்றது. பெண் என்பவள் ஆரம்ப காலத்தில் அடக்க ஒடுக்குமுறைகளுக்குள் உட்பட்டிருந்தால், ஆண்களின் அதிகாரம் மேலோங்கி நிற்க பெண்கள் அவர்களுக்கு அடிபணிந்தவர்களாக காணப்பட்டார்கள். அதாவது அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு, அரசியல் எதற்கு? என்று அடக்கி ஒடுக்கி பெண்ணானவள் பருவம் எய்தவுடன் மணம் முடித்து, குழந்தைபெறுதல், கணவன் இறந்தவுடன் உடன்கட்டை ஏறுதல், பாலியல் சுரண்டல்கள், வன்முறைகள் என சொல்லொணாத் துயரங்கள் பெண்ணுக்கு இழைக்கப்பட்டிருந்த வேளை புரட்சிக்கவிஞரான பாரதி இவ்வாறான பெண்கள் ஒடுக்குமுறைகளை வேரோடு தகர்த்தெறிய முனைப்போடு போராட முன்வந்தார்.

சமூகத்தினால் வரையறுக்கப்பட்டிருந்த பெண்ணின் குணங்களான அச்சம், மடம், நாணம், பயிர்ப்புப் போன்றவை பெண்களுக்கல்ல, நாய்களுக்குத்தான் வேண்டுமாம். பெண்ணுக்கு நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, திமிர்ந்த ஞானச்செருக்கும் இருக்க வேண்டுமெனப் பாரதி தனது புதுமைப்பெண்ணின் விளக்கத்தை கொடுத்திருக்கிறார். "பெண்ணாகப் பிறப்பதற்கு பெரும் மாதவம் செய்ய வேண்டும்" என்றும் பெண்ணைச் சிறப்பித்துள்ளார். இவ்வாறு பல புரட்சிகர வரிகளினால் பெண்களுக்கு விளைவிக்கப்படும் அநீதிகளை மேலும் உலகுக்கு எடுத்துக்காட்ட பெண்ணிடம் பெண்ணியல்வாத அமைப்புக்கள், பெண்ணின் சார்ந்த மாநாடு, இயக்கங்கள் என்பன செயற்பட்டு வருகின்றன.

1980 களில் இருந்து சமத்துவக் கோட்பாடுகளையும், பெண்ணுரிமைகளைப் பெறச் செய்யப்படும் இயக்கங்களையும் குறிக்கப் பயன்பட்டுவரும் சொல்லே பெண்ணியமாகும். அதாவது சமூகத்திலே காணப்பட்ட பெண்களுக்கெதிரான சமூக பொருளாதார, பண்பாட்டு ரீதியிலான அடக்குமுறைகள், முன்னேற்றத்திற்கெதிரான தடைகள், வன்முறைகள் போன்றவற்றுக்கு எதிராகப் பெண்களால் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பே பெண்ணியவாத அமைப்பாகும்.

அந்தவகையில் தாராண்மைவாதக் கோட்பாடு, தீவிரவாதப் பெண்ணியவாதம், மார்க்சியம் பெண்ணியவாதம், சோலிசப் பெண்ணியவாதம், பண்பாட்டுப் பெண்ணியவாதம் போன்ற அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு முனைப்போடு போராடின. உலகில் பல இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த, வருகின்ற மாநாடுகளும் இதற்குப் பக்கபலமாகக் காணப்படுகின்றது. பெண்களின் உரிமைகள் மறுக்கப்படல் சீதனக் கொடுமைகள் என்ற பல்வேறுபட்ட வடிவங்களும் துயரங்களைச் சுமந்து வரும் பெண்களின் நிலையை மேம்படுத்தும் நோக்கமும், உருவாக்கப்பட்ட அமைப்பாக 1975 –1985 இற்கும் இடைப்பட்ட காலத்தில் ஐ.நா. பெண்கள் முன்னேற்றகரமான தசாப்தமாகத் தீர்மானித்து இதன் மூலம் பல பெண்ணியவாத அமைப்புக்களையும் பெண்ணிலைவாதிகளையும் செயற்படுத்தி அவர்களின் அழுத்தத்தின் விளைவினால் அபிவிருத்தி நிறுவனங்களும் பெண்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்துக்கான பல செயற்திட்டங்களையும், செயல்களையும், உலகளாவிய ரீதியில் முன்னெடுத்தன. மேலும் பெண்களின் பங்குபற்றல் அதிகரிப்பதன் மூலமே வேலை வாய்ப்புக்கள் வருமானம் ஆகியவற்றில் இவர்களது பங்கை அதிகரிப்பதுடன் பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த முடியுமென பல சிந்தனைகள் முன்வைக்கப்பட்டன.

அதனைவிட 95 இல் நடைபெற்ற றைகோ மாநாட்டில் பெண்கள் தொடர்பான உரிமைகள் பேசப்பட்டன. இவ்வாறான மாநாடுகள் அமைப்புக்கள் கோட்பாடுகள் சார்வழியில் இன்று மூன்று தசாப்தங்களாகச் சர்வதேச சமூகம் ஐ.நா. அரசுகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்ட முயற்சிகள் சர்வதேச அளவில் முன்னேற்றம் கண்டுள்ளன.

மேலும் அரசியல்துறைகளிலும், பெண்களின் முன்னேற்றகரமான பங்களிப்புக் காணப்படுகிறது. நிர்வாக உயர்மட்டப் பகுதிகளில் பெண்களே திகழ்ந்துள்ளார்கள். பல நாடுகளில் ஆட்சிப்பீடங்களில் அதிஉச்ச அதிகாரத்தைப் பெண்கள் தமது கைகளில் வைத்திருக்கிறார்கள். இப்போதும் சில நாடுகளில் வைத்துள்ளனர்.

**சமூகத்தினால் வரையறுக்கப்பட்டிருந்த பெண்ணின் குணங்களான அச்சம், மடம், நாணம், பயிர்ப்புப் போன்றவை பெண்களுக்கல்ல, நாய்களுக்குத்தான் வேண்டுமாம். பெண்ணுக்கு நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, திமிர்ந்த ஞானச்செருக்கும் இருக்க வேண்டுமெனப் பாரதி தனது புதுமைப்பெண்ணின் விளக்கத்தை கொடுத்திருக்கிறார். "பெண்ணாகப் பிறப்பதற்கு பெரும் மாதவம் செய்ய வேண்டும்" என்றும் பெண்ணைச் சிறப்பித்துள்ளார்.**

எனவே பெண்களுக்கு விளைவிக்கப்படும் அநீதிகளை இல்லாது செய்து பெண்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கும் முனைப்போடு பல செயற்திட்டங்கள் வந்த வேளையில்தான் பெண்கள்சார் பிரச்சினைகள் குறைந்து வருவதைக் காணலாம். எனினும் பெண்கள்சார் பிரச்சினைகளை முற்று முழுதாக ஒழிக்க முடியவில்லை. இன்று பெண்களுக்கு எதிராக சீதனக்கொடுமை கட்டவிழ்த்துவிடப்படுகின்றன. எத்தனையோ பெண்கள் இதனாலேயே தமது வாழ்க்கையைக் முதிர்கன்னிகளாகக் கழிப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. இவ்வாறு பல துஷ்பிரயோகங்களுக்கும் துன்புறுத்தல்களுக்கும் பெண்கள் முகங்கொடுக்கின்றனர்.

எனவே ஒட்டுமொத்தமாக நோக்குகின்றபோது பெண்கள் சார் பிரச்சினைகளை உலகுக்கு எடுத்துக்காட்டவும், மக்கள் மத்தியில் பரப்புரை செய்து விழிப்புணர்வை ஏற்படுத்தி பெண்களை அபிவிருத்திப் பாதையில் முன்னோக்கி நகர்வதில் அவர்களை அணிதிரட்டியும் ஒட்டுமொத்தமான வளர்ச்சிக்குப் பெண்கள் பங்காற்ற வேண்டும்.

## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :- 260**

கேள்வி : பாரதியார் புதுமைப்பெண்ணுக்கு இருக்க வேண்டுமெனக் கூறுபவை எவை?

பரிசு 1000/- ரூபா.

விடையைப் பக்கத்திலுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி, பரிசுப் போட்டி இல : 260**

**தினமுரசு வாரமலர், த.பெ.இல : 1772, கொழும்பு, த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- **22.03.2011**

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்.

பரிசுப் போட்டி இல:- 258 இற்கான விடை:- ப்ளீஸ், தாங்யூ, சொரி.

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:- கிருஷானி றேமன்ட், 41/3 மாப்பனாவத்துற வீதி, கண்டி

260

பெயர் : ..................................

முகவரி : ..................................

..................................

..................................

தே.அ. அட்டை இல : ..................................

விடை : ..................................

கையொப்பம் : ..................................




மிகவும் முக்கியமான ஒரு விசயத்துக்காக நான் சுற்றலாப் பயணி என்ற விசாவில் இங்கு வந்திருக்கிறேன். எங்களது திட்டத்தை நிறைவேற்ற என்ன விலை தரவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்!"

"நீங்கள் சொல்ல வருவது எனக்கு விளங்கவில்லை" கங்காபிரசாத் சுருட்டு ஒன்றைப் பற்ற வைத்தபடி சாய்வு நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்தார்.

"விலை மதிக்கமுடியாத மனிதர் ஒருவர் இன்னும் இரண்டு நாட்களுக்குள் இங்கு வந்துசேருவார். உலகம் முழுக்கத் தெரிந்த பயங்கரமான மனிதர். அவர் வருவது ஓர் அமைதி உடன்பாட்டுக்காக. அவர் பெயர் டாக்டர் டிக்சன். அவர் ஒரு விஞ்ஞானியும்கூட. அவரை உயிருடன் பிடிக்க வேண்டும்" என்றவன் தனது சூட்கேஜை மேசை மீது வைத்தான்.

"இதற்குள் ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள வெளிநாட்டுப் பணம் இருக்கிறது. இது வெறும் அட்வான்ஸ் மட்டும்தான்." அவர் சூட்கேஸைத் திறந்து நோட்டுக் கற்றைகளை எடுத்து வெளியே வைத்தார்.

கங்காபிரசாத் நோட்டுக் கற்றைகளை வெளியே பார்த்தார்.

"அப்படியானால் சாதாரண-மான ஒரு விசயத்துக்கு அவர் வரவில்லை என்று கங்காபிரசாத்துக்கு விளங்கியது. அது சட்டென்று செய்து தீர்க்கிற ஒரு செயலும் அல்ல. பேங்க் ஒன்றைக் கொள்ளையடிப்பதோ, கூட்டமாக ஒரு சிலரைக் கொல்வதோ கங்காபிரசாத்தைப் பொறுத்தவரை ஒரு பெரிய விசயம் இல்லை.

ஆனால், இது அப்படிப்பட்ட ஒன்று அல்ல.

ஒருவரை உயிருடன் பிடித்து ஒப்படைக்க வேண்டும். அதுவும் சாதாரணமான ஒரு மனிதர் அல்ல அவர். உலகப் புகழ்பெற்ற ஒரு பயங்கர இயக்கத்தின் தலைவர்.

அவரை இழப்பது என்பது அவரை வரவேற்கும் நாட்டுக்கு அது ஒரு தீராக்களங்கம். அதைப்போலவே, அந்த விஞ்ஞானியின் ஆட்களுக்கு இந்தச் செயல் ஒரு பெருத்த இழப்பாக இருக்கும்.

எனவே, இது அவ்வளவு சுலபத்தில் நிறைவேற்றக் கூடிய காரியம் அல்ல. மிகவும் எச்சரிக்கையுடன், திட்டமிட்டுச் செயற்பட வேண்டும். ரிமோட் கண்ட்ரோலைப் பயன்படுத்தி ஏதாவது ஒரு இடத்தில் வெடிகுண்டு வைப்பதைப் போல் அல்லாமல் கவனமாகச் செயற்பட வேண்டும்,

கங்காபிரசாத்தின் யோசனை, ஜான்ஸனுக்கும் விளங்கியிருக்க வேண்டும்.

"உங்களது யோசனை எனக்குப் புரிகிறது. இங்கு நாங்கள் நினைத்தாலும் செய்ய முடியாத காரியம் இது. எனவே, உங்களை அணுகியிருக்கிறோம். எங்களில் எவராவது அவர் வசிக்கும் பகுதியில் நடமாடினால் சந்தேகத்துக்கு ஆளாகிக் கைது செய்யப்படுவோம். ஆனால், உங்களுக்கு இப்படிப்பட்ட சிக்கல்கள் எதுவும் இல்லை. எனவேதான் உங்களிடம் உதவி கோருமாறு கேட்டு என்னை அனுப்பி வைத்திருக்கிறார்கள்!" ஜான்ஸன் தெளிவுபடுத்தினான்.

"புரிகிறது. எங்கள் கூட்டத்தில் அதற்குப் பொருத்தமான ஒருவர் இருக்கிறார். ஆனால், தற்சமயம் அவர் எங்கு இருக்கிறார் என்று தெரிய வில்லை." கங்காபிரசாத் கூறினார்.

"நீங்கள் குறிப்பிடுவது கிளாக்டைகரையா?" வந்தவன் கேட்டான்.

கங்காபிரசாத் மலைத்துப் போனார். "தன் மனத்திலிருப்பது எப்படி இவனுக்குத் தெரிந்தது?"

ஆள் மாறாட்டம் செய்வதில் உலக அளவில் கெட்டிக்காரன் என்று பெயர் எடுத்தவன் பிளைக்டைகர். ஒரு வகையில் அதில் அவனை மிஞ்சக் கூடியவர்கள் எவரும் இல்லையென்றே சொல்லலாம். ஆனால், தற்சமயம் அவன் எங்கு இருக்கிறான்? அவனிடம் ஒரு வேலையை ஒப்படைத்தால் தைரியமாக இருக்கலாம். கடந்த முறை என்னவோ ஒருதவறு நிகழ்ந்திருக்கிறது. ரிமோட்டும் அந்த நேரம் செயற்படவில்லை. இல்லாவிட்டால் அந்த வெடிகுண்டு சம்பவத்திலும் நிச்சயமாக அவன் வெற்றி பெற்றிருப்பான்.

கங்காபிரசாத்தின் ஆட்கள் வெடிகுண்டை இயக்கும் ரிமோட்டைச் செயல்படுத்தியும் அந்தக் கார் வெடிக்காததால் அவர் அந்த முடிவுக்குத்தான் வந்தார். அதனால் எலட்ரோனிக்ஸ் இன்ஜினியர் கண்டபடி திட்டுவாங்கினார்.

"பிளைக் டைகர் சிறையிலிருந்து தப்பித்த தகவல் எனக்குத் தெரியும். அவர் இந்த ஊரில்தான் இருக்கிறார் என்பதும் தெரியும்." ஜான்சன் கூறினார்.

அப்போது ராபின்சன், சாராம்மாவின் பங்களாவிலிருந்து வெளியேறினான். சாராம்மாவின் மாருதிக் கார் அவர்களை ஓட்டல் வரை சுமந்து சென்றது.

ராபின்சன் சீக்கிய வேடத்தில் இருந்தான். ரோஸியும் பஞ்சாபிப் பெண்மணியாக வேடம் போட்டிருந்தாள். சரியான பஞ்சாப் தம்பதி.

கார் ஓட்டலின் போர்ச்சில் நின்றது. தகவல்கள் பரிமாறப்பட்டன.

பழைய அறையே மறுபடியும் கிடைத்தது.

அறைக்குள் நுழைந்தவுடன் அவன் சாராம்மா ஜேக்கப்புக்குப் போன் செய்தான். கார் ஓட்டல் வாசலிலேயே உள்ளதால் எடுத்துச் செல்லுமாறு தெரிவித்தான்.

அடுத்த ஒரு சில நிமிடங்களுக்குள் போன் மணியடித்தது.

'உடனே பார்க் பகுதிக்கு வரவேண்டும். விஷயம் மிக முக்கியம்!' என்பது தகவல். பெயர் சொல்லவில்லையானாலும் பேசிய கங்காபிரசாத் என்பது ராபின்சனுக்கு விளங்கியது.

எப்படியாவது கங்காபிரசாத்திடம் செல்லவேண்டும் என்று ராபின்சனும் அப்போது விரும்பினான். தன்னுடைய தலைமறைவு வாழ்க்கைக்கு அது பாதுகாப்பான ஓரிடம் என்பதில் ராபின்சனுக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை. சாராம்மா ஜேக்கப்பின் வீட்டில் தங்கியிருப்பது ஆபத்தான விஷயம் என்பது எஸ்.பி.யைச் சந்தித்த பிறகு புரிந்தது.

"ரோஸி, நாம் உடனே கிளம்ப வேண்டும். இங்கு அவரின் ஆட்கள் இருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. உடனே தகவல் போயிருக்கிறது. நாம் அங்கு செல்வதுதான் பாதுகாப்பு. உடனே கிளம்பு."

"நாம் வந்த கார் வாசலிலேயே நிற்கிறதே?" ரோஸி கேட்டாள்.

"பரவாயில்லை.. அந்த பார்க் அருகே விட்டுவிட்டுத் தகவல் தெரிவிப்போம்."

அவர்கள் உடனே கிளம்பவும் செய்தனர்.

(தொடரும்....)

# ஈழத்தின் முதற் பெண் கவிஞரும் முதற் பெண் மொழிபெயர்ப்பாளருமான

## பண்டிதை பத்மாசனி அம்மாள்

ஈழத்தின் முதற் பெண் கவிஞராகப் பண்டிதை பத்மாசனி அம்மாளை முதன் முதலில் இனங்கண்டு இக்கட்டுரை ஆசிரியரால் முன்வைக்கப்பட்ட கருத்து (ஞானம் நூறாவது இதழில் இடம்பெற்ற புலோலியின் பெண் கல்விப் பாரம்பரியம் என்னும் கட்டுரை) இன்று பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஈழத்தின் நவீன கவிதை பற்றிய முனைப்பான ஆய்வுகளை மேற் கொண்டுவரும் கலாநிதி செ.யோகராசா அவர்களும் தமது "ஈழத்துப் பெண்கள்-வளர்ச்சியும் தளர்ச்சியும் வளமும்" என்னும் கட்டுரையில்,

"ஈழத்தில் மரபுக்கவிதை எழுதிய முதற்பெண் கவிஞர் பண்டிதை இ.பத்மாசனி அம்மாள் அவர் எழுதிய முக்கியமான நூல் புலோலி பசுபதீஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி ஆகும்." என இக்கருத்தை முழுமை யாக ஏற்றுக் கொள்கிறார். (ஜீவநதி-கார்த்திகை- மார்கழி 2009) ஈழத்தின் முதற் பெண் கவிஞராகப் பண்டிதை பத்மாசனி இராசேந்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதை அடுத்து அவர் பற்றிய தொடர்ச்சியான தேடுதல்களின் விளைவாக அவரை ஈழத்தின் முதற்பெண் மொழி பெயர்ப்பாளராகவும் நூல் வெளியீட்டாளராகவும் கொள்வதற்கான ஆதாரங்கள், அவர் எழுதிய கட்டுரைகள் எனப் பல விடயங்கள் இன்று சேகரிக்கப்பட்டுள்ளன. எனது மாணவர் சமரபாகு சீனா உதயகுமாரின் விடாமுயற்சி யால் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் பத்மாசனியின் மகன் டாக்டர் ரவீந்திரன் மூலம் அம்மையாரின் புகைப்படம், பிறந்த, இறந்த திகதிகள் பற்றிய தகவல்கள் முதலியவற்றைப் பெறவும் முடிந்துள்ளது. கிடைத்த தகவல்களை ஒரே பார்வையில் தொகுத்துத் தருவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**1.பிறப்பும் கல்விப்பின்னணியும்.**

பத்மாசனி புலோலியிலே நமசிவாயம் தங்கரத்தினம் தம்பதிகளின் மகளாக 06.06.1903 இல் பிறந்தார். சைவத்தமிழ்ப் பெண்கள் கல்வி கற்பதற்கெனப் பாடசாலைகள் இல்லாத அக்காலத்தில் தமது வீட்டுச் சூழலிற் கிடைத்த திண்ணைக் கல்வி மூலமே தமது அறிவை யும் கவித்துவத்தையும் வளர்த்துக் கொண்டார். பத்மாசனியின் தாயாரான தங்கரத்தினத்தின் குடும்பம் சிறந்த கல்விப் பாரம்பரியம் கொண்ட குடும்பம் ஆகும். இவ்விருவரின் சகோதரியான 'பாறாய்ச்சி' என்று அழைக்கப்பட்ட பார்வதி அம்மையார் பேரப்பிள்ளை களான பத்மாசனி, பாலாம்பிகை ஆகிய இருவரையும் தமது கற்பித்தல் மூலம் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதைகள் ஆக்கியவர். மருமகனான சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார், பேரனான குருகவி ம. வே. மகாலிங்கசிவம் ஆகியோரும் பார்வதி அம்மை யாரிடம் கல்வி கற்றவர்களே.

பார்வதி அம்மையார் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளையும் உடுப்பிட்டி சிவசம்புப் புலவரிடம் கற்றவர். வடமொழியிலுள்ள வான்மீகி இராமாயணச் சுலோகங்களை வாசித்துத் தமிழில் விளக்கம் சொல்வதி லும், தொல்காப்பிய இலக்கணத்தைக் கதைசொல் வது போலக் கற்பிப்பதிலும் வல்லவர். பத்மாசினி, பாலாம்பிகை ஆகிய இருவரும் பார்வதியிடம் கல்விகற்றதையும் பண்டிதர்பட்டம் பெற்றதையும்,



**'திருந்து செந்தமிழ்நூல் பல எனக்கு அருள்செய்த அருந்தவக் கலைக் கடல்நிகர் பார்வதியார் பால் பரந்த மாமதுரைத் தமிழ்ச் சங்க பண்டிதையாய் பொருந்துகின்ற பாலாம்பிகையொடும் தமிழ் பயின்றாள்.'**

**'மாடமாளிகை வான் நிமிர் மதுரையம் பதியில் கூடுகின்ற நாலாம் தமிழ்ச்சங்கத்திற் குழிஇய ஞாடு சீரிசைப் புலவர்கள் நயந்து இனிது அளித்த பாடு செந்தமிழ்ப் பண்டிததைப் பட்டமும் படைத்தாள்'**

என ம. வே. மகாலிங்கசிவம் குறிப்பிடுகின்றார். (புலோலி பசுபதீசுவரர் பதிற்றுப் பத்தந்தாதி பாயிரம்) பண்டிதை பத்மாசினி புலோலியைச் சேர்ந்த இராஜேந்திரா என்பவரைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு இரவீந்திரன், இந்துமதி ஆகிய இரு பிள்ளைகள். பண்டிதை பத்மாசனி அம்மையார் 1978.10.11 இல் தமது 75 ஆவது வயதிற் காலமானார்.

**2. ஈழத்தின் முதற் பெண் கவிஞர்**

அண்மைக்காலம் வரை ஈழத்தின் முதற்பெண் கவிஞ ராக மலையகத்தைச் சேர்ந்த திருமதி மீனாட்சி நடேசைய ரையே கொள்ளும் மரபு இருந்து வந்தது. இவர் மலையகத் தொழிற்சங்கவாதி யும் இலக்கியவாதியுமான கோ. நடேசையரின் மனைவி என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் இவர் 1930 களிலேயே கவிதைகளை இயற்றினார். ஆனால் 1925 இல் வெளிவந்த பண்டிதை பத்மாசனியின் புலோலி பசுபதீசுவரர் பதிற்றுப் பத்தந்தாதி பற்றிய தகவல் வெளிவந்த பின்னர் ஈழத்தின் முதற்பெண் புலவருக்குரிய மதிப்பை அவர் பெறத் தொடங்கியுள்ளார்.

பா. மகாலிங்கசிவம்

பண்டிதை பத்மாசனியின் புலோலி பசுபதீஸ்வரர் பதிற்றுப் பத்தந்தாதி புலோலியிலே கோயில் கொண்டுள்ள பசுபதீஸ்வரர் மீது பாடப் பெற்ற 100 பாடல்களைக் கொண்டது. இவற்றுடன் கடவுள் வாழ்த்தாக ஒரு பாடலும் உள்ளது.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)




# அடையப்பட வேண்டிய இலக்கிற்கு அணுகப்பட வேண்டிய நடைமுறை

**சிறுபான்மை மக்களுக்கான உரிமைகளை அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ள இந்தத்தீவில் பெரும்பான்மை மக்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கும் அரசாங்கத்துடன் அவர்கள் பேசவேண்டும் என்பது யதார்த்தம்.**

**எதிரிகளை உருவாக விடாமல் பார்த்தபடியும், அவர்களுக்கு வன்முறை வாய்ப்பைக் கொடுக்காதபடியும் சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் ஈடுபடுத்துவதன் மூலம் நிதானமுடன் சாதிப்பதே சமூகத்தைச் சிதைத்துவிடாது முன்னகர்த்தும் வழிமுறை.**

"**நாங்கள்** புலிகள் கேட்டதைக் கேட்கவில்லை, அதற்கு முன்பே தந்தை செல்வநாயகம் கேட்டதையே கேட்கிறோம்" என்று அரசை மடக்கி தமிழ்மனங்களைப் புல்லரிக்க வைக்கும் 'பொயின்ற்'களை தேர்தல் மேடைகளில் விளாசிவரும் கூட்டமைப்பினர், அந்த ஆகடியத்தை அத்துடன் நிறுத்தினால் பரவாயில்லை. அதற்குமேல் அவர்கள் மக்களுக்கு ஏத்தும் அதே பழைய ஊசிதான் பயங்கரம். அது இன்னும் கிருமிநீக்கம் செய்யப்படாமலே உள்ளது. அவர்களின் தேசியத் தலைவர், தலைவரின் தாய் இறப்புகளாலெல்லாம் அவர்கள் மனங்கலங்கிப் போனாலும் கொள்கைப் பிடிப்பில் இம்மியும் மாறவில்லை என்பதற்கு நாம் வியப்பதா திகைப்பதா தெரியவில்லை! மிகத் தூய்மையான எல்லாம் நிறைந்த ஒரு தீர்வுக்காக கடைசி உயிர்வரை அழிக்கும் திட்டத்தில் இவர்கள் இன்னும் விடாப்பிடியாக உள்ளார்கள் என்ற நடுக்கமே உண்டாகிறது. "வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டித் தீர்வையே நாம் கேட்கிறோம். அதை அவர்கள் தரப்போவதில்லை. அதை அம்பலப்படுத்தவே பேச்சுவார்த்தைக்குப் போகிறோம" என்பதற்கே இப்போதும் வாக்குகள் விழும் என்று நம்பும் சூழல் இங்குள்ளதென்றால் என்ன மாதிரியான ஒரு சமூகம் நாம்?

அரசாங்கம் தர முடியாததைக் கேட்பது; அதன்மூலம் எதிர்ப்புணர்ச்சியைப் பெருக்குவது; முறுகல் நிலைமை தணியவிடாமல் பார்த்துக் கொள்வது; கொள்கை-இலட்சியம்-இனக்குழுப் பெருமை-தனித்துவத்திற்காக எதையும் இழக்கலாம் என்ற உணர்ச்சிகரத்தில் கொந்தளிக்கும் திரளாக மக்களை வைத்திருப்பது; எதிர்ப்பு வீரவசனங்களால் தேர்தலுக்குத் தேர்தல் வாக்குகளை வேட்டையாடிக் கொள்வது." அத்துடன் எல்லாம் (தலைவர்களுக்கு) இனிதாய் முடிந்துவிடுகிறது. மக்களின் கஷ்டங்களோ தொடர்கிறது. புலிகள் முடிந்து இரண்டு வருசமான பிறகும் இந்த நாடகத்தையே இவர்கள் வெற்றிகரமாகத் தொடர்வதற்கு இயலுகின்ற நம் அறிவுச்(!)சமூக நிலையை என்ன சொல்ல?

சிறுபான்மை மக்களுக்கான உரிமைகளை அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ள இந்தத் தீவில் பெரும்பான்மை மக்களால் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் அரசாங்கத்துடன் அவர்கள் பேசவேண்டும் என்பது யதார்த்தம். பேசி அவர்களிடம் தீர்வைப் பெறமுடியாது என்று கண்டுகொண்டவர்கள் என்றால் அவர்கள் என்ன செய்யலாம்? ஏனைய உலக நாடுகள் அரசாங்கங்களிடம் நம் பிரச்சினையை எடுத்துப்போகும் முயற்சிக்குச் சமாந்தரமாக இந்தத் தீவிலுள்ள அனைத்துத் தரப்பு மக்கள் மனங்களுடனும் பேசுவது முக்கியமல்லவா? அப்போதுதானே நம் கோரிக்கைகளின் நியாயத்தன்மை துலங்கவும் எடுபடவும் வாய்ப்பிருக்கிறது? யுத்தம் முடிந்த சூழலிலும் அதற்கு வாய்ப்பில்லை என்று சொல்லிக் கொண்டிருக்க முடியுமா? முஸ்லிம், மலையக மக்களிடமும் பிறகு சிங்கள பொதுமக்களிடமும் நம் நியாயத்தை விளங்கப்படுத்தாமல், அவர்களின் கணிசமான ஆதரவை பெற்றுக்கொண்டு முன்செல்ல முற்படாமல் அரசாங்கத்தை, உலகத்தைச் சாடிக்கொண்டிருந்து ஆகப்போவதென்ன? தனி நாடு, சமஷ்டி, முழு அதிகாரம் என்று உதார் விட்டுக்கொண்டே இருப்பதுதான் அரசாங்கத்தையும் ஏனைய தரப்பு மக்களையும் இணக்கத்திற்கு நகர்த்தும் வழியா?

அரசாங்கம் தரமுடியாத தீர்வையே நாம் கேட்டுக் கொண்டிருப்போம்; பெரும்பான்மை மக்களும் நம் தீர்வை ஒப்புக்கொள்ளவே மாட்டார்; நமக்கு அநீதிகள் தொடர்ந்து நடந்தபடியேதான் இருக்கும் என்கிற வெறுப்பிலும் விரோதத்திலும் மக்களைத் திரள வைத்து, இப்போதும் இந்தத் தீவுக்குள் விலகித் தனிப்படுத்திக் கொண்டிருப்பதன் மூலம் என்ன செய்ய உத்தேசிக்கிறீர்கள்? மீண்டும் "புலியிச"க் கனவுக்குள் அமிழ்த்தி, "அழியும் மக்களின் ஆக்ரோச எம்.பிக்களாய்" வருவது ஒன்றுதானா நினைப்பு? 'சிங்களவனைப் பழிக்குப் பழி வாங்காமல் தமிழனுக்கு வாழ்வில்லை" என்று, இங்குள்ள நிலைமை பற்றி ஒரு சுடலையும் அறியாமல் உசார் பீலா விட்டுக் கொண்டிருக்கும் அயலக, உலகத் தமிழர்களின் உருவாட்டம்தானா உங்களுக்கும் இனிக்கிறது? வாழ்வைத் தொலைத்துவிட்டு வதைபடுதலில் தமிழ்வீரச் சிலிர்ப்பைக் கண்டுகொள்ளும் பழங்குடி ரோசத்தில் வெளியுலகார் திளைக்கலாம். வதைபடும் மக்களிடம் வாக்குகளுக்குப் போகும் நீங்களுமா அவர்களுக்கு வால்முறுக்கி விடுவது?

பேச்சுவார்த்தையில் பிரயோசனமில்லை, எதிர்த்தரப்பு சரிவரவே மாட்டாது என்ற கண்டுபிடிப்புகள்தானா இப்போதும் உங்கள் வழிகாட்டல்? அவ்வளவுதானா பகைமறப்பும் மீளிணக்கமும்? தமிழ்மக்கள் எங்களை ஏகப்பிரதிநிதிகளாய்த் தெரிவுசெய்து விடவேண்டும். அதன்பிறகுதான் விசயத்தை வெல்லலாம் என்று பந்தை மக்கள் பக்கம் அடித்து விட்டிருக்கிறீர்கள். பந்தைக் கையில் பிடித்து வைத்துக் கொண்டு செய்வதறியாமல் நாங்கள்! எல்லோரும் ஒத்து உங்கள் பின்னால் நிற்க வேண்டும். அந்தப் பலத்தில் நீங்கள் அரசை மிரட்ட வேண்டும். அவர்கள் பதறித் துடித்து உங்கள் கையில் தீர்வைத் தந்துவிட வேண்டும். ச்சாய்... நினைத்துப் பார்க்கவே எவ்வளவு ஜிலுஜிலுப்பாய் இருக்கிறது. இந்த சாதாரண விசயம் விளங்காமல் துரோகிகள் ஆளுக்கொரு கட்சி வைத்துக்கொண்டு அலைகிறார்கள். இவர்களை எல்லாம் என்ன செய்வது? அவங்கள் (புலிகள்) வேறு இல்லை. கொடுமை!

ஒற்றுமைப் பந்து எங்கள் பக்கம் இருக்கும் வரை நீங்கள் விளையாடாமல் இருப்பதை கேள்வி கேட்க முடியுமா? நீங்கள் சொல்வதையெல்லாம் கேட்டுக் கலங்கி, இந்த ஒற்றுமை கெட்ட தமிழ்ச்சாதியை எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

மலையைத் தூக்கிக் கொண்டு நடப்பேன் என்று உதார் விட்டுக் கொண்டிருந்த பயில்வான் கதை கேட்டிருக்கிறோமல்லவா! ஊரிலுள்ள எல்லோருமாய்ச் சேர்ந்து அந்த மலையைத் தூக்கி என் தோளில் வைத்துவிடுங்கள். அதன்பிறகு பாருங்கள் என் கெட்டித்தனத்தை என்ற கதைதான். வெறுப்பும் பழிவாங்கும் உணர்ச்சியும் மறையாமல் இணக்கமும், இணைந்து முன்னேறும் வாழ்வும் எப்படிச் சாத்தியமாகும்? கோபம், பகை, விரோதம் போன்றவற்றைக் கைவிடாமல் நல்லிணக்க வாழ்வுக்கு எப்படி வாசல் தெரியும்? ஒரு சாமுராய் வீரன் ஸென் துறவியிடம் வந்து கேட்டான்:

"சொர்க்கத்திற்கு நரகத்திற்குப் போவதற்கென்று வாசல் ஏதும் உண்மையாகவே இருக்கிறதா?"

துறவி அவனைப் பார்த்தபடியே சொன்னார்:

"உன்னைப் பார்த்தால் வீரனைப் போலவே இல்லையே. பிச்சைக்காரனைப் போலல்லவா இருக்கிறாய்!"

சாமுராய் கோபமடைந்து வாளை உருவினான். அதனைக் கண்ட துறவி, "இந்த மொட்டைக் கத்தியை வைத்தா என்னைக் கொல்லப் போகிறாய்?" எனக் கேலியுடன் கேட்டார்.

கோபம் தலைக்கேற வாளுடன் துறவியைக் கொல்ல நெருங்கினான் சாமுராய். சிரித்துக்கொண்டே துறவி சொன்னார்: "இப்போது பார்த்தாயா நரகத்தின் கதவு திறப்பதை."

சாமுராய் தன்னை உணர்ந்தவனாக வெட்கத்துடன் வாளைக் கீழே போட்டான்.

உடனே துறவி சொன்னார்: "பார்த்தாயா சொர்க்கத்தின் கதவு திறப்பதை."

கடந்தகாலத் தவறுகளைத் தூக்கிப் பிடித்தபடி, வெறுப்பைத் தூண்டி வளர்த்து, இணக்கம் காண முடியாதவர்களாக எதிரிகளைச் சித்தரித்து, துவேசத்தில் மக்களைக் குழுவாகத் திரட்டிப் பழிதீர்ப்பு மனோநிலையில் வைத்திருப்பது பகைமறப்பு " நல்லிணக்கத்தின் பாதையல்ல. இது வன்முறை அரசியலின் எச்சமே.

சுயநல நோக்குடன் பிறர் மீதான வெறுப்பையும், பிறருடன் சேர்ந்து வாழ முடியாமைக்கான நியாயங்களையும், மோதல்களையும் முன்னிலைப் படுத்துகிறவர்கள் அரசியல்வாதிகளாக இருந்தாலும் சரி, அறிவுஜீவிகளாக இருந்தாலும் சரி மானுட அழிவும் அவலமும் கஷ்டங்களும் அவர்களுக்குப் பொருட்டே அல்ல. அவற்றைக் கொள்கைப்பிடிப்புக்குக் கீழ்ப்படுத்தியே சிந்திப்பார்கள். தங்களது வீம்பு, ரோச, பிளவு அரசியலின் மூலம் மக்கள் ஆயிரம் இலட்சம் என அழிந்தால் கூட அந்த அழிவையே எதிரிக்கு எதிரான ஆயுதமாக மாற்றிக்கொள்ள முடியும் என்றுதான் அவர்கள் யோசிப்பார்கள். அதை எந்த மனச்சாட்சி உறுத்தலும் இல்லாமல் செய்ய இனக்குழு ரோசம் அவர்களை வழிநடத்தும். மக்கள் குருதி பெருக்குவதும், வீடிழந்து, தொழிலிழந்து, உருக்குலைந்து உலைவதும் இலட்சியப் பயணத்துக்கான உரம் சேர்ப்பே என்று பிரசாரப்படுத்தவும் தயங்கார்.

எதிரிகளை உருவாக்கி பிரம்மாண்டப்படுத்தி வெறுப்புக்குரியவர்களாக்கி அவர்களோடு பொருதுவது வன்முறையின் வழிமுறை. இது மக்களின் பேரழிவை பாடுகளை புறக்கணிக்கும். மாறாக, எதிரிகளை உருவாக விடாமல் பார்த்தபடியும், அவர்களுக்கு வன்முறை வாய்ப்பைக் கொடுக்காதபடியும் சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் ஈடுபடுத்துவதன் மூலம் நிதானமுடன் சாதிப்பதே சமூகத்தைச் சிதைத்துவிடாது முன்னகர்த்தும் வழிமுறை. நம் தலைவர்களிடம் நாம் வேண்டுவது இதையே; கொந்தளிக்க வைக்கும் அவர்களது பேச்சுக்களை அல்ல. ■

மாந்திரீக நல்வழி களஞ்சியம்




01.கடமையையும், உண்மையையும் இரு கண்களாகக் கொண்ட என் அருள்ஞான சித்தத்தால் செவ்வாய் குற்றத்தால் வயது ஏறிக்கொண்டு போகும் பெண்களுக்கு உடன் திருமணம் நடைபெற எம்மால் 13 வாரங்களுக்கு அதாவது 3 மாதம் 7 நாள் வரை செவ்வாய் கிழமை வரும் ராகு காலத்தில் 3 மணி முதல் 4.30 வரை இவர்களுக்காக அவர்களின் பெயர் நாமத்தில் வரும் 11 தேசிக்காயில் ஸ்ரீ துர்க்கை அம்மனுக்குக் குங்கும அபிஷேகம் செய்ய இந்தக் குறிப்பிட்ட நாட்களுக்குள் குறிப்பிட்ட ஜாதகம் பொருந்தக்கூடிய ஜாதகன் வந்து சேருவார்.

02.இன்னும் கணவன்-மனைவி பிணக்குத்தீர மன்மத ஆகாசன் வேர் தலையணையில் வைத்து உறங்கிவர கணவன்-மனைவி பிணக்குத் தீரும்.

03.மாமன் மாமி சண்டை, விட்டுப்பிரிந்த கணவர், விட்டுப் பிரிந்த உறவு, விவாகரத்துப் பெற்றவர்கள், கல்வியில் கவனம் எடுக்க, தொழிலை உன்னிப்பாகக் கவனிக்க, அனைத்துக்கும் தெய்வீக மூலிகை வசியம் என்னிடம் உண்டு.

தனிப்பட்ட நபரின் தெட்டத் தெளிவான ஜாதக கணிப்பின் பின்பே பரிகார முறைகள் கையாளப்படும். நல்லது நினைக்க நல்லது கிட்டும்.

கௌரவ பேராசிரியர் தேசபந்து P.K.சாமி (J.D.G.A.N)JP ஜபா ஸ்ரீ துர்க்கா தேவி மாந்திரீக ஞான பீடம். இல.162,கொட்டாஞ்சேனை வீதி, மேபீல்ட் ரோட், கொழும்பு-13. 011-2470615, 011-2342463, 011-2342464 FAX 0094-112344831 நுவரெலியா கிளை - இல. 33, தினசரி சந்தை கட்டிடம் 052-2222508. (C/441)

மனோதத்துவ வைத்தியம்
General Psychotheraphy

அகில உலகெங்கும் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களிற்கு அறிமுகமான பிரபல மனோதத்துவ Dr.P. ஆறுமுகம் அவர்கள் பல நூற்றுக்கணக்கான இளைஞர்களின் இல்லற வாழ்க்கைக்குப் புத்துயிர் கொடுத்து பலரின் பாராட்டையும் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் குழந்தை இல்லாமல் இருந்த சிலருக்கு எனது மனோதத்துவ வைத்தியம் மூலம் குழந்தை கிடைத்தமைக்கு ஆதாரம் உண்டு.

தொடர்புகளிற்கு
Dr.P.ஆறுமுகம்,
51/$_{5}$, கூழாவடி வீதி,
மட்டக்களப்பு

T.P:0652224019
Hotline:0719315664
0777569205

யாழ். கொழும்பு முகவரிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

ICC Cricket World Cup 2011

# அயர்லாந்தின் நாயகன்

உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின் பதினைந்தாவது ஆட்டம் 'B' பிரிவில் இங்கிலாந்து எதிர் அயர்லாந்து. இந்த ஆட்டம் ஒரு அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியது. ரசிகர்கள் அறியாதது ஒன்றும் இல்லை. ஆனால் அயர்லாந்து தனது கை நழுவிப் போய்க்கொண்டிருந்த ஒரு ஆட்டத்தை என்ன மாதிரி வெற்றிப் பாதையில் திருப்பியது என்பதுதான் ஆச்சரியம். அந்த ஆச்சரியம் வேறு யாரும் இல்லை. கெவின்ஜோசப் ஓ பிறையன்தான். 328 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு ஓடிக்கொண்டிருந்த அயர்லாந்துக்கு 30 ஓவர்கள் முடிவில் இன்னும் 162 ஓட்டங்கள் தேவைப்படும் நிலை. சராசரியாக ஓவருக்கு 8 ரண்களுக்கு மேல் சேர்க்கப்பட வேண்டும். ஐந்து விக்கெட்டுக்களையும் இழந்திருந்த நிலையில் புதியமாற்றம் ஒன்று ஏற்படுகிறது. கெவின் ஓ பிறையன் மற்றும் குஷாக் 32 ஆம் ஓவரை Batting Power Play யாக எடுக்கிறார்கள். கெவின் ஓ பிறைனின் அதிரடி தொடர்கிறது. மொத்தத்தில் 5 ஓவர்களிலும் 62 ஓட்டங்கள் குவிக்கப்படுகின்றன. ஆட்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. கெவின் ஓ பிறையன் 30 பந்துகளில் ஐம்பது ஓட்டங்கள் எடுக்கிறார். மிகுதி 50 ரண்களை இருபதே இருபது பந்துகளில் எடுக்கிறார். மொத்தம் 50 பந்துகளில் சதம் அடிக்கிறார். இவர் குவித்த ஓட்டங்கள் 113. இதில் சிக்ஸர்கள் 6, பவுண்டரிகள் 13, பின்னர் நடந்தது இங்கிலாந்தின் வீழ்ச்சி. 2007 இல் 66 பந்துகளில் மத்தியூ ஹைடன் அடித்த உலகக்கிண்ண அதிவேக சதம் என்ற சாதனை தொலைந்து போகிறது.

அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையைத் துரத்திப் பிடித்த அணி என்ற பெருமையும் அயர்லாந்துக்கு வருகிறது. அயர்லாந்து கிரிக்கெட் அணி புறந்தள்ளப்படக்கூடிய அணியல்ல என்ற பதிவும் ஏற்படுத்தப்படுகிறது. இங்கிலாந்து கிரிக்கெட் அணி அதிர்ச்சியில் உறைகிறது. எதிர்வரும் ஆட்டங்களில் இந்தியா, மே.இந்தியத் தீவுகள், தென் ஆபிரிக்கா, கனடா அணிகளுக்குக் கெவின் ஓ பிறைய்ன் மிகவும் அவதானத்துடன் நோக்கப்படும் வீரராக இருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை.

அதோடு அயர்லாந்து அணி வீரர்கள் பதினைந்து பேரில் பதின்மூன்று பேர் தொழில்சார் கிரிக்கெட் ஆடுபவர்கள். எனவே கிரிக்கெட் பற்றி நிறையவே அறிந்தவர்கள். ஆபத்தானவர்கள்.

**யார் இந்த கெவின் ஓ பிறைய்ன் சகலதுறை வீரரான இவர் 1984 இல் பிறந்தவர். அயர்லாந்தின் 19 வயதுக்கு உட்பட்ட அணியில் 2004 இல் விளையாடியவர். இவரது திறமையின் காரணமாக அடுத்த வருடத்தில் MCC இளைஞர் அணியில் இடம் பிடித்தவர். 2006 ஆம் ஆண்டு அயர்லாந்து தேசிய அணியில் இடம்பிடித்தார். அந்த ஆட்டம் இங்கிலாந்துக்கு எதிரானதாகும். மேலும் 2009 இல் இங்கிலாந்தின் நொட்டிஸ்ஷயரில் இணைந்து விளையாடியவர். அயர்லாந்து கிரிக்கெட் சபை ஆறு வீரர்களை மட்டுமே ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துள்ளது. அதில் கெவினும் ஒருவர்.**



KEVIN O' BRIEN
'அச்சாணி'

# விளையாட்டு

ஜோசப் கிருஸ்ணா

# அதிதீரன் இவன்தானோ?

கென்யாவுக்கு எதிரான முதல் சுற்றுப் போட்டி ஆட்டத்தில் லசித் மாலிங்க Hattrick சாதனை பற்றியே ஊரெல்லாம் பேச்சு. அதற்கு முதல் நாள்தான் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வேகப்பந்து வீச்சாளர் கீமர் றோச் நெதர்லாந்துக்கு எதிராக ஒரு ஹெட்ரிக் சாதனை புரிந்துள்ளார். இந்த 2011 உலகக்கிண்ணப் போட்டிகளில் லசித் மாலிங்கவின் ஹெட்ரிக் இரண்டாவது ஆகும். அதே போல லசித்தின் இரண்டாவது ஹெட்ரிக் சாதனையும் இதுவாகும். இதுவரை உலகக் கிண்ணப் போட்டிகளில் 07 ஹெட்ரிக் சாதனைகள் பதியப்பட்டுள்ளன.

எல்லா ரசிகர்களும் 2011 இன் சாதனை பற்றிப் புகழும் போது, லசித் முன்னதாக 2007 இல் தான் சாதித்தமை பற்றியே பேச விரும்புகிறார். 2007 உலகக் கிண்ணப் போட்டிகள் மே.இந்தியத் தீவுகளில் நடைபெற்றபோது கயானாவில் நடைபெற்ற தெ.ஆபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் இலங்கை அணி கலந்துகொண்டபோது மலிங்க சாதித்தார். அந்த ஆட்டத்தில் இறுதியில் ஒரு விக்கெட் வித்தியாசத்தில் இலங்கை தோற்றாலும் அதில் லசித் வீழ்த்திய தொடர் இலக்குகள் அப்படியொன்றும் இலேசானதல்ல. அதுதான் லசித், பழைய சாதனையே சிறந்தது என்று கூறக் காரணம் போலும். 2007இல் அதாவது hat-trick இல் ஷோண்பொலக், அன்ட்ரூஹோல், ஜக்கஸ் கலிஸ் மற்றும் மக்காயா என்ரினி ஆகியோரின் இலக்குகளே எகிறின. இதைவிடப் பெருமை என்ன இருக்க முடியும் லசித்மலிங்கவிற்கு?

லசித்மேலும் பேசும்போது தான் Yorker length பந்து வீச்சைக் கற்றுக்கொண்டார். வக்கார் யூனுஸ் மற்றும் வசீம் அக்ரம் இருவரின் பந்து வீச்சையும் பார்த்துத்தான் என்று மனம் நிறைந்து கூறியிருக்கின்றார்.

கென்ய ஆட்டத்தில் லசித் சாதித்துள்ள பந்து வீச்சுச் சராசரி 38 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்கள். இதற்கு முன்னதாகக் கடந்த வருடம் ஒரு ஆட்டத்தில் 34 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளைச் சரித்திருந்தார். இம்முறை தனது இலக்குகளாக ஆரம்பத்தில் வோட்டர்ஸ், மற்றும் ஒபுயாவை வீழ்த்தியவர், 41.6 ஆவது ஓவரில் மிஸ்ராவை LBW மூலம் வீழ்த்துகிறார், தொடர்ந்து 43 ஆவது ஓவரின் முதல் பந்தில், மற்றும் இரண்டாவது பந்தில் ஒன்கொண்டோ மற்றும் என்கோச்சி இருவரின் விக்கெட்டுக்களையும் நேரடியாகத் தாக்கிச் சரிக்கிறார். பின்னர் இரண்டு பந்துகளின் பின் ஒடியானோவை வீழ்த்துகிறார். மொத்தம் ஆறு விக்கெட்டுக்கள், அதில் ஒரு Hat trick அதோடு ஆட்டநாயகன் விருதும் கூட.

உலகக்கிண்ண Hat trick குகள் இதுவரை 7. 1987 இல் தொடங்கி 2011 வரை பெறப்பட்ட ஏழு Hat trick களில் இரண்டு லசித்துக்குச் சொந்தம். லசித் இலங்கை அணியின் தவிர்க்கப்பட முடியாத வீரர். இன்னும் பல ஆட்டங்கள் மீதமுள்ள நிலையில் லசித்தின் பெருமைகளை இன்றும் நிறையக் காணக்கூடியதாக இருக்கும்.



LASITH MALINGA
'புன்னகை மன்னன்'

# ஆறுமனமே ஆறு

கடந்த வாரத்தில் எல்லோரது கவனத்தையும் கவர்ந்த ஒரு ஆட்டம் தென்.ஆபிரிக்கா மற்றும் இங்கிலாந்து அணிகள் கலந்து கொண்ட 'B' பிரிவு ஆட்டம். தோல்வியே சந்திக்காத மிகவும் பலம் வாய்ந்த தெ.ஆபிரிக்கா ஒருபுறம். அயர்லாந்துக்கெதிரான போட்டியில் தோல்வியடைந்து மீண்டும் எழுதமுடியுமோ என்ற ஏக்கத்தில் இங்கிலாந்து மறுபுறம். ஆட்டம் நடைபெற்றது தமிழகத்தில். தமிழக ரசிகர்கள் இரண்டு பலமான அணிகளின் ஆட்டத்தைக் காணப் பல்லாயிரக்கணக்கில் திரண்டிருந்தனர். ஆனால் குறைந்தளவு ஓட்டங்களுடன் அதிர்ச்சியான முடிவொன்றைக் காணப்போகிறோம் என்று யாருமே எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். மனக்கணிப்புக்கு ஏற்றமாதிரியே முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 15 ஓட்டங்கள் பெறுவதற்கு இடையிலேயே மூன்று விக்கெட்டுக்களை இழந்துவிட்டது. இதன் பின்னரும் தெ.ஆபிரிக்க அணி இங்கிலாந்தைத் தலைதூக்க விடுமா என்ன? ஆனாலும் ரவிபோபராவும் ரொட்டும் சேர்ந்து பலமான இணைப் பாட்டம் ஒன்றை வெளிப்படுத்தினார். ரொட் 52 ஓட்டங்களுடன் அவுட்டாக இங்கிலாந்தின் மத்திய, பின்வரிசை மீண்டும் மளமளவெனச் சரிந்து சவாலான ஸ்கோர் என்று எடுத்துக்கொள்ள முடியாத 171 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து பரிதாப நிலைக்கு உள்ளாகியது இங்கிலாந்து.

இந்த நிலையில் இங்கிலாந்து அணியின் எழுச்சி என்று ஒன்று இருக்கமுடியுமா? என்றால், அயர்லாந்திடமோ வாங்கிக் கட்டியவர்கள், ராட்சசத் தென்னாபிரிக்காவிடம் என்ன செய்துவிட முடியும் என்பதுதான் பதில். இதுதான் உண்மையான விதி.

ஆனால் என்றும் பதட்டப்படாத புன்சிரிப்புடன் கூடிய அன்ட்ரூஸ்ரோஸ் மாத்தியோசித்திருக்கிறார். அவருக்கு அணியின் அத்தனை வீரர்களும் முழு ஒத்துழைப்பும் கொடுத்திருக்கிறார்கள். தென்னாபிரிக்க மூன்று விக்கெட்டுக்களை இழந்த நிலையில் 82 ஓட்டங்களைப் பெற்றிரந்த வேளையிலும் அவர்களுக்குக் கவலையில்லை. ஆனால் திருப்பம் அங்குதான் ஏற்பட்டது. நான்காவது, ஐந்தாவது ஆறாவது, ஏழாவது விக்கெட்டுக்கள் 124 ஓட்டங்களில் இருந்து 127 ஓட்டங்களுக்கு முன்னேறுவதற்குள் இங்கிலாந்து பந்துவீச்சில் சிக்கித் சிதறிச் சின்னாபின்னமாகிவிட்டன. இப்பொழுது தென்னாபிரிக்காவின் அதீத நம்பிக்கை நிலைகுலைய ஆரம்பித்துவிட்டது. பிறகென்ன இறுதியில் சிறிது தலைதூக்க முயன்ற டோல்ஸ்ரென் மற்றும் பின்வரிசை வீரர்களை, ஸ்ருவட் புரோட் வீழ்த்திவிட, நடக்க முடியாதது என்று நம்பப்பட்டது நடந்தது. ஆஜானுபாகுவான தென்னாபிரிக்க அணியை, அதிசயிக்கத்தக்க வகையில் ஆறே ஆறு ஓட்டங்களால் அற்புதமான இங்கிலாந்து அணி கவிழ்ந்தது.

இங்கிலாந்து அணி இந்த ஆட்டத்தில் வெல்லும் என்று யாரும் பந்தயம் கட்டி இருந்தால், அவர்கள் ஒரு $5^1/_1$ வீதத்தினைக் கூட இழந்திருக்கமாட்டார்கள். ஆனால் அதிசயம் நடாத்திக் காட்டினார் அன்ட்ரூ ஸ்ரோஸ். ஆட்டநாயகன் விருது ரவி போப்பராவை நாடிச் சென்றதென்றாலும் தென்னாபிரிக்கக்காரன் இறுதிக்கட்ட நம்பிக்கையைச் சிதைத்த ஸ்ருவட் புரோட்டும் மனதில் வருகிறார். நான்கு விக்கெட்டுக்களைப் பதினைந்தே ஓட்டங்களுக்குள் சரித்தவர் இவர். எனினும் சர்ச்சைகள் வேண்டாம். இந்த ஆட்டத்தின் ஒவ்வொரு இங்கிலாந்து வீரனும் ஆட்டநாயகன்தான்.



## மனதுக்கு நிம்மதி

**எரிமலை சாம்பலில் அதிக சத்துக்கள் இருப்பதைப் போல் எந்த ஒரு துன்பத்திலும் நிச்சயம் ஒரு நன்மை இருக்கும். அன்னப்பறவை போல் துன்பத்தை விலக்கி நன்மையை மட்டும் நினைவில் கொள்ளுங்கள். எல்லா வெற்றிகளுக்கும் பின்னால் நிச்சயம் ஒரு வலி மிகுந்த கடினப் பாதை இருக்கும்.**

# வாழ்க்கை வாழ்வதற்கே!



வாழ்க்கையில் மகிழ்ச்சி தேவை என்றால் முதலில் நடக்கும் அனைத்து நிகழ்வுகளையும் உங்கள் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டுமென எண்ணுவதை நிறுத்துங்கள். நீங்கள் வருந்துவதாலோ, அதையே நினைத்துக் கொண்டு இருப்பதாலோ எதுவும் மாறப் போவதில்லை. வாழ்வை அதன் போக்கில் விட்டு, உங்கள் முயற்சியைத் தொடருங்கள். நடப்பவை அனைத்தும் நன்மைக்கே என எடுத்துக் கொள்ளுங்கள்.

எரிமலை சாம்பலில் அதிக சத்துக்கள் இருப்பதைப் போல் எந்த ஒரு துன்பத்திலும் நிச்சயம் ஒரு நன்மை இருக்கும். அன்னப்பறவை போல் துன்பத்தை விலக்கி நன்மையை மட்டும் நினைவில் கொள்ளுங்கள். எல்லா வெற்றிகளுக்கும் பின்னால் நிச்சயம் ஒரு வலி மிகுந்த கடினப் பாதை இருக்கும்.

மற்றவர்களிடம் குறை காணுவதை விட்டு உங்களுக்குள் என்ன நடக்கிறது என கவனியுங்கள். உங்கள் ஆழ்மனதின் விருப்பங்கள், நம்பிக்கைகளை அறிந்து, அதன் சின்னச் சின்ன ஆசைகளை நிறைவேற்றி, உங்களின் இலட்சியத்திற்குத் தயார் படுத்துங்கள்.

அனைத்து வசதிகளும் இருந்தால்தான் சாதிக்க முடியும் என்பது தவறு; வசதி இருப்பின், வரும் வாய்ப்புகளை மட்டுமே பயன்படுத்த முயலுவோம். இல்லாவிட்டால், இனி என்ன செய்யலாம் என யோசித்தே மற்றவருக்கும் வாய்ப்புகளை வழங்குவோம்.

மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதை விட்டுவிட்டு, கடவுள் ஒரு வழியை மூடினால் ஒரு வழியைக் காட்டுவார் என எண்ணுங்கள். அதில் உங்களால் எவ்வளவு தூரம் சாதிக்க முடியும் எனப் பாருங்கள்.

ஒரு நிகழ்வு நிகழவில்லையெனில் அதில் உங்கள் குணத்திற்கு ஒவ்வாத ஏதோ ஒன்று உள்ளது என அர்த்தம். இன்று முதல் ஆனந்தம் என வீட்டில் உங்களுக்கு பிடித்த இடத்திலிருந்து உங்களுக்கு பிடித்த செயலைச் செய்யுங்கள்.

வீட்டில் எந்த இடமும் பிடிக்காவிட்டால் வெளியே வாருங்கள். இயற்கை மலர்கள், மனிதர்கள், மரங்கள், மலைகள், நதிகள் எனப் பரந்து விரிந்திருக்கிறது. அதில் உங்களுக்குப் பிடித்த தனிமை நிச்சயம் கிடைக்கும். அந்தத் தனிமையில் உங்களைத் தேடி எதிர்மறை எண்ணங்களை விலக்குங்கள்.

மனதில் எதிர்மறை எண்ணங்களை விலக்கினால் அந்தக் காலி இடம் நேர்மறை எண்ணங்களால் நிறையும். இயற்கையை நம்பி வாழ்வின் ஒவ்வொரு வினாடியையும் ரசித்து உங்கள் இலட்சியத்திற்குத் தேவையான உங்களிடம் இல்லாத திறமையைக் கற்றுக் கொண்டு, கடுமையான உழைப்புடன் நல்ல எண்ணங்களால் நல்முயற்சி செய்தால் வாழ்க்கையில் வெற்றி பெறலாம்.

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

### குறுக்கெழுத்துப் போட்டி - 410

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | |
| 7 | 8 | 9 | 10 | | |
| | | 15 | 16 | 17 | |
| | 20 | | 22 | 23 | |
| 25 | 26 | | | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | | |

**இடமிருந்து வலம்**

01.அமெரிக்காவின் தலைநகர்.

07. இந்திய கிரிக்கெட் வீரரொருவர். (குழம்பியுள்ளது)

15.கழிவு அல்லது மாசு என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது)

22.பசு, எருமைகளின் பெண் கன்று. (திரும்பியுள்ளது)

25.இரும்பு உபகரணங்களில் படிவது. (திரும்பியுள்ளது).

29.குலம் அல்லது ஊர் மக்களைக் குறிக்கும்.

31. உயிர்க்கொல்லி நோயொன்று.

**மேலிருந்து கீழ்**

01.இராமாயணத்தில் இடம்பெறும் பாத்திரமொன்று.

02.விஜய் நடித்து வெளியான படங்களில் ஒன்று. (திரும்பியுள்ளது)

03.புனித நதியொன்று (குழம்பியுள்ளது)

04.சம்பிரதாயபூர்வமான நிகழ்வுகளை இப்படியும் கூறுவர். (குழம்பியுள்ளது)

17.உடல் உறுப்பொன்று. (குழம்பியுள்ளது)

20.நித்திரை என்றும் பொருள்படும். (குழம்பியுள்ளது)

25.பசளை என்றும் கூறலாம். (திரும்பியுள்ளது)

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 22.03.2011 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-410
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல.: - 1772, கொழும்பு. - த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

குறுக்கெழுத்துப் போட்டி இல.408 க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

மு.தனேஸ்வரன், பருத்தித்துறை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. ப.தேவிகா, மடுமாதா வீதி, சின்னக்கடை, மன்னார்.
02. சி.பாலசுந்தரம், கல்வளை, சண்டிலிப்பாய்.
03. யோ.ஜெகதீஸ்வரி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
04. என்.பர்ஹானா,2 ஆம் வட்டாரம், எருக்கலம்பிட்டி.
05. க.பிரணவன், செட்டிகுளம், வவுனியா.
06. எவ்.எவ்.ஆயிஷா, ராஜசிங்க மாவத்த, ஹுனுப்பிட்டிய, வத்தளை.
07. செ.நிலாவரசி. நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
08. என்.ஜெகந்தன், மன்னார்.
09. சி.ஆரபி, கடற்கரைவீதி, திருகோணமலை.
10. அ.அருண்மொழி, கைதடி, சாவகச்சேரி.

### குறுக்கெழுத்துப் போட்டி 408- விடைகள்


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | 2 ல | 3 ரி | 4 மா | 5 ளி | 6 கை |
| 7 று | 8 ஊ | | 10 து | 11 கா | |
| 13 கு | 14 ம் | 15 ல | | | |
| | 20 ர் | 21 சீ | | 23 டை | 24 பீ |
| 25 டா | 26 வ | 27 ம் | 28 ர | 29 ட் | |
| 31 கு | | | 34 தி | 35 நா | 36 அ |

## மின்னஞ்சல்களைப் படிக்கும் கார்

நாளுக்கு நாள் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி அதிகரித்துக் கொண்டுதான் இருக்கிறது. கற்பனையில் நினைப்பவற்றை இன்று நிஜத்திற்கு மாற்றித் தந்து கொண்டிருக்கிறது இன்றைய விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்.

அந்த வரிசையில் நாம் எதிர்பார்க்காத புதிய ஒரு விடயம் தான் நடந்தேறியுள்ளது. அதாவது நமக்கு வருகின்ற மின்னஞ்சல்களை உடனுக்குடன் படித்து வாகன சாரதிக்கு சொல்லிவிடுகின்றது இந்தக் கார். இது எவ்வாறு சாத்தியப்படுகின்றது என்றால் குறித்த காரில் பயணிக்கும் முன் அதில் தயார் செய்யப்பட்டுள்ள சார்ஜில் தனது smart phones ஐ தொடுத்து விட வேண்டும். பின்னர் நாம் வாகனத்தை ஓட்டிக் கொண்டிருக்கும் போது நமது பேஸ்புக் அல்லது டிவிட்டரில் புதிதாக தகவல்கள் பரிமாறப்பட்டால், அந்த கார் ஒலி மூலம் பரிமாற்றப்பட்ட தகவலை படித்து சொல்கின்றது.

அதைப் போலவே மின்னஞ்சல் வருகின்ற போதும் அவற்றை அப்படியே படித்து சொல்லி விடுகின்றது. இக்கார் "இணையத்தளக்கார்" என அழைக்கப்படுகிறது. அண்மையில் ஜெனீவாவில் நடைபெற்ற மோட்டார் வாகன கண்காட்சியில் இந்த இலத்திரனியல் இணையக்கார் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.






அகல்யாவின் ஆசிரியை கிருத்திகா, டில்லியில் நடைபெறவிருக்கும் தேசிய விவாதப் போட்டிக்கு செல்லும்படி கேட்டிருந்தார். அதற்கு கம்பியூட்டர் வகுப்புக்கு போவதாகக் கூறி அரை குறை மனத்தோடு மறுப்புத் தெரிவித்திருந்தாள். இருந்தாலும் ஆசிரியையின் வற்புறுத்தலால் சம்மதம் தெரிவித்திருந்தாள். டில்லிக்கு செல்வதற்கு ப்ரமோத்தையே கூட்டிச் செல்வதாக மனதினுள் உத்தேசித்திருந்தாள் அகல்யா.

**அந்த** கல்லூரி மைதனம் முழு வதும் ப்ரமோத்தைத் தேடிய போது அவள் கண்ணுக்குச் சீனுதான் தெரிந்தான். ரகுவின் பின்னால் ஓடிக்கொண்டி ருந்தான். அவனை அழைத்தாள். அவன் ஓடி வந்தான்.

“என்ன அகல்யா? ப்ரமோத்தைப் பார்த்தியா?”

“அவன் கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நிற்கிறான். அவனுக்கு இண்டைக்கு விளையாட்டு இருக்கு”

“விளையாட்டுப் பார்க்கணுமா நான்கொண்டு விடுறேன் கண்ணு” என்றான் ரகு.

“இல்ல ரகு ... நானே போகிறேன்”

“நீ போறதுக்குள்ள விளையாட்டு முடிஞ்சிடும். நம்ம கல் லூரி தோத்துக்கொண்டே இருக்குது.”

“ப்ரமோத் உன்னைப் பார்த்தாக் கொஞ்சம் தெம்பாயிடுவான். வா கூட்டிட்டுப் போறன்.”

மோட்டார் சைக்கிளின் பின்னால் அகல்யாவும் ஏறிக்கொள்ள அவன் விருட்டென்று புறப்பட்டான்.

“அகல்யா நாளைக்கு மாணவர் அமைப்புக் கூட்டம் இருக்கு வரேல்லையோ?”

“அந்த அமைப்பு உயிரோட இருக்குதா என்ன? அதில் அவன் ஒரு அங்கத்தவர்.

அவர்கள் இறங்குவதை போட்டிலிருந்து பார்த்தான் ப்ரமோத். கடைசியில் ப்ரேக் போடும்போது முது கில் படவேண்டியிருந்தது.

டைம் அவுட்டில் இருந்தார்கள். ஸ்கோர் 73-74. இவர்கள் 73. கேரளாவில் இருந்து வந்திருந்த கல்லூரி 74.

ஆட்டம் முடிய இன்னும் எட்டு நிமிடம் இருந்தது.

அவர்கள் கல்லூ ரியின் ஆதரவாளர்கள் படையெடுக்கத் தயா ராக இருந்தார்கள். மத்தியஸ்தர் கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டு விசில் ஊதத் தய- ாராக இருக்க, ப்ரமோத் ஒருமுறை அகல்யாவைப் பார்த்தான். அவள் அவனை நோக்கி புன்னகைத்து கையசைத்தாள். ப்ரமோத் பாதிக் கோட்டிலிருந்து குருட்டுப் போக்காக ஒரு கடைசி முயற்சியாகப் பந்தை எறிந்தான்.

ஒரு கணம் கால் நின்றது. பந்து அரைவட்டமாக வந்து மிக மிகத் துல்லியமாக வளையத்தில் கூடப் படா- மல் வலைக்குள் விழுந்தது. 75-74. சுற்றிலும் இருந்த அத்தனை உள்ளூர் ஆதரவாளர்களும் கோட்டில் பாய்ந்தார்கள்.

“லக்கடா இவனுக்கு” என்றான் ரகு. ப்ரமோத்தை அவர்கள் தலைக்கு மேல் உயர்த்திப் பந்தாட, அவன் சமாளித்து இறங்கி அகல்யாவை நோக்கி நேராக வந்தான்.

இன்னும் மூச்சிரைத்துக் கொண்டிருந்தது. உடலெல்லாம் வியர்வை. சேர்ட்டை அவசரமாக அணிந்துகொண்டு “நீ வந்தவுடனேயே எனக்கு ஒரு புது வித உற்சாகம் வந்தது. மயிரைக் கட்டி இழுத்தாப் போல இருந்தது. 5 செக்கனுக்குள்ள ஒரு வீசு வீசிப் பார்த்தேன். விழுந்திச்சுதே. இந்த வெற்றிக்கும் நீதான் காரணம்.”

ரகு, ‘அப்ப நாளைக்கு வர இல்லையா அகல்யா?’ என்றான்.

“அவ எங்கேயும் வரலை” என்றான் ப்ரமோத்.

இவளை கேளுப்பா. இப்பதான் வரேன் என்று சொன்னா.’

“மாணவர் அமைப்பு கூட்டம் இருக்கிறது ப்ரமோத்.”

“ஏம்மா பாத்ரூம் போறதெண்டாக் கூட ப்ரமோத்தைக் கேட்டுவிட்டுத்தான் போவியா?” என்றான் ரகு.

‘ரகு எனக்கு வெறுப்பேத்தாதை. இதுதான் கடைசித்தடவை.

இதற்குள் சீனு அங்கு வந்தடைந்தான்.

‘சீனு வாடா..... நாம் பயிற்சிக்குப் போக லாம். அகல்யா நான் சொல்வதைக் கேளு. நீ உன்னுடைய சுதந்திர சிந்தனையை எந்நேரத்திலும் இழக்கக் கூடாது. கீப் யூவ இண்டிபெண்டஸ். அதைத்தான் நானும் சொல்கின்றேன்’ என்றான் ரகு.

‘ப்ரமோத் என்னுடன் டெல்லிக்கு வருவியா?’ என்றாள் அகல்யா.

மாலை வெளிச்சம் மெல்ல மெல்ல மங்க, சீனு அவ்வழியே சென்ற ஒரு பெண்ணைப் பார்த்து,

‘ஹாய் நீ எங்கட கல்லூ ரியில புதுசா இருக்கிறியே!’ என்றான்.

நான் உங்களுடன் பேச விரும்பவில்லை என்றாள். “நான் உங்ககூடத்தான் பேசுறேன் ப்ரதர்”

“நான் இப்ப என்னப்பா கேட்டேன். ரகு இந்தாளைக் கவனி.”

“வேண்டாம் வந்திடு”

“பார்ட்டி அவுட் சைட்”

“பயந்திட்டான் பாரு. இவங்களே இப்படித்தான். தயிர்வடைங்க”

“என்னடா செய்வாய்? தயிர்வடை, மோர்க்குழம்பு, பைக்கற் சாம்பார்.”

“அப்புறம் கவனிச்சிக்கலாம்” என்று சீனு பின்வாங்கினான். அந்த முரடன் பாம்பு விரலால் கன்னத்தில் குத்தினான். அவர்கள் சென்றபின் சற்று நேரம் திகைத்து நின்ற ரகு, “சீனு தேங்காய் பறிச்சு நாளாச்சு!” என்றான்.

“பையில எத்தனை வைச்சிருக்கிறே?”

“இரண்டு பெரிய நோட்டு! வா போவம்.”

அவர்கள் சென்ற இடம் ஒரு சந்தில் இருந்தது. நியான் தாழ்வாக ஒளிர கதவைத் திறக்கும் போதெல்லாம் ட்ரம் ஒலி கசிந்தது. உள்ளே எல்லாம் சிவப்பாக இருந்தது. வாசலில் இருந்த காவ லாளி பெரிய மீசையுடனும் கையில் பூண் போட்ட தடியுடன் நின்றிருந்தார் “தம்பி உனக்கு என்ன வயசு” என்று கேட்டான்.

“இருபது”

சீனுவைப் பார்த்து “இவனுக்கு”

“இவனுக்கும் இருபது தான்”

**இன்பம் தொடரும்**

---

இவ்வாரச் சிறுகதை

# மனிதமே புனிதம்

**ஜெயம் ஜெகன்**
புதுக்குடியிருப்பு

வீதி எங்கும் நகர முடியாத மக்கள் கூட்டம் அன்று. அதில் எத்தனையோ இடர்கள் தரக்கூடிய கற்கள், தடிகள் வீதியில் இருந்தன. கண்கள் தெரியாத மக்களாய் வீதியில் பயணித்த அந்த நேரத்திலே...

வேந்தன் தனது உந்துருளியில் வந்து கொண்டிருந்தான். வீதி யில் கிடந்த கற்களையும், தடியையும், கண்டுவிட்டு உந்துருளியை நிறுத்திவிட்டு அவற்றை வீதிக்கரையிலே எடுத்துப்போட்டுவிட்டுப் பயணித்தான்.

மக்கள் கூட்டமோ ஒரு கணம் பொதுநலம் என்ற சொல்லை உச்சரித்துக்கொண்டு பல சொற்களை வெளியில் சொல்ல முடியாது விழுங்கினர்.

வெகு தூரத்திலே வந்து கொண்டிருந்த வேந்தனின் உந்துருளியை அவதானித்த பாட்டி உந்துருளியை மறித்து, “மகனே நானும் வரட்டா” என்று கேட்க அவனோ “கவனமாக ஏறுங்கோ. இறுக்கிப் பிடியுங்கோ” என்று கூறி தனது உந்துருளியைச் செலுத்தினான்.

சிறிது தூரம் சென்றதும் வீதி யில் காவற்துறையினர் வேந்தனின் உந்துருளியை மறிந்து பாட்டியின் தலையில் தலைக்கவசம் இல்லாததால் தண்டப்பணமாக 300 ஐப் பெற்றுக்கொண்டு பற்றுச்சீட்டைக் கொடுத்தனர். பாட்டியோ வேந்தனிடம் எனக்கு உதவிக்கு வந்து உவத்திரமாய் போட்டுது என்று தளதளத்த குரலிலே கூறினாள். வேந்தனோ எல்லாம் நன்மைக்கே என்று கூறிவிட்டு ஆலயத்திற்கு வந்த பாட்டியை ஆலயத்திலே இறக்கிவிட்டுத் தானும் ஆலயத்திற்குப் போனான். பாட்டியோ தம்பி நல்லா இரு. நன்றி அப்பா என்று கூறிவிடைபெற்றாள்.

ஆலயத்தை ஏறெடுத்துப் பார்க்கின்றான் வேந்தன். அங்கே பலூன் வியாபாரி போன்று பிச்சைக்காரர்களின் பாத்திரம் நடமா- டித் திரிந்தது. வேந்தனின் கண்களோ ஒரு கணம் குளங்களாகி மீண்டும் வற்றின. அவனது பணப்பையில் இருந்த பணத்தைப் பிரித்து அப்பாத்திரத்திலே போட்டுக்கொண்டிருந்தான். வேந்தனின் மனதைப் புரிந்துகொண்ட பிச்சைக்காரர்களின் உதடுகளோ,

“இந்தக் கோயிலுக்கு வாற சனங்கள் யாருமே எங்களுக்குப் பிச்சை போடுவதில்லை, ஆனால் இந்த ஆளு ஒருவேளை பணக்காரனாக இருப்பாரோ இல்லை பொதுநலம் உள்ள மனிதன்” என்று பெருமை தழும்பக் கூறினார்.

வேந்தனின் பயணம் மிக நீண்டதாக இருந்ததினால் மிக விரைவாகப் பயணிக்கின்றான். அப்போது



அவனின் இடுப்பில் இருந்த நடமாடும் தொலைபேசியிலிருந்து அவனுக்கு அழைப்பு வந்தது. ஆவலோடு தொலைபேசியை அழுத்திப் பேசி- னான். நண்பனின் குரலோ பதற்றத்தில் போனது வேந்தனோட நண்பர். “பயப்பிடாமல் சொல்லடா எதுவானா லும்” என்ர தம்பி விபத்தில சிக்கி சரி யான இரத்த இழப்பைச் சந்திச்சிட்டான். அதுதான் யாரு கொடுப்பாங்க” என்ற வேதனையோடு நண்பன் கூற, வேந்தனோ “நான் தாறன் பிரச்சினையை விடு”

“டேய் தம்பி இரத்தம் 'B' யடா. உன்ர சேராதடா” என்றான். “நண்பா என்ர O வடா, எல்லாருக்கும் சேருமடா” என்றான்.

வேந்தன் அவசர அவசரமாக வைத்தியசாலைக்குச் சென்று நண்பனைச் சந்தித்து இரத்ததானம் செய்து நண்பனின் தம்பியின் உயி ரைக் காப்பாற்றிவிட்டு அலுவலகத்திற்கு சென்றான்.

“நண்பனோ இவனல்லோ நண்பன் இவன் என் நண்பனல்ல. இவன் ஒரு புனிதன் கூட” என்று தனது உள்ளக் கிடக்கையைக் கொட்டினான்.

அவன் அலுவலகத்தில் இருந்து வீடு நோக்கி சென்றுகொண்டிருக்கையில் எட்டு வயது மதிக்கத்தக்க சிறுமி வீதியிலே நடந்துகொண்டிருந்தாள். வாகனங்களின் போக்கைப் பார்க்காது அவள் தனது போக்கிலேயே நடந்துகொண்டிருந்தாள்.

வேந்தனின் உந்துருளியும் மிக வே- கமாக வந்துகொண்டிருந்தது. அச்சிறுமி இவனது உந்துருளியில் சிக்குவதற்கு பத்து மீற்றரே இருந்தது. அவனோ தனது உயிரைப் பொருட்படுத்தாது சிறுமியின் உயிரைக் காக்க தனது உந்துருளியை அருகில் நின்ற மின்சாரக் கம்பத்தோடு மோதி தனது ஒரு கண்ணை இழந்தான்.

வீதி மக்கள், ஆலய மக்கள் தொடக்கம் பிச்சைக்காரர்வரை அவர்களின் வார்த்தைகளோ “பிள்ளையின் உயிரைக் காக்கத்தான் மின்சாரக் கம்பத்தோடு மோதினாரோ. பிள்ளை வந்த பாதைதான் பிழையென்று” கூறி அவனது முகத்தைப் பார்க்க நேரில் சென்றனர்.

முகத்தைக் கண்ட பிச்சைக்காரரோ ஐயோ இது எங்களுக்கு அன்றைக்குப் பிச்சைபோட்டு எங்களின் வயிற்றைக் கழுவிய தம்பி என்று பலவாறு உரு கித் துடித்தனர். அழுதழுது அவனை வைத்தியசாலையில் கொண்டுபோய்ச் சேர்த்தனர்.

அங்கே வேந்தன் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டான். பிச்சைக்காரர்களின் மனமோ கொதி நீராய்க் கொதித்துக்கொண்டிருந்தது.

அவர்களோ வைத்தியரை அணுகி “ஐயா தம்பியை எப்படியும் காப்பாற்றுங்கோ. ஐயா எங்களுடைய கண்களைத் தாறம் அவரை ஊனமாக்கிவிடாதேங்கோ” என்று காலைப்பிடித்துக் கெஞ்சி வேந்தனிற்கு கண் பிச்சைப் போடத் துடித்தனர்.


வைத்தியரோ ஆச்சரியப்பட்டு “என்னடா ஒரு மனிதனுக்கு இவ்வளவு பேர் கண்தானமா? அப்படி இந்தத் தம்பி என்ன சேவை செய்திருப்பாரு” என்று தனக்குள்ளேயே கேட்டுக்கொண்டார்.

பிச்சைக்காரர்கள் ஐயா கெதியாய் எங்கட கண்ணை எடுத்து அவரைக் காப்பாற்றுங்கள் என்றதும் வைத்தியரிற்கு எதுவுமே செய்ய முடியாத நிலையி- லேயே இவர்களின் பெயரை எழுதி குலுக்கல் முறையிலேயே கண் தானத்தைத் தெரிவு செய்தார்.

குலுக்கலின் பெயரோ ‘பிரியங்கா” என்று விழவே பிரியங்கா, வேந்தனிற்கு ஒளிகொடுத்து ஊனத்தைப் போக்கியது. இதை அறிந்த வேந்தன் பிச்சைக்காரர் என்ற பெயரை சமூகத்திலிருந்து நீக்கி அலுவலகத்திலே அவர்கள் ஒவ்வொருவருக்கும் வேலைகொடுத்து அவர்களது குடும்பத்தை உயர்த்தினான்.

வேந்தனிற்குப் பிச்சைக்காரர் செய்த உதவியைப் பார்த்திருந்த அவனது கண்கள் குளமாய் பெருகியது. அது அவனின் செய்நன்றியைக் கழு விய நீராய் கண்ணில் நின்று வெளி- யேறி அவனது கன்னங்களின் ஊடாக நெஞ்சில் பட்டபோது கொதிநீராய் அது சுட்டது.

# பொன்மொழி



என் குழந்தைகளான நீங்கள் என்னைவிட நூறு மடங்கு சிறந்தவர்களாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

**சுவாமி விவேகானந்தர்**

## சிந்தியா பதில்கள்

✉ எமது நாடு மற்றைய நாடுகளைப் போல் தொழில்நுட்பம் நோக்கிய பாதையில் செல்லவில்லையே ஏன் சிந்தியா?

**ப. திலகன்,**
**பருத்தித்துறை.**

● இல்லையென்று ஒரே-யடியாகக் கூற முடியாது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் மகிந்த சிந்தனையில் விஞ்ஞான தொழில்நுட்பத்தின் அதிஉச்சப் பயனை இலங்கையர்களுக்கும் பெற்றுக்கொள்ளும் உன்னதத் திட்டம் உண்டு. அதே போல் சர்வதேச உயர் தொழில்நுட்பக் கல்வியை இலங்கை மாணவர்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டமும் உண்டு. அதைநோக்கிய எமது நாட்டின் பயணம், தற்போதைய நிலையில் ஆரம்பப்புள்ளியாக இருக்கலாம். அந்த இலக்கு அடைகின்ற பயணத்தில் முழு இலங்கையரும் பங்கெடுக்கும் போது அது சாத்தியமாகும்.

✉ சிந்தியா! சாஸ்திரத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் பற்றி உமது கருத்து என்ன?

**கு. காயத்திரி,**
**வவுனியா.**

● மற்றவர்களின் கருத்துக்களுக்கும் நம்பிக்கைகளுக்கும் நாம் மதிப்பளிக்கப் பழக வேண்டும். சாஸ்திரம் ஜோதிடம் இப்படி ஆரூடம் கூறும் எல்லாமுமே நமக்கு நல்லதைச் சொல்லுகின்ற போது அதை ஏற்றுக் கொள்வதும் தீமை-களைச் சொல்லும்போது அதை வெறுப்பதுமே மனித இயல்பு, நம்புகின்றவர்களுக்குக் கல்லும் தெய்வமாகிறது. நம்பாதவர்களுக்குத் தெய்வமும் கல்லாகிறது. உங்களுக்கு நம்பிக்கை வரும் வரையில் இன்னொருவரின் நம்பிக்கையைக் கேள்விக் குட்படுத்த வேண்டாமே.

✉ இல்லறம் நல்லறமாக வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும்?

**ப. ரேகா,**
**நல்லூர்.**

● இல்லறங்கள் எல்லாமே நல்லறங்கள் தான். கெடுத்துக் கொள்வது அதற்குத் தலைமை கொடுப்பவனும் அவனது தலைவியும் மட்டுமல்ல சுற்றம் சூழலும்தான். எதை எடுக்க வேண்டும், எதை நிராகரிக்க வேண்டும் என்பதையும் எது மகிழ்ச்சியை நிரந்தரமாக்கும் அல்லது பாதுகாக்கும் என்பதையும் அதைச் சீர்குலைக்கும் என்பதையும் நல்ல இல்லத்தரசனுக்கும் இல்லத்தரசிக்கும் தெரிந்துகொள்ள முடியும். அந்தப் பக்குவம் இல்லாத இல்லறங்கள் நல்லறங்கள் ஆகாது.

✉ 13 ஆவது திருத்தச்சட்டம் தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது என தமிழ் கூட்டமைப்புக் கூறியுள்ளதே?

**கு. திவாகர்,**
**மட்டக்களப்பு.**

● இக்கேள்விக்கான விளக்கங்கள் பலமுறை தின-முரசில் வெளியாகியிருக்கிறது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தீர்வு யோசனை என்ன என்பதை அவர்கள் இன்னும் சொல்லவில்லை. இதனை அவர்களுக்கு மிகத் தெளி-வாகச் சொல்லக் கூடிய ஒன்று இருக்கிறது. அதாவது 13 ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக மாகாணசபை முறை ஏனைய மாகாண மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு தீர்வு. அது இலங்கை அரசியல் யாப்பில் இருக்கும் ஒரு தீர்வு. அது எமது இறைமையை பாதிக்காத நடைமுறைச் சாத்தியமான வழி-முறை. இதற்கு இந்தியாவின் அனுசரணையும் ஆதரவும் முழுமையாக உண்டு. இதற்கு மாறாகப் புதிய அரசியல் தீர்வுத் திட்டங்களையோ அரசியல் யாப்பு மாற்றங்களையோ இலங்கையில் ஏற்படுத்த முடியாது. இது வரலாறு உணர்த்திய பாடம். இதற்கு மேலாக பிரபா-கரன் கேட்டதையோ அல்லது அதற்கு ஒப்பான எதையுமோ தீர்வாக வழங்கப்போவதில்லை என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மிகத் தெளிவாகக் கூறியிருக்கின்றார். இது தான் யதார்த்தம். இதற்குப் புறம்பாக யார் என்ன பேசினாலும் எவர் கோவணம் கட்டிக் குதிச்சாலும் அது தம்மை ஏமாற்றி மக்களையும் ஏமாற்றும் அரசியல் கோமாளித்தனமேயன்றி வேறொன்றுமாக இருக்க முடியாது.

✉ சிந்தியா! ஸ்ரீதரன் எம்.பி. மீது தாக்குதல் நடத்தப்பட்டமை குறித்து நீர் என்ன நினைக்கின்றீர்.

**எஸ். கோகுலன்,**
**திருகோணமலை.**

● மழைவிட்டாலும் தூறல் விடாத கதையாக ஆங்காங்கே அசம்பாவிதங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. ஆடிய காலும் பாடிய வாயும் சும்மாயிருக்காது என்பார்கள். ஆயுதம் ஏந்தி அடாவடித்தனம் புரிந்தவர்களுக்கும் அது பொருந்தும் போல் இருக்கிறது. அவரும் துப்பாக்கி ஏந்தி எதிர்த்தாக்குதல் நடத்தியிருந்தாராம். யாரை சரி என்று விரல் நீட்டிக் காட்டுவது.

✉ ஒருவரின் சிரிப்புக்கும் ஒவ்வொரு அர்த்தங்கள் இருக்கின்றதாமே. அது உங்களுக்குத் தெரியுமா சிந்தியா?

**தி. பிரியங்கா,**
**கொழும்பு.**

● அப்படிச் சொல்கிறார்கள் எனக் கொள்வோமானால் ஒவ்வொரு சிரிப்புக்கும் பல்வேறு அர்த்தங்கள் இருப்பதாகவே நினைக்கின்றேன். வஞ்சகம் நிரப்பி வாயில் சிரிப்போடு வந்து நிற்கும் மனிதர்கள் முகம் கண்டு நெஞ்சம் கொதித்தாலும் மனிதனை நேசிக்கும் நமக்கு எப்படி ஒரு வெறுப்பை அவர் மீது வீசி எறிய முடியும். மனிதர்களிடம் இருந்தும் கற்றுக்கொள்வோம்.

✉ சிந்தியா! நீங்கள் கடலா அல்லது கடலலையைப் போன்றவரா?

**கு. பவானந்தன்,**
**அம்பாறை.**

● எதை மனதில் வைத்துக் கொண்டு கேள்வியைக் கேட்கின்றீர்கள் என்று புரியவில்லை. எல்லாவற்றையும் உள்வாங்குவது கடல் அலை, கரையோடு விளையாடுகின்றது. கேள்வி எல்லாவற்றையும் உள்வாங்கிக் கொண்டு பதில்களில் விளையாடும் நான் கடலா, அலையா கண்டுபிடித்தால் எழுதுங்கள்.

✉ இந்திய அரசினால் அமைத்துத் தருவதாகக் கூறப்பட்ட வீட்டுத்திட்டங்கள் எமது மக்களுக்குக் கிடைக்குமா?

**செ. சிவபாதம்,**
**வசாவிளான்,**

● எப்போதும் இந்தியாவின் உதவிகள் சற்றுத் தாமதமாகவே கிடைப்பது வழமை. அதிலும் 5 ஆயிரம் வீடுகள் என்பது சுலபமான காரியம் அல்ல. இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் வீட்டு உதவித்திட்டம் நிறைவடையக் காலமெடுக்கலாம். அதை அரசியல் காழ்ப்புணர்வோடு விமர்சிப்பவர்கள் மக்களைக் கொள்கையடிப்பவர்களாகவே இருப்பார்கள். ஆக்கம் ஒன்று தாமதிப்பதற்கு அழுபவர்கள் அழிவுக்குத் துணைபோனதை எண்ணி இப்போதாவது வெட்கிப் போயிருப்பார்களா?

✉ எகிப்து, துனீசியா, லிபியா போன்ற நாடுகளுக்கு வந்த நிலை இலங்கைக்கும் நேரிடுமென நினைக்கின்றீர்களா?

**அ. அருண்மொழி,**
**மன்னார்.**

● கடிமனான கேள்வி, எனது கவலை எல்லாம் வரட்சி தாண்டவமாடும் ஆபிரிக்க தேசங்களைப் போன்று நமது தாய்நாடு பஞ்சத்திற்கு பலியாகிவிடக் கூடாது என்பதுதான்.

இலக்கிய நயம் 21

# யானை எழுதிய ஓலை

**கே.வி. குணசேகரம்**


புகழுக்கு மயங்காதவர்கள் எவரும் உலகில் இல்லை. மன்னனைப் புகழப் புகழப் பொருள் அதிகமாகச் சேரும்.

சில புலவர்கள் மன்னனை மட்டும் புகழ்வார்கள். இன்னும் சில புலவர்கள் மன்னனின் வம்சத்தைப் புகழ்வார்கள். வேறுசில புலவர்கள் மன்னனின் குடும்பத்தைப் புகழ்வார்கள். மன்னரின் முத்தொள்ளாயிரப் புலவர் மன்னன் ஏறிச் செல்லும் யானையைப் புகழ்கிறார்.

"வீரமுள்ள வேலேந்திய மன்னனது அகன்ற மார்பை அஞ்சாது குறிவைத்துத் தாக்கும் பாண்டிய மன்னனது யானை, பாண்டிய யானையை வருத்த விரும்பாது தானே அவனைப் பிடித்துத் தனது கூரிய கொம்பினால் அவனது மார்பை, மன்னன் வேலால் துளைப்பது போல் தனது கூரிய தந்தத்தால் குந்திப் பிளந்தது" அந்தச் சம்பவத்தைப் புலவர் புகழ்ச்சிக்காகப் பாடிய மன்னனது வீரம் மிகுந்த யானை எதிரியின் அகன்ற மார்பை ஓலையாகக் கருதித் தனது தந்தத்தை எழுத்தாணியாக்கி, "உனது வளமான நாடு இனிப் பாண்டியனுக்கே சொந்தம்" என்று எழுதியதாகப் புலவர் கூறுகிறார்.

முத்தொள்ளாயிரத்தை இயற்றிய புலவர் மன்னர்களின் யானைகளைப் புகழ்ந்து பல பாடல்களை இயற்றியுள்ளனர். பகை-வருடன் போர்செய்ய வீரமுள்ள மன்னர்களின் யானையே போதும். மன்னன் தேவையில்லை என்று முத்தொள்ளாயிர பாடலொன்று கூறுகிறது. மன்னன் இல்லாத நேரம் வீறுகொண்டெழுந்த யானையொன்று பகையரசனின் கோட்டைக் கதவுகளைத் தனது தும்பிக்கையால் தாக்கி உடைத்ததென்று ஒரு பாடல் சொல்ல, இன்னொரு பாடல் பகையரசரின் தலைகளைப் பாண்டிய மன்னனின் யானை பந்துகளாக எண்ணிக் காலால் அடித்து விளையாடியது என்று சொல்கிறது.

முத்தொள்ளாயிரம் என்பது சேரசோழ பாண்டிய மன்னர்கள் மீது தனித்தனியாகத் தொள்ளாயிரம் பாடல்கள் பாடியமை என்று பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பாடலைப் புலவர் பாடுவார். அதை அரசனும் சபையோரும் மக்களும் ரசிப்பார்கள். பின் அவற்றை அவர்கள் பாடி மகிழ்வார்கள். காதலும் வீரமும் பொதிந்த அப்பாடல்களைக் கேட்காமல் சேரசோழ பாண்டிய மன்னர்கள் உறங்கமாட்டார்களாம். அவற்றைப் பாடாமல் மக்கள் உணவு உண்ண மாட்டார்களாம். இவ்வாறு பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. சேரசோழ பாண்டிய மன்னர்களைப் புகழ்ந்து 2700 பாடல்கள் பாடப்பெற்றபோதும் தற்பொழுது 108 பாடல்கள் மட்டுமே உள்ளன. இந்த 108 பாடல்களில் உள்ள சுவையால் மிகுதிப்பாடல்களும் கிடைக்காதா என்று இன்றைய காதல் நெஞ்சங்கள் ஏங்குகின்றன.






**தமிழகத்திலுள்ள தமது குடும்ப நலன்களுக்காக மீனவப் பிரச்சினையில் மௌனம் சாதிக்கும் தமிழ் தேசியத்தலைமைகளுக்குக் கண்டனம்.**
*-யாழ். ஆய்வறிவாளர் அணியம்.*

"தேசியம் பேசுகிற உந்தத் 'திருகுதாளங்களுக்கு' கண்டனத்தோடை மட்டும் நிற்காமல், எதிரான காரியங்களிலையும் இறங்கவேணும். தலைக்கு வாலும், வாலுக்குத் தலையும் காட்டி வயிறு வளர்க்கிற கூட்டங்களுக்கு, தமிழினத்தின்ர பிரச்சினைக்கு முடிவெடுக்கேலாமல் நிற்குதுகள். உதுக்குள்ள மீன்பிடிக்காரற்ற பிரச்சினையெண்டது அதுகளுக்கு தேவையில்லாத ஒண்டு மாதிரித் தெரியுது. மீனவருடைய பிரச்சினைக்குள்ள தலையைக் குடுத்தால் இந்தியாவோடை முட்டுப்படவேண்டிவருமெண்டாக்கும் உதுகள் விலத்தி நிற்குதுகள். உதுகளின்ர சுயநலமுகங்களை உந்த மீனவர் சமூகம் புரிஞ்சு ஒதுக்கி வைச்சால் சரி."

**கடைசி மனிதன் இருக்கும்வரை போராடுவேன்.**
*-லிபியா ஜனாதிபதி கடாபி அறிவிப்பு.*

"ஹி... ஹி...ஹி...ஹி... உப்புடித்தான் வன்னியிலயும் கொஞ்சப்பேர் சொல்லிக்கொண்டு திரிஞ்சவை கடைசியில என்னாச்சுது? கடைசியும் போச்சுது; முதலும் போச்சுது... கடை வாயால வழிஞ்ச வீணீரும் போச்சுதெண்ட மாதிரி எல்லாம் போக்கறுத்துப் போச்சுது. நாப்பத்திரண்டு வருச அரசாட்சிக் கடைசியில நாறிப்போனதாலதானே அங்கத்தேச் சனங்கள் கடிநாயள் மாதிரி கடாபி அம்மானை கடிச்சுக் குதுற வெளிக்கிட்டிருக்குதுகள். கடைசி மனிதன் எண்டு உவர் தன்னைத்தான் சொல்லுறாரோ தெரியாமல் கிடக்குது. ஹி...ஹி...ஹி...?"

**களனியில் எவராவது ஆர்ப்பாட்டம் நடத்த முயன்றால் அவர்களின் தலை இருக்காது.**
*–அமைச்சர் மேர்வின் சில்வா.*

உந்தத் 'தலைவெட்டித் தம்பிரான்' உப்புடிக் கதைக்க வெளிக்கிட்டால் கடைசியில உவருக்கு சிலை வைக்கிறதுக்குக் கூட ஒரு சிங்களச் சனமும் வராது கண்டியளே! உந்த மனிசன்ர ஒற்றை றோட்டு அரசியலும் உதவாத பேச்சுக்களாலையும் உவருடைய பூர்வீகம், பிறப்பு வளர்ப்புகள் எப்படியெண்டதை எல்லாரும் அறியக் கூடியதாயல்லோ கிடக்குது. அடாவடித்தனம் சிலபேருடைய பரவணிக்குணம் எண்டு ஊர்ச்சனம் பறையுறது சரியாத்தானே கிடக்குது.

**மனித உரிமைக்கு எதிராகத் தாக்குதல் நடத்தி வரும் லிபியா ஜனாதிபதி கடாபி உடனடியாகப் பதவி விலக வேண்டும்.**
*-அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.*

"முதல்ல தங்களைத் தாங்கள் திருத்திக் கொண்டல்லோ ஊருலகத்துக்குப் புத்திமதி சொல்ல வெளிக்கிட வேணும். ஜப்பான் நாட்டுக்கு மேல அணுகுண்டு போட்டு அழிச்சதிலயிருந்து ஈராக்கில எண்ணெய் பிடிக்கிறவரைக்கும் உவையள் என்ன செய்து போட்டிருக்கினமாம்? "மனித உரிமை மீறல்..." எண்ட சொல்லை அமெரிக்கன் சொல்லுறதே ஒரு மனித உரிமை மீறலா ஊருலகம் பார்க்கேக்கை, உவையள் என்னகதை கதைக்கினம்?"

**தி.மு.க.- காங்கிரசின் ஏழு ஆண்டுகால கூட்டணி முறிந்துவிட்டது.**
*-பத்திரிகைச்செய்தி.*

"கலியாணம் முடிச்சு புதுமணத் தம்பதிகள் கருத்து வேற்றுமை காரணமாக 'டைவேர்ஸில்' வந்து நிண்ட மாதிரி உதுகளின்ர அரசியல் கூத்துகள் இப்ப வந்து நிற்குது. வன்னிப் போருக்கு நகமும் சதையுமாயிருந்து நல்லா ஒத்துழைப்பு வழங்கிய ஆட்கள் உவை. இனித்தான் முத்துவேலருடைய மகன்ர வாய்க்குள்ளால 'விக்கிலீசுகள்' விழுந்து கொட்டுப்படப்போகுது. அதைப் பொறுக்கிறதுக்கு 'பாசிகளும் - சாமிகளும்' படாதபாடு படப்போகினம். பாத்துக் கொள்ளுங்கோ!"

**கட்டாய ஆட்சேர்ப்புக்கு ஆசி வழங்கியவர்கள் இன்று முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர்.** *நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார்.*

"சந்திரன் தம்பி சரியாகத்தான் சொல்லியிருக்கிறார் பாருங்கோவன். வன்னியில இயக்கம் வீடுவீடா... தெருத்தெருவா... இரவில படுத்தபாயில தாயைக் கட்டிப்புடிச்சுக்கொண்டு கிடந்த குஞ்சு; குருமனுகளை பெத்ததுகள் பார்க்கத்தக்கதா கதறக் கதற இழுத்துக்கொண்டு போகேக்கை தேசியம் பேசின வாய்கள் எல்லாம் ஏனாம் வாயைத் திறக்கேல்லையாம். இயக்கம் செய்தது சரியெண்டும், அது தங்கட பிழைப்புக்கு வழியெண்டும் எல்லாம் அமத்திப் பொத்திக்கொண்டு அமசடக்காயல்லோ இருந்தவை. "ஆ... பாழ்படுவார்... பத்தியெரிவார்... அம்மாளடிப்பார்... ஆத்தலைஞ்சு போவார்...." எண்டு அங்கத்தேச் சனம் அள்ளித்திட்டன சாபம் தான் கடைசியில அக - முகவரி தெரியாமல் எல்லாம் அள்ளுப்பட்டுப் போச்சுதுகள். ஆள் பிடிக்கிறது ஆசிவழங்கின ஆட்களுக்கும் வன்னிச் சனத்திரன்ர சாபம் அரைக்கரைவாசி போய்ச்சேரும் இருந்து பாருங்கோ."

**உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பலர் எதுவித தகுதியுமின்றி களமிறக்கப்பட்டுள்ளனர்.**
*-தேர்தலைக் கண்காணிக்கும் பவ்ரல் அமைப்பு.*

"ஆடுமேச்சவன்ர மகன் அமெரிக்காவுக்குச் சனாதிபதியாகின தெண்டாப்போல ஆனாக்கு அடிவளம் தெரியாததுகள் எல்லாம் அரசியல் செய்ய வெளிக்கிட்டிருக்குதுகள். முந்திப் புலியள் இருக்கேக்கை உந்தப் 'புலுடாச் சேட்டையள்' வாய்க்காமல் போச்சுது. இப்ப அதுகளும் போய்த்துலைஞ்சாப் போல புதிசு புதிசா எல்லாம் வெளிக்கிட்டிருக்குதுகள். தமிழ்ச்சனத்தின்ர தலையெழுத்துக்கு இனி அரோகரா!"

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்யுங்கள்.** *அநுராதபுரம் சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள்.*

ஏன்ராப்பா... பொடியள் நாங்கள் வெளியிலயிருந்து படுகிறபாடு போதாதெண்டு நீங்கள் வேற வெளிக்கிட்டிருக்கிறியளே? தேசியம் பேசிப்பேசியே இப்ப தேடுவாரற்றுப் போயிருக்கிறது உங்களுக்குத் தெரியாதே? அல்லது உள்ளுக்கை வந்து உங்களுக்கும் உசுப்பேத்திற வேலை நடக்குதோடா பொடியள்? இப்ப சீழ் பிடிச்சு சேடமிழுக்கிற நிலையில தேசியம் கிடக்குது. அதுக்குள்ள நீங்கள் 'வோட்டை' அதுக்குப் போடு; இதுக்குப் போடென்று அலட்டுறியள். சும்மா பேசாமல் கிடவுங்கோவன்."

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)
**போருக்கு...)**

இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங் கப்பட்டு வந்த ஜீ..எஸ்.பி வரிச்சலுகை கடந்த ஆண்டுடன் நிறுத்தப்பட்டது. அதனால் அரசின் மீது காட்டமாக உள்ள பல்வேறு தரப்பினரும் ஜீஎஸ்.பி வரிச்சலுகை நிறுத்தப் பட்டதால் இலங்கை அரசின் பொருளாதாரம் இனி மேல் அதல பாதாளத்திற்குச் செல்லும் என அவர்கள் எதிர்பார்த்திருந்த போதிலும் கூட இத்தகைய பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளது அத்தகைய தரப்பினரையும் வியப்பிலாழ்த்தியுள்ளது.

உலகப் பொருளாதார நெருக்கடி, உள்நாட்டு ஆயுத வன்முறைகள், மற்றும் தொடராக ஏற்பட்ட இயற்கை இடர்கள் என்பனவற்றின் மத்தியிலும் நாட்டின் தொழில்துறையில் ஏற்பட்ட பாரிய வளர்ச்சி நாட்டின் பொருளாதாரத்துறையை இத்தகைய மேம்பாட்டிற்கு இட்டுச்சென்றுள்ளது. குடிசைக் கைத்தொழில், சிறுகைத்தொழில்துறை, மற்றும் ஏற்றுமதிப் பொருளாதாரம் என்பனவற்றோடு மத்திய கிழக்கு வேலைவாய்ப்பும் கணிசமான அளவு விருத்தி கண்டிருப்பதால் இத்தகைய வளர்ச்சி நிலை எட்டப்பட்டிருப்பதாக பொருளாதார வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இலங்கையில் சகலதுறைகளிலும் காணப்படும் வளர்ச்சியானது சர்வதேச கவனத்தை ஈர்த்திருப்பதாக கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் பொருளாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகமுமான தம்ம திஸாநாயக்க தெரிவித்துள்ளார். பிரதேச மட்டத்தில் அபிவிருத்தியை மேம்படுத்தி நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்கு தற்போதைய அரசாங்கம் அயராது பாடுபட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த சாதமான சூழ்நிலைகள் இருக்கும் போதே நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டு வரும் அடிமட்ட விவசாயிகளினதும் மலையகப் பெருந்தோட்ட தொழிலாளர்களினதும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான எல்லா முயற்சிகளும் உடனடியாக அமுல்படுத்துவதற்கு எல்லா வகையான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



வையகத்தில் 10.06.1930 | வானத்தில் 07.03.2010

திதி-25.02.2011

அமரர்

## திருமதி மகேஸ்வரி தில்லையம்பலம்

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது"
என்ற வாக்கிற்கிணங்க அன்போடும் பண்போடும்
எம்மை எல்லாம் அரவணைத்து ஆளாக்கி
அன்னபூரணியாய்ப் பலருக்கு ஆதரவுடன் அமுது படைத்துத்
தெய்வத்தொண்டுகள் பல செய்த நீங்கள் எம்மைப்
பிரிந்து ஓராண்டல்ல பல ஆண்டுகள் சென்றாலும் எங்கள்
நெஞ்சங்களில் வாழ்ந்து வழி நடத்திக் கொண்டிருப்பீர்கள்.

"உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்"

கதிர்காமகோவிலடி,
வதிரி, கரவெட்டி.

குடும்பத்தினர்

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)
**ஏழை எளிய...)**

அந்த அறிவித்தல் முடியும் தறுவாயில் அடைமழையும் பெருவெள்ளமும் ஏற்பட்டிருந்தது. பெருவெள்ளத்தின் பேரழிவுகளை செப்பனிடுவதற்காக பெருவெள்ளத்துக்குப் பின்னரான புனரமைப்பு வேலைகளுக்கு மட்டக்களப்பு மாவட்டத்துக்கே அதிகளவு நிதி ஒதுக்கப்பட்டது என்ற அறிவித்தலும் பின்னர் வெளியானது.

அவசர நிவாரணப்பணிகளுக்காக நூற்றிநாற்பது மில்லியன் ரூபாவும் ஏனைய உணவுக்காக வேலை, வேலைக்காகக் கொடுப்பனவு, மற்றும் இலகுவான புனர்வாழ்வுப் பணிகளுக்காக 400 மில்லியன் ரூபாவும் இதனை விட இயந்திரங்களின் பாவனைக்காக 60 மில்லியன் ரூபாவும் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டது. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் 600 மில்லியன் ரூபா நிதி மட்டக்களப்பு மாவட்டத்துக்கு இதுவரையில் பெருவெள்ளத்துக்குப் பின்னரான புனரமைப்புக்கென வந்து சேர்ந்திருக்கிறது.

அடைமழையும் பெருவெள்ளமும் ஓய்ந்து இப்பொழுது ஒரு மாதம் கழிந்துவிட்ட நிலையில் இன்னமும் அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் உலருணவு நிவாரணம் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த உலருணவு நிவாரணம் என்பது கொட்டும் மழையிலும் குளிரிலும் நடுங்கி வீட்டைவிட்டு வெளியேற முடியாத சூழ்நிலையில் அடைபட்டுக் கிடந்த மக்களுக்கு அப்போது வழங்கப்பட்டிருக்க வேண்டும். இப்பொழுது காலங்கடந்து இந்த நிவாரணங்கள், உள்ளூராட்சித் தேர்தலை ஒட்டிய பிரச்சாரமாகப் பாவிக்கப்படுகிறது. இது ஒருபுறம் இருக்க பெருவெள்ளம் விட்டுச் சென்ற பேரழிவுகள் அழியாத தடயங்களாக இன்னமும் காட்சி தருகின்றன. சேதமடைந்த வீதிகள், வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்ட கிராமங்கள், இழப்பீடுகளுக்காக ஏங்கும் மக்கள் இப்படிப்பட்ட அவலங்கள் இன்னமும் தொடர்கின்றன. ஏழை விவசாயிகளின் எஞ்சியிருந்த நெல்வயல்களும் காய்கறிப்பயிர்களும் நாசமாகிவிட்டதால் அவர்கள் நாதியற்றுப் போய் இருக்கிறார்கள். இந்த நிலைமை இப்படியே தொடர்ந்து கொண்டிருக்க எல்லாம் அபிவிருத்தி செய்தாகிவிட்டது என்று கூறும் அறிக்கைகள் ஏழை எளிய மக்களின் முகத்தில் கரி பூசுவதாக இருக்கிறது.

அடிப்படை வசதிகளோடு சேர்த்து அன்றாட ஜீவனோபாயமும் விருத்தியடையச் செய்ய விரும்பின் பாதிக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண மக்களின் உள்ளூர் நிலைமையை அரசு உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும் என்பதே இப்போது பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

Regd. as a News paper at the G.P.O.(QD/124/NEWS/2010

# இந்தவாரம் உங்கள் பலன்

(10.03.2011 தொடக்கம் 16.03.2011 வரை

ஆதினி

### மேடம்

தொழில் நிலையில் இருந்த தடைகளும் தாமதங்களும் நீங்கும். தொழிலாளர்களும் மேலாளர்களும் நட்புடன் பழகுவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி காணப்படும். விட்டுக்கொடுப்பதன் மூலம் மிகச் சாதூரியமாகக் காரியங்களைச் சாதிப்பீர்கள். இதுவரையும் இழுபறியில் இருந்த ஒரு முக்கிய விடயம் முடிவுக்கு வந்து மகிழ்ச்சியைத் தரும். .பணப்பிரச்சினை மூலம் நண்பர் ஒருவர் மனக்குழப்பமடைவர். இனத்தவர் களும் நண்பர்களும் உதவுவர். மாணவர்கள் கல்வியில் அக்கறை வாட்டுவர். அரசி யல் உள்ளோர பாராட்டப்படுவர். வியாபாரிகளும் விவசாயிகளும் அதிக இலாபம் அடைவர். அதிர்ஷ்ட நாள் ஞாயிறு.

### துலாம்

துணிவுடன் செயற்பட்டுத் தொழிலில் அதிக இலாபம் பெறுவீர்கள். நன்றாக ஆலோசித்து முடிவெடுத்த பின்பே செயலில் இறங்குவீர்கள். அதனால் செய்காரியங்கள் வெற்றியைத் தரும். எதிரிகளால் உங்களை வெல்ல முடியாது. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். குடும்ப உறுப்பினர்கள் மனதிற்கு இதமாக நடப்பர். பணவிடயத்தில் தட்டுப்பாடு இருக்கமாட்டாது. வார இறுதியில் கொடுக்கல் வாங்கலில் அவதானமாக இருக்காவிட்டால் கோடு, கச்சேரி என அலைய வேண்டியிருக்கும். மாணவர்கள் கல்வியில் அக்கறை காட்டுவர். வியாபாரிகளும், விவசாயிகளும் புதிய முதலீடுகளில் ஈடுபடுவர். அதிர்ஷ்ட நாள் புதன்.

### இடபம்

தொழிலில் அடிக்கடி தடைகள் வரும். அதைச் சளைக்காது முறியடிப்பீர்கள். மேலாளர் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பார். குடும்பத்தில் சிறுசிறு பிணக்குகள் வந்து மனதைப் பாதிப்புக்குள்ளாக்கும். நண்பர்கள், இனசனபந்துக்கள் உதவிகள் செய்வர். பணவிடயத்தில் தட்டுப்பாடு இராது. வார இறுதியில் பொருள் இழப்பு விபத்து என்பன நடக்கலாம். பகைவர்கள் தொந்தரவு தருவார்கள். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். மாணவர்கள் கல்வியில் அக்கறையின்றியிருப்பர். அரசியலில் உள்ளோருக்கு மனக்குழப்பம் உண்டாகும். விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் நட்டம் உண்டாக வாய்ப்புண்டு. அதிர்ஷ்ட நாள். வெள்ளி.

### விருட்சிகம்

அதிகாரிகளால் தொழிலில் சில பிரச்சினைகள் உருவாகலாம். பிடிவாதம், விதண்டாவாதம் ஆகியவற்றால் தொழிலில் பிரச்சினைகளும் அவமானங்களும் ஏற்படலாம். சலியாத முயற்சியுடன் செயற்பட்டு நல்ல நிலையை உருவாக்குவீர்கள். குடும்பத்திலும் பிடிவாதத்தில் சில பிரச்சினைகள் உருவாகி மனவேதனையைத் தரும். அதனால் வெறுப்பு உண்டாகும். பணவிடயத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டாலும் உறவினர் முன்வந்து உதவுவர். மாணவர்களின் கல்வியில் மந்தப் போக்குக் காணப்படும். அரசியலில் உள்ளோர் பெரிதாக எதையும் சாதிக்கமாட்டார்கள். விவசாயிகளும் வியாபாரிகளும் அவதானத்துடன் செயற்படல் வேண்டும். அதிர்ஷ்ட நாள் புதன்.

### மிதுனம்

தொழிலில் பிரச்சினைகள் இராது மகிழ்ச்சியும் இலாபமும் இருக்கும். மேலதிகாரிகள் நட்புடன் உதவுவர். பணத்திற்கு வாரமுற்பகுதியில் தட்டுப்பாடு ஏற்படும். வார பிற்பகுதியில் எதிர்பார்த்த பணம் வந்து சேரும். எனினும் வரவுக்கு மீறிய செலவுகள் வந்து சேரும். சகோதர வழியால் பணம் வந்து சேரும். வார முற்பகுதியில் தொழில் சம்பந்தமாகப் பிரயாணம் செய்யவேண்டிய நிலை உண்டாகும். பிரயாணத்தால் நன்மை உண்டு. மாணவர்களின் கல்வியில் முன்னேற்றம் உண்டு. அரசியலில் உள்ளவர்களை மக்கள் மதிப்பார்கள். வியாபாரிகளும் விவசாயிகளும் புதிய முதலீட்டின் மூலம் அதிக இலாபம் பெறுவர். அதிர்ஷ்ட நாள் வியாழன்.

### தனுசு

தொழிலில் அதிக அக்கறையுடன் செயற்பட்டு அதிக இலாபம் பெறுவீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்வொன்று நடைபெறும். அதற்காக அதிகம் பணச்செலவு ஏற்படும். எனினும் பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தினர் மிகவும் மகிழ்வுடன் பழகுவார்கள். பெரியவர்களின் ஆசியும் நல்லவர்களின் உதவியும் வாரம் முழுவதும் இருக்கும். ஆலய தரிசனத்திலும், புண்ணிய காரியங்களிலும் கவனம் செலுத்துவீர்கள். பலகாலமாக விடுபட்டிருந்த ஓர் உறவு, அல்லது பொருள் கிடைக்கும். மாணவர்களுக்கு உற்சாகமான வாரம். அரசியலில் உள்ளோர் புகழடைவர். வியாபாரிகளும், விவசாயிகளும் பெரும் இலாபம் பெறுவர். அதிர்ஷ்ட நாள் ஞாயிறு.

### கடகம்

மனம் ஒரு நிலையில் நில்லாமையால் தொழில் செய்யுமிடத்தில் சிறு சிறு பிரச்சினைகள் தோன்றி மனக்குழப்பத்தை உண்டாக்கும்.தேக நலன் பாதிக்கப்படும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். நண்பர்களிடம் கடன்பட வேண்டிய நிலை உண்டாகும். களியாட்டங்களிலும், ஆலய தரிசனத்திலும் ஈடுபட விரும்புவீர்கள். வெளியிடத்திலிருந்து வரும் செய்தி மனமகிழ்ச்சியைத் தரும். குடும்பத்தில் பிரச்சினைகள் இருப்பினும் மகிழ்ச்சிக்குக் குறைவிராது. மாணவர் கல்வியில் மேன்மை அடைவர். அரசியலில் உள்ளோர் மதிக்கப்படுவர். விவசாயிகளும் வியாபாரிகளும் அதிக இலாபம் அடைவர். அதிர்ஷ்ட நாள் ஞாயிறு.

### மகரம்

மன அமைதியின்மையால் அவதிப்பட்டு தொழில் நிலையில் பிரச்சினைகளை உருவாக்குவீர்கள். மேலாளரும் இனசனபந்துக்களும் பகைத்துக்கொள்வர். எதிர்பார்த்த பணம் எதிர்பார்த்தபடி கைக்கு வராமையால் கடன்பட வேண்டிய நிலை உருவாகும். நண்பர்கள் பணம் தரத் தயங்குவர். வார நடுப்பகுதியில் உடல் நலத்தில் அக்கறை செலுத்தவும். விபத்து பொருள் இழப்பு என்பன ஏற்பட இடமுண்டு. தாய் வழியால் உதவி கிடைக்கும். மாணவர்கள் சோம்பலால் கோட்டைவிடுவர். அரசியலில் உள்ளோர் அவதானமாக இருக்கவும். விவசாயிகளும் வியாபாரிகளும் கொள்முதலில் அதிக கவனம் செலுத்தல் வேண்டும். அதிர்ஷ்ட நாள் வியாழன்.

### சிங்கம்

மேன்மையான வாரம். தொழிலில் இருந்து வந்த தடைகளும் தாமதங்களும் நீங்கும். மேலதிகாரிகள் அன்புடன் உதவி செய்வார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். குடும்பத்தவர் விரும்பியதையெல்லாம் வாங்கிக் கொடுப்பீர்கள். பணம் தாராளமாகப் புழங்கும். பெரியவர்களின் ஆதரவு பெருகும். இனசன பந்துக்கள் உதவி செய்வார்கள். குடும்பத்தில் எதிர்பாராத சுபநிகழ்வொன்று நடந்து மன மகிழ்ச்சியைக் கொடுக்கும். மாணவர்கள் கல்வியில் பெரும் முன்னேற்றம் காண்பர். வியாபாரிகளும் விவசாயிகளும் புதிதாக முதலீடு செய்வர். பழைய முதலீட்டில் பெரும் இலாபம் கிடைக்கும். அதிர்ஷ்ட நாள் வெள்ளி.

### கும்பம்

சோம்பல் காரணமாகத் தொழிலில் அக்கறையின்மை காணப்படும். அதனால் மேலதிகாரிகளின் கண்டிப்புக்குள்ளாகுவீர்கள். நண்பர்கள் உறவினர்கள் கூட உங்களைத் தவறாகப் புரிந்துகொள்வர். அதனால் உதவிகள் செய்யத் தயங்குவர். குடும்பத்தில் சிறு சிறு சச்சரவுகள் தோன்றிப் பின்னர் தீர்ந்துவிடலாம். பணத் தட்டுப்பாடு, அளவுக்கதிகமான செலவும் ஏற்பட்டு மனக்குழப்பத்தை உண்டு பண்ணும் வார இறுதியில் தொழில் சம்பந்தமாகப் பிரயாணம் செய்யவேண்டிய நிலை, உருவாகும். மாணவர்கள் கல்வியில் அக்கறை காட்டார். விவசாயிகளும் வியாபாரிகளும் நட்டமடைவர். அதிர்ஷ்ட நாள் ஞாயிறு.

### கன்னி

மனவிரக்தி காரணமாகத் தொழிலில் அக்கறைகாட்டமாட்டீர்கள். எனினும் பணம் தாராளமாகப் புழங்கும். வரவுக்கேற்ற செலவுகளும் உண்டாகும். நினைத்த காரியம் ஒன்று வார இறுதியில் நடந்து முடிந்து மன மகிழ்வையும் சந்தேகத்தையும் தரும். குடும்பத்தில் அந்நியோந்நியம் அதிகரிக்கும். பொருள், காணி வாங்கும் வாய்ப்புக்கள் உண்டு. நல்ல முறையில் பயன்படுத்தலாம். கைவிட்டுச் சென்றதாகக் கருதிய பொருள் வந்து சேரும். மாணவர்கள் கல்வியில் அக்கறைகாட்டுவர்கள். அரசியலில் உள்ளோர் முன்னேற்றம் காண்பர். விவசாயிகளும் வியாபாரிகளும் பெரும் இலாபமடைவர். அதிர்ஷ்ட நாள் புதன்.

### மீனம்

தொழிலில் நல்ல முன்னேற்றம் உண்டு. இலாபம் அதிகரிக்கும். மேலாளர் நட்புரிமையுடன் உதவி செய்வர். எதிர்பார்த்த நற்செய்தி வார முற்பகுதியில் கிடைத்து மனதில் மகிழ்ச்சியை உண்டு பண்ணும். திட்டமிட்ட காரியங்கள் யாவும் எளிதில் நிறைவேறும். பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள் உதவி செய்வர். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பொருள் வாங்க, விற்கப்பட்ட பலன் உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பர். அரசியலில் உள்ளோர் சாதனை புரிவர். விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் பெரும் இலாபம் ஈட்டும் வாரம். அதிர்ஷ்ட நாள் வியாழன்.

# காதிலை பூ கந்தசாமி



## நோட்டீஸ் பலகை

நான் சொல்வதெல்லாம் பொய்
பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
– காதில பூ கந்தசாமி –

**வணக்கமுங்கோ! நம்முடைய பாட்டு வாத்தியாரிடம் போட்டு வாங்கிறதெண்டால் உங்களுக்குப் பிடிக்காமல் போகுமோ. பாட்டு வாத்தியாரிடம் எதைப்போட்டு எதை வாங்கினன் எண்டு பாருங்கோவன்.**

**கா.பூ:-** என்ன பாட்டு, லேட்டஸ்டாக வந்த பாட்டுக்களிலை என்ன பாட்டு உங்களுக்குப் பிடிச்சிருக்குது.

**பாட்டு:-** ஒண்டும் பிடிக்கயில்லை. இப்பவெல்லாம் என்ன பாட்டு எழுதிறாங்கள். வரியும் கேக்குதில்லை, இசையும் விளங்குதில்லை. எனக்கென்னவோ அந்தக்காலப் பாட்டுக்கள் தான் சூப்பர், அதிலையும் எத்தனை காலம் தான் ஏமாற்றுவர். இந்த நாட்டிலே எண்ட மாதிரிப் பாட்டுகள் எப்பவும் சூப்பர். என்ன சென்னாலும் ஓல்ட் இஸ் கோல்டுதானே.

**கா.பூ:-** உங்களைப் போய் நான் கேட்டேனே என்ன... “வெல்லாவி வச்சி வெளுத்தாங்களா, உன்ன வெயிலுக்கே காட்டாம வளத்தாங்களா, எண்டெல்லாம் என்ன ரசனையா பாட்டு வருகுது. உங்களுக்குப் புரியாது. அதை விடுங்கோ. எதிர்க்கட்சி சனங்களை தேங்காய் திருடர்கள் எண்டு சொல்லினமே, அதைப் பற்றி என்ன நினைக்கிறியள்.

**பாட்டு:-** ஆடு நனையுதெண்டு ஓநாய் அழுத கதைமாதிரி இருந்தாலும், நாட்டில விலைவாசி உயர்வும் மோசமாகத்தானே இருக்குது. தேங்காய் ஒண்டு 68 ரூபாய்க்குப் போகுது. இன்னொரு மூண்டு மாசத்தில 100 ரூபாய் விலை போனாலும் யார் கேக்க முடியும், விலை உயர்வடைந்தால் பதவியைத் துறக்கிறன் எண்டார் ஒரு அமைச்சர். அவரிண்ட சத்தத்தையே காணேல்லை. எரிபொருட்களின் விலையும் ஏறிக்கொண்டிருக்குது. எதிர்க்கட்சி சொல்லுவது போலை சனத்துக்குப் பிரச்சினைதான். ஆனால் அதை எதிர்க்கட்சி சொல்லுறதுதான் பிரச்சினை புரியுதோ.

**கா.பூ:-** புரியுது புரியுது... அப்படியெண்டால் யார் தான் சனங்களின்ர பிரச்சி னைய்யைப் பேசிறது.

**பாட்டு:-** யார் கேக்குறது எண்டு ஆகாயத்தைப் பார்க்கக் கூடாது. மக்களுக்குப் பிரச்சினையெண்டால் மக்களே கேக்க வேணும். எல்லாத்துக்கும் ஒருவன் தேவை எண்டு இருக்கக்கூடாது.

**கா.பூ:-** சரி... உந்த கிபிர் விமான விபத்துப் பற்றி ஒண்டும் சொல்லயில்லையே.

**பாட்டு:-** யாரும் எதிர்பார்க்காத விபத்துத்தான். அதையும் இரண்டு தரப்புக்கள் அரசியலாக்கின விதத்தை நினைத்தால் சிரிப்புத்தான் வருகுது.

எதிர்க்கட்சிகள் சொல்லிச்சினம், தாங்கள் அரசுக்கு எதிராக கொழும்பில நடத்தின பாரிய கண்டன ஆர்ப்பாட்டச் செய்தியை இல்லாமல் செய்யத்தான் விமான விபத்தைப் பெரிய பரபரப்புச் செய்தியாக அரசு கொண்டு வந்தது எண்டினம்.

மறுபக்கம், தமிழ் தேசியம் பேசிறவையோ அந்த விமானங்கள்தான் வன்னியில் தமிழ் மக்கள் மேலை குண்டு போட்டது எண்டும், இறந்து போன அந்த விமானி தான் தமிழ்ச்செல்வனைக் குண்டுபோட்டுக் கொலை செய்தவர் எண்டும் சொல்லி ஏதோ பழி தீர்த்துக் கொண்டதைப் போலச் சொல்லிச்சினம்.

யார் எப்புடிச் சொன்னாலும் நாட்டின்ர கோடிக்கணக்கான ரூபாய்கள் சில நிமிடங்களிலை எரிஞ்சு சாம்பலாகிட்டுது எண்டது மட்டும் உண்மை என்ன நினைக்கிறீர்.

**கா.பூ:-** சரிதான். போர்க்குற்ற விசாரணை விவகாரம் ரொம்ப இறுகிக்கொண்டு வருமாப்போலை இருக்குதே.

**பாட்டு:-** அதுக்கு நீர் ஏன் பயந்து கொண்டு கேக்குமாப்போலை கேக்கிறீர். குற்றம் செய்தவைதானே பயப்பிட வேணும். எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. எது நடக்க இருக்கின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கும். அதை ஒருபுறம் போடுங்கோ.

தங்களோடு பேசி தீர்வொண்டைக்காண முடிந்தால், தாங்கள் உந்தப் போர்க்குற்ற விசாரணையைப் பெரிதாக அலட்டிக்கொள்ள மாட்டோம் எண்ட கூட்டமைப்புச் சொல்லி இருக்குதுங்கோ.

உது என்ன கதையெண்டு தெரியல்லை. கறையான் புத்தெடுக்க நாகம் குடியேறின கதையாக, யாரோ உந்தப் பிரச்சினையை வெளியால தூக்கவும், அதைக் கொண்டு இவை அரசுக்கு டிமாண்ட் பண்ணினமாம் உது எடுபடுமோ.

**கா.பூ:-** உது நாள் வரைக்கும் உந்தக் கூட்டமைப்புக்காரர் சொன்னதில எது எடுபட்டிருக்கும். சும்மா கதைதான். ஏமாத்துப்பட்டிருக்கினம். சரி இந்த வாரம் இது காணும். அடுத்தவாரம் மிச்சத்தைப் பார்ப்போம்.

ஓ.கே...பாய்... பாய்.

யாவும் கலப்படமற்ற கற்பனை

## உலகை வியக்க வைத்தவர்கள்

### ஆகாயத்தில் பறந்த முதல்வர்



“பலூனில் மனிதனை வைத்து அனுப்பலாம்தான். அது தாங்கக் கூடியதும் கூட. ஆனால் அரசர் அதற்கு அனுமதி மறுத்துவிட்டார்” என்றார் மான்கோல்ஃபியர். பலூன் பறக்க விடுவதற்கான நாள் குறிக்கப்பட்டது. மக்கள் அந்த அதிசயத்தைக் காண ஆவலோடு காத்திருந்தனர். அந்தச் சோதனைப் பறப்புக்கு ஒரு வாரம் இருக்கும் திடீரென்று வீசிய பெரும் புயலில், உருவாக்கி இருந்த பலூன் சின்னாபின்னமாகி நாசமுற்றது. இதனால் மனம் தளர்ந்துவிடவில்லை எட்டினி. இரவும் பகலும் அயராது உழைத்துப் புதிய பலூனை உருவாக்கிவிட்டார். “இதை சோதித்துப் பார்க்கக் கூட நேரமில்லை. ஆனாலும் இது நன்றாகச் செயற்படும் என்று நம்புகிறேன்” என்றார் தம் உதவியாளர்களிடம் அவர்.



அந்த மகத்தான நாள் வந்தது. மக்கள் வெள்ளம் ஆர்வத்தோடு அந்த அதிசயத்தைக் காண வந்து கூடியது. பரந்த வெளியில் உயர்ந்த மேடை ஒன்று அமைக்கப்பட்டு, அதில் பெரும் தீ மூட்டப்பட்டது. கம்பங்களை ஆங்காங்கே நட்டு அதில் சக்கரங்களை இணைத்து, பெரிய பலூனின் கயிறுகளை அதில் மாட்டி இழுத்து தீயின் மேலாக, பலூனில் புகை புகும்படி தூக்கிக் கட்டினார்கள்.

[வியப்புக்கள் தொடரும்...]

## சவால்



இன்று பல உலக நாடுகள் ஏட்டிக்குப் போட்டியாக விண்வெளியில் தங்கள் சாதனைகளை நிகழ்த்தி வருகின்றனர். குறிப்பாக அமெரிக்கா, ஜப்பான், சீனா, ரஸ்யா, இந்தியா போன்ற நாடுகள் இந்த போட்டியில் களம் இறங்கி நிற்கின்றன. இவ்வாறான விண்வெளி ஆராய்ச்சியில் அமெரிக்கா முக்கிய இடம் பெற்றிருக்கிறது. இவ்வகையாக முக்கியமான விண்வெளி ஓடத்தை அமெரிக்கா அண்மையில் விண்வெளியில் செலுத்தியிருக்கிறது. இந்த விண்வெளி ஓடம். 45.4 மீற்றர் நீளமும் 3.6 மீற்றர் அகலமும் கொண்டது. 450,000 திரவ எரிபொருளை இந்த ஓடம் தாங்கிச் செல்லக கூடிய சக்தி கொண்டது. அத்துடன் செலுத்தப்பட்ட இந்த ஓடம் மீண்டும் பூமிக்கு வந்தால் அதனை மீளச் செலுத்த முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

## முதல்வன்



புதிய புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குவதில் ஜப்பானுக்கு நிகராக எந்த நாடும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இங்கு படத்தில் காட்டப்பட்டிருக்கின்ற வீடியோக் கமரா ஜப்பானால் உருவாக்கப்பட்டதுதான். மிகவும் நுட்பமான முறையில் புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி இந்தக் கமரா தயாரிக்கப் பட்டுள்ளது. அதாவது ஒரே தடவையில் துல்லியமான முறையில் ஒலி, ஒளிப்பதிவு செய்யும் ஆற்றல் இந்தக் கமராவுக்கு உண்டு. அத்துடன் முப்பரிமானத் தன்மை கொண்டதாகவும் இரண்டு வில்லைகளைக் கொண்டதாகவும் (லென்ஸ்) இது உருவாக்கப்பட்டுள்ளது. இதன் பெறுமதி 21,000 அமெரிக்க டொலர்கள் ஆகும்.

## காவலன்



வீட்டில் செல்லப் பிராணியாக வளர்க்கப்படும் பூனை, கோழிக்குஞ்சு, வாத்து, முயல் போன்றவற்றிக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியதாக நாய்கள் பொதுவாக காணப்படும். எனவே வீட்டுரிமையாளர்கள் நாயிடமிருந்து இந்த பிராணிகளை தள்ளியே வைப்பார்கள். ஆனால், பிரிட்டனில் ஒரு டேவ் என்ற நாய் இந்த செல்லப்பிராணிகளை அன்புடன் பராமரிக்கும் விசித்திரம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

டேவிற்கு 6 வயது இருக்கும் போது அதன் உரிமையாளர் அமன்டா கொலின்ஸ் தனது வீட்டிற்கு முயலொன்றைக் கொண்டு வந்தார். அம்முயலைக் கண்டவுடன் டேவ் அதன் அருகில் சென்று அம்முயலை தனது நாவினால் சுத்தப்படுத்த ஆரம்பித்தது என்று 25 வயதான அமன்டா குறித்து தெரிவித்துள்ளார்.

டேவ் தற்போது 7 வாத்துகள், 5 முயல்கள், 13 கோழிக்குஞ்சுகள் மற்றும் 5 முயல்கள், 13 பூனைகளுக்கு பல உதவிகளை செய்து வருகின்றது. இதில் புதிதாக பொரிக்கப்பட்ட கோழிக் குஞ்சுகளை இன்னும் கணக்கிடவில்லை.

பிரிட்டனின் மிகவும் உந்துதல் அளிக்கும் நாயாக டேவ் போட்டியொன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இணையத்தளம் மூலம் நடத்தப்பட்ட இப்போட்டியில் 600 நாய்கள் கலந்துகொண்டன. டேவ் 265,515 வாக்குகளைப் பெற்றது.

## பிரம்மாண்டம்



இங்கு காட்டப்பட்டுள்ள படத்தைப் பார்க்கும் போது எமக்கு சிரிப்புத்தான் வரும். இருந்தாலும் சிரித்துவிட்டு கீழே உள்ள விடயங்களை வசித்துப் பாருங்கள். எங்கள் ஊரில் அலுமாரிகள் சாதாரணமாக 5 அடி தொடக்கம் 7 அடிக்குள் தான் அடங்கும். அதன் உள்தோற்றமும் அந்தளவிற்கு ஏற்றவாறு தான் அமைக்கப்பட்டிருக்கும். இங்கு செக்குடியரசைச் சேர்ந்த ஜான் பில்லி என்பவர் உலகில் மிகப்பெரிய அலுமாரியை 2009ஆம் ஆண்டு உருவாக்கியிருந்தார். இது 6.06 மீற்றர் உயரமும் 4.07 அகலமும் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

## வளர்த்த கடா மார்பில் பாய்ந்தடா!



உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இலங்கை, இந்தியா, மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இந்தப் போட்டிகள் நடைபெற்று வருகின்றது. நாளுக்கு நாள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போட்டியினால் ரசிகர்கள் மத்தியில் கிண்ணத்தை வெல்லப் போகும் அணி எது என்ற ஏக்கம் தோற்றியுள்ளதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இருந்தாலும் பல முன்னணி அணிகள் இன்றும் களத்தில் தங்கள் சாதனையை நிலை நாட்டிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக இந்தியா, இலங்கை, அவுஸ்ரேலியா, பாக்கிஸ்தான்,

இங்கிலாந்து, நியுசிலாந்து போன்ற முன்னணி நாடு-களைக் குறிப்பிடலாம். இருந்தாலும் அவ்வப்போது பல அதிர்சித் தோல்விகளையும் இந்த அணிகள் சந்தித்துக் கொள்ளவேண்டிய நிலையும் காணப்படுகின்றது. மிகவும் முக்கிய போட்டிகள் சில வற்றை இங்கு குறிப்பிடலாம். அதாவது பாக்கிஸ்தான் – கனடா இணிகளுக்கிடையிலான போட்டி, இங்கிலாந்து– அயர்லாந்து அணிகளுக்கிடையிலான போட்டிகள்.பாக்கிஸ்தான் கனடாவிற்கெதிரான போட்டியில் வெற்றி பெற்றாலும் கனடாவின் சாதனை பாராட்டுக்குரியது தான். இந்த உலகக் கிண்ணப் பொட்டிகளில் பேசப்படுகின்ற மற்றுமொரு விடயம் இங்கிலாந்து அயர்லாந்துக் கிடையிலான போட்டி. கிரிக்கெட்டின் தாயகமாகிய இங்கிலாந்தை இம்முறை உலகக் கிண்ணப் போட்டியில் கத்துக்குட்டி அணியான அயரல்லாந்து அணி வெற்றிகொண்டு வரலாறு படைத்துள்ளது.

அயர்லாந்து அணி கடந்தமுறை உலகக் கிண்ணப் போட்டியில் கூட பாக்கிஸ்தானுக்கு அதிர்சி அளிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஒரு நாள் போட்டியில் அதிக அனுபவம் கொண்ட இங்கிலாந்து அணியை தோற்கடித்தது இலகுவான விடயமல்ல. ஆனால் அயர்லாந்து கெவின் ஒபிரெய்னின் அபார சாதனைச் சதத்தின் உதவ-ியுடன் இங்கிலாந்தை வெற்றி கொண்டது.

அயர்லாந்து அணி வீரர்களில் பெரும்பாலனவர்கள் இங்கிலாந்தின் பிராந்திய அணிகளில் விளையாடிய அனுபவத்தைக் கொண்டவர்கள். எனவே இந்த அனுபவத்தைச் சரியாகப் பயன்படுத்திய அயர்லாந்து தனது வெற்றியை உறுதி செய்து மற்றைய நாடுகளுக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதென்றே கூறவேண்டும்.



இப்பத்திரிகை 373, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை, கொழும்பு - 06 டிடி எண்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் மார்ச்-10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு


# தினமுரசு

THINAMURASU

யாழ் மக்களுக்காக... யாழ் மண்ணில்...
C/490
SPICE TRAVELS & TOURS (PVT) LTD®
IATA
412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)
Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2041 மாசி 26 வியாழக்கிழமை (10.03.2011) பக்கங்கள் IV ஓசை – 161

## வெள்ளைக்கொடி வழக்கு சாட்சியங்களின் பெயர்கள் நீதிமன்றத்தில் கையளிப்பு




(கொழும்பு)

வெள்ளைக்கொடி விவகார வழக்கில் அரசுக்கெதிராகத், தான் சாட்சியம் அளிக்கப்போவதாக முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வன்னியில் இடம் பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின்போது அரச படையினரிடம் சரணடையவந்த புலிகளின் முக்கிய தலைவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாகக் கூறப்படுவது குறித்த வழக்கு விசாரணையின்போது தனது வழக்கறிஞர் (iv பக்கம் பார்க்க)

## சிறிதரன் எம்.பி. மீதான தாக்குதல் பொய்யானது –விமல் வீரவன்ச



(கொழும்பு)


தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படும் செய்தி பொய்யானது என வீடமைப்பு பொதுவசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அவர் பயணித்த வாகனத்தின் டயர் மீதுதான் தாக்குதல் (iv பக்கம் பார்க்க)

## பொய்களை மெய்யாக்காதீர்கள்

# வன்முறையைத்தூண்டும் சொற்பிரயோகங்கள் ஒருவகையில் பயங்கரவாத நடவடிக்கையே!

## சபையில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்



(கொழும்பு)

**நாங்கள் அவசரகாலச் சட்டத்தை ஒரு போதும் அங்கீகரிக்கவும் இல்லை. வரவேற்கவும் இல்லை. ஆனால், தவிர்க்க முடியாமல், அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு ஆதரவளித்து வருகிறோம். அவசரகாலச் சட்டத்தை நீடிக்க வேண்டிய ஒரு அவசிய நிலை இந்த நாட்டிலே தொடர்வதே இதற்குக் காரணமாகும்.**

யுத்தமும் யுத்தத்தை நடத்தியவர்களின் அரசியலும் ஒரு காரணமாக இருந்ததுடன்,

இப்போது யுத்தம் முடிந்தாலும் வன்முறையைத் தூண்டும் விதமாக சில தரப்பினரின் அரசியல் அணுகுமுறைகளும் செயற்பாடுகளும் (iv பக்கம் பார்க்க)

## அவசரகாலச்சட்டம் மேலும் ஒருமாதம் நீடிப்பு

(கொழும்பு)

அவசரகால சட்டம் மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது. அவசர காலச்சட்டம் நீடிப்பு தொடர்பான வாக்கெடுப்பு நேற்று நாடாளுமன்றத்தில் இடம் இடம்பெற்றபோது 75 மேலதிக வாக்குகளால் அவசரகாலச்சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அவசரகாலச்சட்டத்திற்கு ஆதரவாக 90 வாக்குகளும், எதிராக 15 வாக்குகளும் வழங்கப்பட்டன. இந்த அவசரகாலச்சட்டநீடிப்புப் பிரேரணைக்கு எதிராக தமிழ்தேசியக் கூட்டமைப்பு யற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டமைப்பு ஆகியன வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## காணாமல் போவோர் இலங்கையிலேயே அதிகம்; ஐ.நா.வின் செயற்பாட்டுக் குழு தகவல்

(ஜெனிவா)

. காணாமல் போனவர்களின் தொகை இலங்கையிலேயே அதிகமாக இடம்பெற்றுள்ளதாக காணாமல் போனவர்கள் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

.ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் 16ஆவது கூட்டத் தொடரில் சாட்சியமளிக்கும் போது இலங்கையில் 80 சதவீதமான காணாமல் போன சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகத் தெரிவித்துள்ளது

இலங்கையில் ஆட்கள் காணாமல் போன சம்பவங்கள் குறித்து அங்கு சென்று விசாரணை நடத்த சந்தர்ப்பம் வழங்குமாறு விடுத்த கோரிக்கை தொடர்பாக இலங்கை அரசாங்கம் பதிலளிக்கவில்லை என ஆசிய சட்ட வளங்கள் மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர் (iv பக்கம் பார்க்க)

## இலங்கையின் சட்டதிட்டங்கள் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம்

(கொழும்பு)

இலங்கையின் தேசிய பாதுகாப்புச் சட்டம் மற்றும் பயங்கரவாத தடுப்புச் சட்டம் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் தீவிரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு குற்றம் நிரூபிக்கப்படாது இதுவரை தடுத்து வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கானவர்களை விடுதலை செய்யுமாறு சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருசிலர் இரகசியமான இடங்களில் வைத்து சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டோ அல்லது அவர் உயிரிழந்தோ இருக்கலாம் என சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், அண்மையில் கிடைக்கப்பெற்ற உத்தியோகபூர்வ அறிக்கைகளின் படி 1900க்கு மேற்பட்டவர்கள் எவ்வித நீதிமன்ற (iv பக்கம் பார்க்க)

## தமிழ்நாட்டில் புலிகளின் மூன்று பயிற்சி முகாம்கள்; பிரதமர் டி.எம்.ஜயரட்ன நாடாளுமன்றில் தெரிவிப்பு



(கொழும்பு)

புலிகளின் மூன்று இரகசிய பயிற்சி முகாம்கள் தமிழ்நாட்டில் செயற்பட்டு வருவதாக பிரதமர் டி.எம்.ஜயரட்ன நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் முக்கிய தலைவர்களைக் கொலை செய்வதற்கு இப் பயிற்சி முகாம்களில் விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும், பொட்டு அம்மானுக்கு நெருக்கமான புகழேந்திரன் என்பவரின் கண்காணிப்பின் கீழ் இப் பயிற்சி நிலையம் இயங்குவதாகவும் இது குறித்து அரசாங்கம் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, (iv பக்கம் பார்க்க)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க அமெரிக்கா 462 மில்லியன் நிதியுதவி

(கொழும்பு)

வடக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கான உணவு தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் 462 மில்லியன் ரூபாவை வழங்குவதற்கு தயாராக உள்ளதாக கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று அறிவித்துள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட 371,000 பேருக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்குவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டம் மற்றும் யுஸ்எயிட் போன்ற நிறுவனங்கள் ஊடாக இந்தத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் தூதரகம் அறிவித்துள்ளது.

இவ்வருட ஆரம்பத்தில் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமெரிக்காவால் வழங்கப்பட்ட 319 மில்லியன் ரூபா நிவாரண நிதிக்கு மேலதிகமாக, அமெரிக்காவினால் இந்நிதி வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் அமெரிக்காவால் கடந்த வருடத்தின் (iv பக்கம் பார்க்க)

# சமூகப்பாதுகாப்பு ஓய்வூதியத்தில் இணையாத முதியவர்கள் சலுகைக்கொடுப்பனவை இழப்பர்

(தொல்புரம்)

எமது சமூகத்தில் உள்ள 55 வயதுக்கு மேற்பட்ட வறிய மற்றும் நடுத்தர வருமானமுடையோர் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத்திட்டத்திற்குள் இணையத் தவறுவார்களாயின் எதிர் காலத்தில் அரசின் திறைசேரியினால் கிடைக்கின்ற மேலதிக கொடுப்பனவுகளை அவர்கள் இழக்கும் சாத்தியம் ஏற்படுமென இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் யாழ். செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்; 55 வயது அல்லது அதற்கு கூடிய வயதுடைய நபர் ஒருவர் தமது ஓய்வூதியத்திற்கு உரிய முதலீட்டுத் தொகையாக 22 ஆயிரத்து நூற்றி இருபத்தொரு ரூபாவை மாத்திரம் செலுத்தவேண்டும்.

மேலும் குறித்த நபர் அறுபது வயதை அடைந்ததும், மாதாந்தம் ஆயிரத்து ஐந்நூறு ரூபாவை ஓய்வூதியமாகப் பெற்றுக்கொள்வார்.

எனினும் இத்தகைய நபர் வங்கி ஒன்றில் இத்தொகையை முதலீடு செய்வாராயின், அவர் மாதாந்தம் பெற்றுக் கொள்ளக்கூடிய மாதாந்த வட்டி, முதிர்வுத் தொகைக்கு 297 ரூபா மாத்திரமே.

எனவே, சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத்திட்டத்தினூடாக மேலதிக கொடுப்பனவுகளை மக்கள் பெற்றுக் கொள்ள முடியும். எனினும் நீண்ட காலப் போக்கில் திறைசேரியினால் வயோதிபர்களுக்கு இவ்வாறு பெரியதொரு தொகையைச் செலுத்துவது சாத்தியமற்ற விடயமாகும். எனவே, சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்த வேண்டுமென அவ் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, பிரதேச செயலக பிரிவுகள் பலவற்றில் தவணைப் பணங்களைச் சீராக செலுத்தி முடிக்காமல் பலர் உள்ளதாகவும், அத்தகையவர்கள் தமது தவணைக் கட்டணத்தை பூரணமாகச் செலுத்தி முடிப்பதன் மூலம் ஓய்வூதியம் பெற உரித்துடையவர்கள் ஆவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (26)

## வவுனியாவில் 87,990 பேர் வாக்களிப்பர்

(வவுனியா நிருபர்)

இந்த மாதம் 17ஆம் திகதி நடைபெறவுள்ள வவுனியா மாவட்டத்தின் நான்கு பிரதேச சபைகளுக்குமான தேர்தலில் 87 ஆயிரத்து 990 பேர் வாக்களிக்கவுள்ளனர். மொத்தமாக 71 வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

வவுனியா தெற்கு தமிழ் பிரிவில் 48 ஆயிரத்து 477 வாக்காளர்கள் உள்ளனர். இவர்களுக்கு 33 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படும். 18 ஆயிரத்து 925 வாக்காளர்களைக் கொண்ட வெங்கலசெட்டிகுளத்தில் 17 நிலையங்களிலும், 9633 வாக்காளர்களுக்காக வவுனியா வடக்கு நெடுங்கேணியில் 12 இடங்களிலும், 9633 வாக்காளர்களைக் கொண்ட தெற்கு சிங்களப் பிரிவில் 9 இடங்களிலும் வாக்களிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படும் எனவும் வவுனியா மாவட்ட தேர்தல் உதவி ஆணையாளர் ஏ.எஸ். கருணாநிதி தெரிவித்தார்.

அனேகமான வாக்களிப்பு நிலையங்கள் அரசாங்கப் பாடசாலைகளில் அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (39)

## மெய்வல்லுநர் போட்டி

(அனலைதீவு)

அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு அதிபர் வீ. ஓங்காரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக, தீவக கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஐ. புவனேந்திரன், சிறப்பு விருந்தினராக ஊர்காவற்றுறைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். பாஸ்கரன், கௌரவவிருந்தினர்களாக ஓய்வுபெற்ற ஆசிரியை சுப்பையா மனோன்மணி, ஐ. நடராசா, ஆசிரியர்களான கௌரி கேதீஸ்வரநாதன், ச. விக்கினேஸ்வரி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## மெய்வல்லுநர் போட்டிகள்

(கிளிநொச்சி)

கிளி. வட்டக்கச்சி தெற்கு அ. த. க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் ஆ. உதயணன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமத்திரனும், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் க. முருகவேலும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (45)

(ஆனையிறவு)

ஆனையிறவு - தட்டுவன் கொட்டி, கண்ணகை அம்மன் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் வி. வேலானந்தம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டியில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி. சின்னராசா, கிராம அலுவலர் த. நந்தகுமார், தட்டுவன்கொட்டி கட்டளை அதிகாரி லெப்ரினன்ட் கேணல் டபிள்யூ. எம்.ஆர்.பி. வலிசுந்தராவும், கௌரவ விருந்தினராக கண்டாவளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ. ராஜகுலசிங்கம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தர வாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (R/017)


## தொடரும் இந்திய மீனவர் அத்துமீறல்; தென்னிலங்கை மீனவருடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் எதிர்வரும் 14,15 ஆம் திகதிகளில் தென்னிலங்கைக்குச் சென்று அங்குள்ள கடற்றொழில் சங்கப் பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளதாக யாழ்ப்பாணம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் எம். தவரெட்ணம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதும்கூட இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. தற்போது இந்தியாவின் தூத்துக்குடி மீனவர்கள் மன்னாரை அண்டிய பகுதிகளில் மீன்பிடிக்க வருகின்றனர். இது தொடர்பாக நாங்கள் தேசிய மட்டத்துக்குக் கொண்டு சென்று கடற்றொழில் அமைச்சரையும் சந்திப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம்.

அத்துடன் இச்சந்திப்புகளில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நீர்கொழும்பில் அமைந்துள்ள தேசிய மீனவர் ஒத்துழைப்பு என்னும் இயக்கம் இச்சந்திப்புக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது எனத் தெரிவித்தார். (21)

## யாழில் மீள்குடியேறிய முஸ்லிம்கள் சுழற்சி முறையில் உண்ணாவிரதம்!

(நமது செய்தியாளர்)

புத்தளத்தில் இருந்து யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறிய மக்கள் தமது அடிப்படைத் தேவைகளை அரசாங்கம் செய்து தரவில்லை எனத் தெரிவித்து சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

முஸ்லிம் மக்களின் இந்த உண்ணாவிரதம் தொடர்பாக மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் வினாயகமூர்த்தி முரளிதரன் கருத்துத் தெரிவிக்கையில்,

புத்தளத்தில் இருந்து யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறிய முஸ்லிம் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்கனவே செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அமைச்சுப் பிரதிநிதிகளை யாழ்ப்பாணம் அனுப்பி அவர்களின் குறைகளைக் கேட்டறியவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் இவர்களின் உண்ணாவிரதம் குறித்து உயர் அதிகாரிகளுக்கு அறிக்கை சமர்ப்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தீ பாசறை நிகழ்வு

(கொழும்புத்துறை)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ். சமூக செயற்பாட்டு மையத்தினால் 'பெண்களின் சமத்துவத்தை நிலைநிறுத்துவோம்' என்னும் கருப்பொருளில் பெண்களுக்கான தீ பாசறை நிகழ்வு நாளை மாலை 4.00 மணிக்கு நிறுவன இணைப்பாளர் ந. சுகிர்தராஜ் தலைமையில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சிறப்பு விருந்தினராக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மற்றும் UNICEF நிறுவன பிரதிநிதி அல்பிறட் முற்றி (Alfred Mutti) ஆகியோரும் கலந்து கொள்கின்றனர். (52)


**பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு**

## உப்பளங்களில் கடமையாற்றியவர்கள் பற்றிய தகவல் சேகரிப்பு

**மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள ஆனையிறவு உப்பளத்திற்கு, முன்அனுபவம் உள்ள வேலையாட்கள் சகல தரங்களிலும் தேவைப்படுகின்றனர். ஆகவே, வடமாகாண உப்பளங்களில் வேலை புரிந்தோர் (முன்னனுபவம் உள்ளவர்கள்) இவ் விண்ணப்பப் படிவத்தில் உள்ள விபரத்தை நிரப்பி கீழ் தரப்பட்ட முகவரிக்கு உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.**

முழுப்பெயர் : ................................................

முகவரி : ................................................

தொலைபேசி இல. : ................................................

பிறந்த திகதி : ................................................

இறுதியாக தொழில் செய்த இடமும் பதவியும் : ................................

கல்வித்தகைமைகள் : ........................................

உப்பளம் சார்ந்த அனுபவம் : ........................................

விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்தி செய்து 2011.03.20ம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்,

அனுப்ப வேண்டிய முகவரி:

**செயலாளர்,
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும்
சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு,
780, மருதானை வீதி, கொழும்பு - 10.**

(C/603)


**தினமுரசு குடும்பத்தினர் பங்குபற்ற முடியாது.**

**1) மார்ச் 11 ஆம் திகதி நடைபெறவுள்ள பங்களாதேஷ் மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டியில் வெல்லப்போகும் அணி எது?**

**2) இப்போட்டியிள் ஆட்டநாயகனாகும் வீரர் யார்?**

பெயர்: ................................................

முகவரி : ................................................

போ.இல : ................................................

விடைகள் : 01) ........................................

02) ........................................

**போட்டி இல: 21**

**தினமொரு பரிசுப் போட்டியில் வெற்றிபெற்றோர் விபரம் விரைவில் அறிவிக்கப்படும்**

**உங்கள் விடைகளை பின்வரும் விலாசங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலும் இடலாம்.**


**தினமுரசு காரியாலயம்
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.**

**தினமுரசு விளம்பரப்பணிமனை
M.P.C.S. கட்டடம்
127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

**விடைகளை 11 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவையுங்கள்.**


# 'வடக்கின் பெரும் போர்' இன்று ஆரம்பம்

**யாழ். மத்திய கல்லூரி**



அதிபர், பொறுப்பாசிரியர், பயிற்றுநர் ஆகியோருடன் அணி வீரர்கள்

**யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி**



அதிபர், பொறுப்பாசிரியர், பயிற்றுநர் ஆகியோருடன் அணி வீரர்கள்

வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படுகின்ற மூன்று நாட்களைக் கொண்ட இனிங்ஸ் போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

யாழ். மத்திய கல்லூரி அணிக்கும், சென் ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இப்போட்டி தேசிய ரீதியிலும் முதன்மை வாய்ந்ததுடன், மிகப் பெரும் பாரம்பரியத்தைக் கொண்டதாகும்.

105ஆவது தடவையாக நடைபெறவுள்ள இப்போட்டி, யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இன்று ஆரம்பமாகி, நாளை மறுதினம் வரை நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்த ஆண்டில் இரு பாடசாலை அணிகளும் சிறப்பான ஆட்டத்திறனுடன் காணப்படுவதாக ரசிகர்களுக்கு நல்லதொரு விருந்தாக இப்போட்டி அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எஸ்)

## தக்கவைக்கப் போராடுவோம்

### மத்திய கல்லூரி அணி பயிற்றுநர் சுரேஷ்மோகன்



(யாழ்ப்பாணம்)

கடந்த நான்கு ஆண்டுகளாக எமது அணி வெற்றிபெற்று வருகின்றது. அந்த நிலையை தக்கவைத்துக் கொள்ளக்கூடிய வகையில் எமது வீரர்கள் ஆட்டம் அமையும் என மத்திய கல்லூரி அணியின் பயிற்றுநர் எஸ். சுரேஷ்மோகன் தெரிவித்தார்.

105ஆவது 'வடக்கின் பெரும் போர்' என வர்ணிக்கப்படும் மூன்று நாட்களைக் கொண்ட இனிங்ஸ் போட்டி குறித்து நேற்று எமது செய்தியாளர் கருத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: இந்த ஆண்டில் இதுவரை நடைபெற்ற அனைத்து இனிங்ஸ் போட்டிகளிலும் எமது அணி வெற்றிபெற்றது. அத்துடன் ஒரு இனிங்சில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற அணி என்ற சாதனையையும் பெற்றுள்ளது. அத்துடன் தனிநபருக்கான அதிகூடிய ஓட்டச் சாதனையையும் எமது வீரர்கள் இந்தக் காலப்பகுதிக்குள் முடியடித்துள்ளனர்.

எனவே, நல்ல ஆட்டத்திறனுடன் வீரர்கள் உள்ளமையால், கடந்த நான்கு ஆணடுகளாக தொடர்ச்சியாகப் பெற்ற வெற்றியை தக்கவைத்துக்கொள்ளக்கூடிய வகையில் வீரர்களின் செயற்படு அமையும் என எதிர்பார்க்கின்றோம் என்றார். (எஸ்)

## கௌரவமான நிலையை எட்டுவோம்

### சென் ஜோன்ஸ் அணி பயிற்றுநர் லவேந்திரா

(யாழ்ப்பாணம்)



கௌரவமான நிலையைப் பெறக்கூடிய வகையில் எங்கள் ஆட்டம் அமையும் எனவும் அதற்காக எமது வீரர்கள் ஒருங்கிணைந்து விளையாடுவார்கள் எனவும் சென் ஜோன்ஸ் கல்லூரி அணியின் பயிற்றுநர் பி. லவேந்திரா தெரிவித்தார்.

105ஆவது 'வடக்கின் பெரும் போர்' என வர்ணிக்கப்படும் மூன்று நாட்களைக் கொண்ட இனிங்ஸ் போட்டி குறித்து நேற்று எமது செய்தியாளர் கருத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: 105ஆவது போட்டிக்கான அணி சம பலம் கொண்ட அணியாகும். அதற்கமைய எமது வீரர்கள் ஒருங்கிணைந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி போட்டியின் முடிவைக் கௌரவமான நிலைக்கு இட்டுச் செல்வார்கள் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. வீரர்களும் நல்ல ஆட்டத்திறனுடன் உள்ளனர். அதேவேளை, ரசிகர்களுக்கு நிச்சயம் நல்லதொரு விருந்தாக இந்தப் போட்டி அமையும் என்றே எதிர்பார்க்கின்றோம் என்றார். (எஸ்)

## தினமுரசு இந்தியா எதிர் நெதர்லாந்து SCORE CARD

மைதானம் : புதுடில்லி. திகதி : 09-03-2011

ICC Cricket World Cup 2011

நாணயச் சுழற்சி வெற்றி நெதர்லாந்து : முதலில் துடுப்பாட்டம்.

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) சிவார்சைன்ஸ்கி | b சாவ்லா | 28 |
| 02) பர்ரேஷி | lbw b யுவராஜ்சிங் | 26 |
| 03) கூப்பர் | c டோனி b நெஹ்ரா | 29 |
| 04) ரென் டுஷாட் | c சகீர்கான் b யுவராஜ்சிங் | 11 |
| 05) ஹெர்வேஷி | c ஹர்பஜன்சிங் b சாவ்லா | 11 |
| 06) ஷிடிறென்ற் | lbw b சகீர்கான் | 00 |
| 07) குறூத் | run out (சாவ்லா/டோனி) | 05 |
| 08) பொறேன் | c நெஹ்ரா b சகீர்கான் | 38 |
| 09) றுஹெர் | run out (ஹோலி/டோனி) | 08 |
| 10) முட்டாஸர் புக்காரி | b சகீர்கான் | 21 |
| 11) எம். சீலார் | not uot | 00 |
| உதிரிகள் | (b 6, lb3, w 2, nb1) | 12 |
| மொத்தம் | (all out : 46.4 ஓவர்கள்) | 189 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) வீ. சேவாக் | c ஹெர்வேஷி b எம். சீலார் | 39 |
| 02) சச்சின் டெண்டுல்கர் | c றுஹெர் b எம். சீலார் | 27 |
| 03) யூசுப் பதான் | c&b எம். சீலார் | 11 |
| 04) கௌதம் கம்பீர் | b முட்டாஸர் புக்காரி | 28 |
| 05) ஹோலி | b பொறேன் | 12 |
| 06) யுவராஜ்சிங் | not uot | 51 |
| 07) டோனி | not uot | 19 |
| 08) ஹர்பஜன்சிங் | | |
| 09) பி. சாவ்லா | | |
| 10) சகீர்கான் | | |
| 11) நெஹ்ரா | | |
| உதிரிகள் | (w4) | 04 |
| மொத்தம் | (5 W 36.3 ஓவர்கள்) | 191 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| சகீர்கான் | 6.4 | 20 | 03 |
| நெஹ்ரா | 05 | 22 | 01 |
| ஹர்பஜன்சிங் | 10 | 31 | 00 |
| சாவ்லா | 10 | 47 | 02 |
| யுவராஜ்சிங் | 09 | 43 | 02 |


| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| முட்டாஸர் புக்காரி | 06 | 33 | 01 |
| ரென் டுஷாட் | 07 | 38 | 00 |
| எம். சீலார் | 10 | 53 | 03 |
| பொறேன் | 08 | 33 | 01 |
| கூப்பர் | 02 | 11 | 00 |

05 விக்கெட்டுக்களால் இந்திய அணி வெற்றி. | ஆட்டநாயகன் : யுவராஜ்சிங்

## இந்திய அணி வெற்றி

நெதர்லாந்து அணிக்கெதிரான போட்டியில் இந்திய அணி ஐந்து விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. பத்தாவது உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் 25ஆவது ஆட்டம் நேற்று புதுடில்லியில் பகலிரவுப் போட்டியாக நடைபெற்றது.

முதலில் ஆடிய நெதர்லாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய இந்திய அணி 36.3 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக யுவராஜ்சிங் தெரிவானார்.



ICC Cricket World Cup 2011

### இன்றைய ஆட்டம்

இலங்கை எதிர் சிம்பாப்வே

மைதானம் : பல்லேகல

பகல் ஆட்டம்




அனுசரணையாளர்: சோனியா ஜுவல்லரி

ICC Cricket World Cup 2011

உங்கள் தங்க நகைத் தெரிவுகளை தரமாகவும் நவீன டிசைன்களில் உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்திட நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்


சோனியா ஜுவல்லறி

360/5, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

T.P. :- 077 355 2231

(C/474)

# சன் சீ கப்பலில் கனடாவுக்குச் சென்ற தமிழர் ஒருவரை நாடு கடத்த உத்தரவு



(ரொரன்ரோ)

சன் சீ கப்பலில் கனடாவுக்குச் சென்று அங்கு அரசியல் புகலிடம் கோரிய தமிழர் ஒருவரை நாடு கடத்துமாறு கனடாவின் குடிவரவு மற்றும் அகதிகள் சபை உத்தரவிட்டுள்ளது.

குறித்த நபர் புலிகள் அமைப்பின் உறுப்பின ராகச் செயற்பட்டமையை ஒப்புக்கொண்டதை அடுத்தே, அவரை நாடு கடத்துமாறு அந் நாட்டு குடிவரவு மற்றும் அகதிகள் சபை உத்தரவிட்டிருப்பதாக கனடா ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குற்றம் சாட்டப்பட்டுள்ள நபர் புலிகள் அமைப்பில் ஏழு வருட காலமாக உறுப்பினராக செயற்பட்டுள்ளதுடன், அந்த இயக்கத்தில் இருந்து விலகுவதற்கு முற்படவில்லை என கனேடிய குடிவரவு மற்றும் அகதிகள் சபை உறுப்பினரான மைக்கல் மைக் பாலென் தெரிவித்தார்

அத்துடன், இவர் கடற்புலிகளின் உறுப்பினராக இருந்தமையை ஒப்புக் கொண்டுள்ளதாகவும், 1994ஆம் ஆண்டு கடற்படைக் கப்பல் ஒன்றைத் தகர்க்கும் முயற்சியில் இவர் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சன் சீ கப்பலில் கனடாவுக்குச் சென்ற 492 பேரில் தீவிரவாத நடவடிக்கைகள், போர்க்குற்றங் கள் மற்றும் ஆட்கடத்தல்களில் தொடர்புடைய வர்கள் என கனேடிய அதிகாரிகளால் அடை யாளம் காணப்பட்ட 32 பேரில் குறித்த நபரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

(காரைநகர்)

காரைநகர்ப்பகுதியில் கிணற்றில் தவறிவிழ்ந்த பெண்ஒருவர் நேற்றுநண்பகல் சடலமாக மீட்கப்பட்டுள்ளன.

காரைநகர் -சிவகாமிஅம்மன்கோவிலடியைச் சேர்ந்த வடிவேலு மனோன்மணி (வயது-60) என்பவரே கிணற்றில் தவறிவிழ்ந்து மரணமான வராவார். கண்பார்வை குறைந்தநிலையிலேயே இவர் தவறுதலாக கிணற்றில் வீழ்ந்ததாகத் தெரிவிக்கப் படுகிறது. சம்பவ இடத்துக்குச் சென்ற ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஜோய்மகிழ் மகாதேவா சடலத்தைப்பார்வையிட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக் குமாறு உத்தரவிட்டார் (50)

# சவூதி அரேபியாவில் இலங்கைப் பணிப் பெண் கொலை

(ரியாத்)

சவூதி அரேபியாவில் இருவருட சேவைக் காலத்தை நிறைவு செய்த இலங்கைப் பணிப்பெண் ஒருவர் அவரின் சவூதி வேலை வழங்குனரால் கொலை செய்யப்பட்டுள்ளதாக சவூதி அரேபியாவிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

பவானிதேவி சின்னையா எனும் 36 வயதான இப் பெண், அல் ஜோவ் மாகாணத்தின் அல் குவாரியாட் நகரில் பணியாற்றி வந்த போது, ஜனவரி மாதம் 19ஆம் திகதி மர்மமான முறையில் அவர் இறந்திருந்தார். இது தொடர்பாக அவரின் சவூதி அனுசரணையாளரை சவூதிப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இப் பெண் கொலை செய்யப்பட்டுள்ளார் என பிரேத பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ரியாத் நகரிலுள்ள இலங்கை இராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இக் கொலைக்கான நோக்கத்தை கண்டறிவதற்காக விசாரணைப் பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.இரு வருட சேவைக்காலம் முடிந்து சரியாக ஐந்து மாதங்களின் பின் அவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கன்டர் வாகனம் மதிலுடன் மோதி விபத்து

யாழ்ப்பாணம்- பாண்டியன் தாழ்வுப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் கன்டர் வாகனம் ஒன்று முற்றாக சேதமடைந்துள்ளது. வாகனத்தைச் செலுத்திவந்த சாரதி மயிரிழையில் உயிர்தப்பி யுள்ளார். இந்தச்சம்பவம் நேற்று இரவு 8.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது. யாழ் பிரதான வீதியூடாக பாண்டியன் தாழ்வுக்குச் சென்று கொண்டிருந்த கன்டர் வாகனம் ஒன்று கடற்கரைச் சந்தியில் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து அருகில் உள்ள மதில் ஒன்றுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் கன்டர் வாகனத்தின் முன் பக்கம் முற்றாக சேதமடைந் துள்ளதுடன், வாகனத்தைச் செலுத்தி வந்த சாரதி எதுவித காய முமின்றி மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார். (52)

## வன்முறையைத்...

இருப்பதாக அவசர காலச்சட்ட நீடிப்புத்தொடர்பான விவாதத்தில் நேற்று உரை நிகழ்த்திய நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திர குமார் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் மேலும் தெரிவிக் கையில்:

வன்முறையோ வன்முறைச் சூழலோ வன்முறைக்கான காரணிகளோ இருக் கும் வரை அரசாங்கம் அதை முறியடிப் பதற்கான வழிமுறைகளைப் பற்றிச் சிந்திக்கும். இதில் எவர் ஆட்சியில் இருந் தாலும் இதுதான் நிலைமை. அப்படிச் சிந்திக்கும்போது அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது என்பது தவிர்க்க முடியாம லிருக்கும்.

வன்முறை என்பது தனியே ஆயுதம் தூக்குவதனால் மட்டும் உருவாகிவிடுவ தில்லை. வன்முறையைத் தூண்டும் சிந் தனைகள், வன்முறையை உள்ளடக்க மாகக் கொண்ட வார்த்தைகள், வன் முறைக் கருத்தியல் எல்லாமே அமை திக்கு எதிரான செயற்பாடுகள்தான். ஒரு வகையில் இது ஒரு பயங்கரவாத நடவ டிக்கையே எனத் தெரிவித்த சந்திர குமார்,எம்பி. இவ்வாறான ஒரு அரசியலை முன்னெடுத்துக் கொண்டு அதாவது, பகையை வளர்க்கும் விதமான அரசி யலை முன்னெடுத்துக் கொண்டு அமை தியைப் பற்றியும் ஜனநாயகத்தைப் பற்றி யும் நாம் சிந்திக்க முடியாது. என்பதை நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம். ஜனநாயகத்தை நாம் விரும்புகிறோம் என்றால் முதலில் ஜன நாயகத்தை மதிக்க வேண்டும். அதைப் பேணவேண்டும்.

ஆனால், பலரும் இருக்கின்ற ஜனநாயக உரிமைகளை வைத்துக் கொண்டு அதற்கெதிரான நடவடிக் கைகளையே செய்கின்றனர். இது ஜனநாயக துஷ்பிர யோகமாகும் என்றும் தெரிவித்தார்.

என்னதான் பொய்களை மெய் யாக்க முனைந்தாலும் வரலாற்றில் அது வெற்றிபெறாது. கடந்த கால் நூற் றாண்டுகாலமாக தமிழ்க் கருத்துலகம் உருவாக்கிய அதிதீவிர நிலைப்பாடுகள் இன்று தோல்வி கண்டு விட்டன.

அத்துடன் அந்தக் கருத்துலகம் பெரும் அழிவுகளையும் ஏற்படுத்தி விட்டது. இன்று தமிழ்மக்கள் பெரும் அரசியல் நெருக்கடிக்குள் நிற்கிறார்கள் என்று இவர்களே சொல்லிவருகிறார்கள்.

எங்களின் மீது விமர்சனங்களை முன்வைக்கிறார்கள். இதுதான் வேடிக் கையானது. ஆனால், நாம் எத்தகைய விமர்சனங்களையும் எதிர்கொள்ளத் தயாராகவே இருக்கிறோம். அதே வேளை அபாண்டமான குற்றச்சாட்டு களை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம். ஆனால், எமது நிலைப்பாட் டையும் எங்களின் செயற்பாடுகளையும் மக்கள் நன்றாக அறிவர். அதனால்தான் எல்லாவகையான பொய்ப் பிரசாரங் களின் மத்தியிலும் எங்களின் ஆதர வுத்தளம் வலுவடைந்து வருகிறது.

ஏற்கனவே இருந்ததை விடவும் கூடியதொரு ஜனநாயகச் சூழல் இப் போது ஏற்பட்டுள்ளது. இந்தநிலையை நாம் மேலும் வளர்த்தெடுக்க வேண்டும். இதை வளர்த்தெடுத்தால்தான் சமூகங் களுக்கிடையிலான பாதுகாப்பும் நல்லி ணக்கமும் உரிமைகளும் பேணப்படும். அத்துடன் முழுமையான அபிவிருத்தியும் ஏற்படும்.

ஆகவேதான் நாம் அமைதியையும் ஜனநாயகத்தையும் மிகவும் ஆழமாக வலியுறுத்துகிறோம்.

மக்களின் மன உணர்வுகளுக்கு அப்பால் நாம் அரசியல் கோட்பாடுகளை யும் அரசியல் நிலைப்பாடுகளையும் முன்வைத்துப் பேச முடியாது.

இன்று யாழ்ப்பாணத்தில் எவ்வ ளவோ முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இடையில் நடந்த சில அசம்பாவிதங்கள் இன்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அங்கே அமைதியை நிலைநிறுத்த வேண்டும் என்ற அரசாங்கத்தின் கவ னத்தை இங்கே நான் பாராட்டுகிறேன் எனத் தெரிவித்ததுடன், அப்படியிருந்தும் அங்கே நடந்த சில விடயங்களை ஊதிப் பெருப்பித்து அதில் அரசியல் ஆதாயம் தேட முற்படும் சக்திகளையும், வன் முறையை வளர்த்து அந்தப் பரபரப்பில் ஆதாயம் தேட முற்படும் ஒரு சில பத்திரிகைகளையும் நாம் தொடர்ந்து கண்டிக்கிறோம்.

இத்தகைய செயற்பாடுகள் உண்மை யில் மக்களுக்கு விரோதமானவை மட்டுமல்ல, அந்தத் துறைசார்ந்த அறி வியற் கோட்பாடுகளுக்கும் எதிரானவை யாகும் என்றும் தெரிவித்தார்.

வரலாற்றிலிருந்து பாடங்களைப் படித்துக் கொண்டால் பல பிரச்சினைகள் தானாகவே தீர்ந்து விடும். நமது கடந்த காலம் என்பது ஒரு மகத்தான வரலாறா கும். அது ஏராளம் நெருக்கடிகளையும் துயரங்களையும் தன்னுடைய அகத்தில் கொண்டது.

எனவேதான், நாங்கள் எங்கள் அரசி யற் பயணத்தின் வழியாக பெற்றுக் கொண்ட அறிவின் வழியாக செயற்படு கிறோம். இதை இந்த அரங்கில் பதிவு செய்வதில் நான் பெருமையடைகிறேன் என அவர் தெரிவித்தார்.

## இலங்கையின்..

விசாரணைகளும் இன்றி இலங்கை அரசாங்கத்தினால் தடுத்து வைக்கப் பட்டுள்ளதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் பிரபல்யமான ஒருசில ஊடகவியலாளர்களும் கூட தீவிரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அதேவேளை, தீவிரவாதிகளாக சந்தேகப்படுபவர்களின் உடைமைகளை சீல் வைக்கவும், பரி சோதனை செய்யவும், அவர்களைத் தடுத்து வைக்கவும் இலங்கைப் பொலி ஸார் மற்றும் படைத்தரப்பினருக்கு ஆணையின்றி செயற்படும் அதிகாரம் இச் சட்டங்களின் ஊடாக வழங்கப்பட் டுள்ளதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை யின் ஆசிய பசுபிக்பிராந்திய பணிப் பாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## வெள்ளைக்கொடி...

மூலமாக சரத்பொன்சேகா இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இவ். வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, புலிகளின் தலை வர்கள் கொல்லப்பட்டமை தொடர்பான விசாரணையின்போது தான் உட்பட 10 பேர் சாட்சியம் அளிக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வெள்ளைக் கொடி விவ காரம் தொடர்பான வழக்கில் சரத் பொன்சேகாவிற்கு ஆதர வாக சாட்சி யம் வழங்க உள்ள வர்களின் பெயர்ப் பட்டியல் நேற்று கொழும்பு உயர்நீதி மன்றத்தில் சரத் பொன்சேகா வின் சட்டத்தரணி நலின் லத்து ஹெட்டியி னால் சமர்ப்பிக்கப்பட் டுள்ளது.

இவ்வாறு மன்றில் சமர்ப்பிக் கப்பட டுள்ள சாட்சியாளர்கள் பட்டியலில் சரத் பொன்சேகா, நாடாளுமன்ற உறுப்பினர்க ளான கரு ஜயசூரிய, மங்கள சமரவீர மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோ ரின் பெயர்கள் குறிப் பிடப்பட்டுள்ளன.

அத்துடன் பேராசிரியர் ஹேஸ்லி ஹல்பே, உயர் நீதிமன்றத்தின் பதிவாளர், மேல் நீதிமன்றத்தின் பதிவாளர் மற்றும் பத்திரி கைச் சபையின் செயலாளர் உட்பட 10 பேர் சாட்சியாளர்களாகக் குறிப்பிடப்பட் டுள்ளனர்.

நேற்று மன்றில் சமர்ப்பிக்கப் பட்டு, சாட்சியாளர்களிடம் சாட் சிகளைப் பெறு வது தொடர் பான தீர்மானம் எதிர்வரும் 30ஆம் திகதி எடுக்கவுள்ளதாக கொழும்பு மேல் நீதிமன்றத்தின் நீதியரசர்கள் குழு அறிவித்துள்ளது.

## பாதிக்கப்பட்ட...

பிற்பகுதியிலும் இவ் வருட ஆரம்பத் திலும் உணவு வழங்குவதற்கான உதவி யாக இலங்கைக்கு பெருமளவு நிதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காணாமல்..

பிரகீத் ஹெக்நேலியகொட, மனித உரிமை செயற்பாட்டாளர் பட்டாணி ராசின் ஆகியோர் காணாமல் போனமை குறித்து ஆசிய சட்ட வளங்கள் மத்திய நிலையம் விடயங்களை முன்வைத்துள் ளது.

## தமிழ் நாட்டில்...

இந்திய அரசியல் தலைவர்களைக் கொல்வதற்கு புலிகள் திட்டமிட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்த போது, தமிழகத் தில் புலிகளின் பயிற்சி முகாம்களோ அல்லது அவர்களின் நடவடிக்கைகளோ இல்லை என தமிழ்நாட்டு பொலீஸ் அத்தியட்சகர் லத்திகா சரண் தெரிவித் திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து இலங்கையிலும் சிறுசிறு தாக்குதல்களையும் நடத்துவ தற்கு இவர்கள் திட்டமிட்டுள்ளார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

## சிறிதரன்...

மேற்கொள்ளப்பட்டுள்ளதே தவிர அவர் மிது தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படும் செய்தி பொய்யானது என் பதை நான் சுட்டிக்காட்ட விரும்பு கின்றேன்

அத்துடன் சுயநல அரசியல் தேடும் நோக்கத்தில் தேவையற்ற முறையில் புனைகதைகளை கட்டவிழ்த்து மக்கள் மத்தியில் அனுதாபத்தைத் தேட இவர் கள் முனைகின்றார்கள் என்றார்.அத்துடன் இவ்வாறான செய்திகளை வெளியு லகிற்குச் சொல்லி அரசாங்கத்திற்கு எதிராக செயற்படும் நாடுகளுக்கு மேலும் பலமூட்டவே இவர்கள் முற்படுகின்றார் கள் என விமல் வீரவன்ச தெரிவித்தார்

அதேவேளை சஜித் பிரேமதாச பயணம் செய்த வாகனத்தின் கண்ணாடி மீது இது போன்ற தாக்குதல் இடம்பெற் றுள்ளது அதுவும் அரசியல் கபட நாடகம் என்பதை இங்கு தான் சுட்டிக்காட்ட விரும்புவதாக அவர் தெரிவித்தார்.

ஜெனிவா நகரில் இடம்பெறும் மனித உரிமைகள் சம்மேளனத்தில் அரசாங் கத்திற்கு எதிராக செயற்படும் நாடு களுக்கு மேலும் பலமூட்டவே இவர்கள் இவ்வாறு செயற்படுகின்றனர் என விமல் வீரவன்ச தெரிவித்தாக இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இப்பத்திரிகை இல. 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மார்ச் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.